REGD No. M. 7277
தமிழ்நாடு அரசாங்க
1968



# இந்திய உலக வர்த்தக, தொழில் பொருட் காட்சி

ஜனவரி ௨1 முதல் பிப்ரவரி 25 வரை

# கிராமநலம்

பிப்ரவரி - 1968





இந்திய உலக வர்த்தக தொழில் பொருட்காட்சி —திறப்பு விழா —>

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் —ஏர்முனை விழா



தமிழகத்திற்கு மைசூர் மாநிலம் 300 மிலியன் யூனிட் மின்விசை வழங்கும் . . .



# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 பிப்ரவரி 1968 நெல் 5

# பசி, பிணி, பகை அற்ற திருநாடே நமது இலட்சியம்.

[மேதகு தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங்]

''உறுபசியும், ஓவாப்பிணியும், செறுபகையும்
சேராது இயல்வது நாடு''

''தமிழக மக்களுக்கு—இளைஞர்களுக்கும், முதியவர்களுக்கும்—ஒளிமிக்க எதிர்காலம் அவர்களை எதிர்நோக்கி நிற்கிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். எல்லாத் துறைகளிலும் சீரான முன்னேற்றம் காண, அமைதியான சூழலும், கட்டுப்பாடான போக்கும் கடினமான உழைப்பும் இன்றியமையாதன என்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர் என்பதில் எனக்கு ஐயப்பாடில்லை. பெருமைக்குரிய இம்மாநில மக்களனைவரும்—எச்சமயத்தினராயினும், எச்சாதியினராயினும், எம்மொழியினராயினும்—நலமுடன் முன்னேறுவதற்கு வழிவகுக்கும் முறையில், நல்லதொரு சூழ்நிலையைப் பேணி வளர்ப்பதே நமது முயற்சியாக இருத்தல் வேண்டும். நாம் அனைவரும், எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருப்பினும், வள்ளுவப் பெருந்தகை இயம்பியுள்ளது போன்று, பசியும் பிணியும் பகையும் அற்ற ஒரு இலட்சிய மாநிலமாக நமது மாநிலத்தை உருவாக்க வேண்டுமென்பதுதான், நம் அனைவருடைய குறிக்கோளாகும்.''

தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவையில் மேதகு தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் 10—2—68 அன்று கூட்ட மன்றத் தொடரினைத் துவக்கி வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தலைப்பில் உள்ள திருக்குறளை ஆளுநர் அவர்கள் தமிழிலேயே கூறியது, குறிப்பிடத்தக்க அம்சமாகும். தமிழக அரசின் கொள்கையினை ஆளுநர் தன் உரையில் தெளிவாகவும் அழுத்தமாகவும் எடுத்துக்கூறியுள்ளார். அவருடைய உரையின் சாரம் இங்கே தரப்பட்டுள்ளது :—

''அரசும் கூட்டுறவுத் துறையும் வழங்கும் நிதி வசதிகள் தவிர, வேளாண்மை வளர்ச்சிப் பணிகளுக்கு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் நிதி வசதிகளையும் ஒன்று திரட்டுவது அவசியமாகும். இந்த கருத்தில்தான் ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் உபரி நிதிகளைக் கொண்டு டிராக்டர்கள், ஏனைய வேளாண்மைக் கருவிகள்

---

முதல் அட்டைப்படம் : ஆழ்கடல் மீன் பிடிப்புத் திட்டம்—விவரம் 7-ம் பக்கம் பார்க்க.

இரண்டாவது அட்டைப்பட விளக்கம் :

மேலே : இந்திய உலக வர்த்தகத் தொழில் பொருட்காட்சியை, இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு வி. வி. கிரி அவர்கள் 21-1-68-ல் திறந்து வைத்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

நடுவில் : திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்ற ''ஏர்முனை விழாவில்'' மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு எஸ். மாதவன் கலந்து கொண்டார். மாண்புமிகு அமைச்சர் இயந்திரக் கலப்பையை இயக்கும் காட்சியைப் படத்தில் காணலாம். [கட்டுரை : 21-ம் பக்கம் பார்க்கவும்.]

கீழே : தமிழகத்திற்கு மைசூர் மாநிலம், 300 மிலியன் யூனிட்டுகள் மின்விசை வழங்குவதற்கான உடன்பாடு ஒன்று, 22-1-68-ல் கையெழுத்தாயிற்று. திட்டக்குழு உறுப்பினர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களையும், திரு ஆர். திருமலை ஐ.ஏ.எஸ். (பொதுப் பணித்துறைச் செயலாளர்), அவர்களையும் படத்தில் காணலாம்.

## கூட்டுறவுப் பணிச் சீரமைப்பு—

இவற்றை வாங்கி உழவர்களுக்கு எளிய வாடகை விகிதங்களில் கொடுக்க பயன் படுத்திக் கொள்ளலாமென்று அரசாங்கம் ஏற்கெனவே அவைகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டங்களுக்காக அரசாங்கம் செய்துள்ள வசதிகளை இது பெருக்குவதோடு, நவீன வேளாண்மைக் கருவிகளைப் பயன்படுத்தும் வசதிகளை உழவர்களின் வீட்டு வாயிற்படியிலேயே ஏற்படுத்திக் கொடுக்கவும் வகை செய்துள்ளது.

**நீர் வளத் திட்டங்கள்**

நமது மாநிலத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் பணியை ஆய்வதற்கென்று ஒரு குழுவினை அமைப்பதற்கான அரசின் செயற்குறிப்புகள் பற்றி என்னுடைய கடந்த உரையில் குறிப்பிட்டிருந்தேன். நிறுவனங்கள் வழங்கும் கடன் உதவியை, இதற்கு முன் பெற்று வந்ததை விட அதிக அளவில் பெறுவதற்கு அரசு இப்போது முடிவு செய்திருப்பதால் அத்தகைய ஆய்விற்கான தேவை மேலும் பெருகி இருக்கிறது. எனவே நமது மாநிலத்தில் கூட்டுறவு இயக்கத்தின் பணியை ஆய்ந்து செவ்விய வழிகளில் அதனைச் சீர்திருத்துவதற்கும், சீரமைப்பதற்குமான செயற் குறிப்புகளைத் தயாரிப்பதற்காக திரு கே. சந்தானம் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவினை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. குறிப்பாக, இக்குழு கூட்டுறவு நிறுவனங்களுக்கு நடக்கும் தேர்தல் குறித்தும், கூட்டுறவு நிறுவனங்களின் அமைப்பு குறித்தும் கூட்டுறவு சட்டத்தின் விதித் துறைகளில் செய்யவேண்டிய மாறுதல்களைப் பற்றியும் விரைந்து இடைக்கால அறிக்கையொன்று அனுப்புமாறு வேண்டப்படும். இக்குழு செய்யவிருக்கிற பரிவுரைகளை அடிப்படையாகக் கொண்டு, கூட்டுறவு நிறுவனங்கள் குறித்துச் செய்யப்படும் சீர்திருத்தங்கள், நமது கிராமப் பொருளாதாரத்தை வளர்ப்பதில் இம் மாநிலத்திலுள்ள கூட்டுறவு இயக்கம் மேலும் பயன் தரும் முறையில் பங்கு பெறுவதற்கு உதவியாய் இருக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.



மேதகு தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங்.

மிகு பயன் தரும் தானிய ரகத் திட்டமும், உர வகைகளை அதிகமாய் பயன்படுத்தும் திட்டமும், பாசனவசதிகள் நிலையாகக் கிட்டினால் தான் உரிய பலன்தர முடியும். பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களின் கீழ், பாசன வசதிகளை விரிவுபடுத்தும்வாய்ப்பு குறைந்திருப்பதால், நிலத்திற்கு அடியிலுள்ள நீர் வளங்களைப் பயன்படுத்தும் திட்டங்களுக்கு அரசாங்கம் முக்கியத்துவம் அளித்திருக்கிறது. கிணறுகள், குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இவற்றைத் தோண்டுவதற்கான பெரியதோர் திட்டத்தின் வாயிலாகவும், இறவைப் பாசனத்திற்கு மேலும் மின்சார வசதி அளிக்கும் திட்டத்தின் வாயிலாகவும் மட்டுமே வேளாண்மை உற்பத்தியை பெருமளவில் உயர்த்த முடியும். திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட குறைந்த நிதி வசதிக்குள் இத்தகைய வேலைத்திட்டம் ஒன்றை நிறைவேற்றுவது இயலாதென்பதை உணர்ந்து, 20 கோடி ரூபாய் அளவிற்குச் சிறப்பு உதவி அளிக்குமாறு இந்திய அரசிற்கு எழுதினேம். சிறு பாசனத் திட்டங்களுக்குக் கூடுதலாகச்

## திரு கே. சந்தானம் தலைமையில் ஆய்வுக் குழு

செலவிடுவதற்கேற்ப, உணவு உற்பத்தி அதிகரிப்பதனுல், பண வீக்கம் ஏற்படாது என்பதை உணர்ந்திருக்கவேண்டியிருப்பினும், இந்திய அரசு நமது வேண்டுகோளை ஓரளவுக்குக் கூட ஏற்கவில்லையென்பது வருந்தத்தக்கதாகும்.

**உழவர்களுக்குக் கடன் வசதிகள் :**

1965-66-ல் சுமார் 30,000 விசையேற்றங்களுக்கும், 1966-67-ல் 33,000 விசையேற்றங்களுக்கு மட்டுமே மின் வசதி அளிக்கப்பட்டிருக்க, நடப்பு ஆண்டில் கிட்டத்தட்ட 42,000 விசையேற்றங்களுக்கு ஏற்கெனவே மின் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை மின் இணைப்பு தரப்பட்டுள்ள விசையேற்றங்களின் எண்ணிக்கை 3·31 லட்ச அளவில் அமைந்துள்ளது. புதிய கிணறுகள் தோண்டுவதற்கும், எண்ணெய்ப் பொறிகளையும், விசையேற்றங்களையும் வாங்குவதற்கும் வேண்டப்படும் கடன்களை வழங்குவதற்கு அரசு தனது நிதி வரம்பிற்கு ஏற்ப முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. உழவர்களின் உடன் தேவைகளை முற்றிலும் நிறைவேற்ற வேண்டுமென்றுல், ரிசர்வ் பாங்கி, ஆயுள் காப்புறுதிக் கழகம் (Life Insurance Corporation) வேளாண்மை மறு கடன் உதவிக் கழகம் (Agricultural Refinance Corporation) வர்த்தக வங்கிகள் போன்ற நிறுவனங்கள் இத் திட்டங்களுக்காக அளிக்கும் நிதி வசதிகளை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அரசு உறுதியாக நம்புகிறது.

ஆயினும், இந்த நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் உதவிகளை அரசு பெற இயலாது. இவற்றை மத்திய நில அடைமான வங்கியின் மூலமாகவும், நில அடைமான வங்கிகளின் மூலமாகவும் மட்டுமே பெற முடியும். வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு இத்தகைய நிறுவனங்கள் அளிக்கும் கடன் உதவியில் தனக்குரிய பங்கைப் பெறும் வாய்ப்பினை நழுவ விடக்கூடாது என்று அரசாங்கம் கருதுகின்றது. இதற்கென இந்திய அரசாங்கமும், திட்ட ஆணைக்குழுவும் தெரிவித்துள்ள மாநில அரசு மத்திய அரசிடமிருந்து இணை உதவியைப் பெற்று மத்திய நில அடைமான வங்கிகளின் கடன் பத்திரங்களின்மீது, இதற்கு முன் முதலீடு செய்துவந்த அளவைக்காட்டிலும் பெருமளவில் முதலீடு செய்யும். இதனுல் மத்திய நில அடைமான வங்கி, மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த கடன் உதவும் நிறுவனங்களிடமிருந்தும் ஏனைய வர்த்தக வங்கிகளிடமிருந்தும் கிடைக்கும் நிதி வசதிகளில் தமக்கு உரிய பங்கினைப் பெறுவதற்கு அரசு வகை செய்யும். வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்குக் கடன் உதவி அளிக்கின்ற இப் புதிய செயல்முறை காரணமாக, கூட்டுறவு நிறுவனங்கள் பெற்றுக்கொள்ளும் கடன் மனுக்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்காக அவற்றில் தேவையான பணியாளர்களை நியமிப்பதற்கும், நடைமுறையை எளிதாக்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென்பதை அரசு உணர்ந்துள்ளது. எனவே, அடுத்த நிதி ஆண்டின் தொடக்கத்திலிருந்து சங்கடம் ஏதுமின்றி இப் புதிய ஏற்பாட்டினைப் பின்பற்றுவதற்கிணங்க, இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசு கருதுகிறது. கூட்டுறவு நிறுவனங்கள் இவ்வறைகூவலை ஏற்கும் என்றும், உழவர் பெருமக்களுக்கு, குறிப்பாகச் சிறு உழவர்களுக்குச் செவ்விய முறையில் பணியாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ளும் என்றும் அரசு நம்புகிறது.

**நல்ல, திறமை மிக்க நிர்வாக இயந்திரத்தின் துணைகொண்டு**

உழவர்களுக்கு ரசாயன உர வகைகளை வழங்குவதில் உள்ள இடர்ப்பாடுகளைப்பற்றி கடந்த எனது உரையில் குறிப்பிட்டிருந்தேன். உர வகைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசு கூர்ந்து கவனித்து வந்திருக்கிறது. நமது மாநில உழவர்கள் இப்போது உர வகைகளைப் பயன்படுத்துவதில் மிகுந்த ஊக்கம் காட்டி வருகின்றனர். உர வகைகளின் வெகுமதியைப்பற்றி உழவர்கள் உணர்ந்து வரும் போது உர வகைகளுக்கு மத்திய அரசு கொடுத்துவந்த உதவித் தொகையை நிறுத்தியிருப்பது வருந்தத்தக்கதாகும். நடப்பு ஆண்டில் பயிர்களைக் காப்பதற்கு அரசு எடுத்துக்கொண்ட பல்வேறு ஏற்பாடுகளில், தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு, கோவை, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நெற்பயிருக்கு விமானம் மூலமாக மருந்து தெளிப்பதற்கு மேற்கொண்ட ஏற்பாடுகளைப்பற்றி சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இதுகாறும் மேற்கொள்ளாத அளவிற்கு விமானம் மூலம் பயிர்களுக்கு மருந்து தெளித்ததால் நடப்பு ஆண்டில் பெரும்பகுதி நிலங்களில் பீடித்த பயிர் நோய்களை நாம் செவ்விதின் எதிர்த்துப் போக்க முடிந்தது.

**நிலையான, இணக்கமான ஆட்சியின் நலன்களைத் துய்க்க முடிந்தது....**

படி நமது கொள்கையில் மாறுதல் செய்ய வேண்டியுள்ளது. வருகிற ஆண்டில், புதிய கிணறுகளைத் தோண்டுவதற்கும், எண்ணெய்ப் பொறிகளையும் விசையேற்றங்களையும் நிறுவுவதற்கும் தேவைப்படுகிற கடன் உதவி அனைத்தையும் நில அடைமான வங்கிகளின் வாயிலாகவே அரசாங்கம் வழங்கும். முழு அளவில் பணியாளர்களை நியமித்துக்கொண்டு விரைவில் செயல்படவிருக்கிற வேளாண்மைத் தொழில் கழகம் (Agro Industries Corporation) தவணைக் கொள்முதல் அடிப்படையில் (Hire-Purchase terms) விசையேற்றங்களையும், டிராக்டர்களையும் வழங்குவதில் நாட்டம் செலுத்தும்.

### அரசுப் பணியாளர்களின் சீரிய பணி

சென்ற ஆண்டில் நம் நாட்டின் பற்பல பகுதிகளில் நிலவிய அரசியல் கொந்தளிப்பிற்கும், நிலையற்ற தன்மைக்கும் மாறாக, நமது மாநிலத்தில் நல்ல, திறமைமிக்க நிர்வாக இயந்திரத்தின் துணைகொண்டு, நிலையான இணக்கமான ஆட்சியின் நலன்களை நம்மால் துய்க்க முடிந்தது. எனவே, இதுகாறும் நீங்கள் ஆற்றியுள்ள பணிக்காக உங்களைப் பாராட்டுவதோடு நிலையான ஆட்சியின் பயனைப் பெற்ற மகிழ்ச்சியிலும் உங்களுடன் பங்குகொள்ள விழைகிறேன். ஆட்சிப் பொறுப்பு, ஓர் அரசியல் கட்சியின் கையிலிருந்து பிறிதோர் கட்சிக்கு மாற்றப்பட்டதனால் தோன்றிய புதிய சூழ்நிலையைக் கணிக்க பற்பல பிரிவுகளைச் சேர்ந்த அரசாங்கப் பணியாளர்கள் பணியாற்றி வருவது, நமது அரசாங்கப் பணியாளர்களின் அரசியல் நடுநிலைமையினையும், தொழில் முறைத் திறனையும் மெய்ப்பித்துக்காட்டுகிறது. நமது மாநிலத்தில் மக்கள் ஆட்சிமுறை வெற்றியடையுமென்பதற்கு இது நல்லதோர் அறிகுறியாகும் என்பதில் ஐயமில்லை.

### வரலாற்றுப் புகழ்பெற்ற உலகத் தமிழ் மாநாடு

வரலாற்றுக் காலத்திற்கு முன்புதொட்டே, வளமார் பண்பாடும் உயர் நாகரிகமும் மலிந்த ஒரு நாட்டில் இத்தகைய வெற்றியை நாம் எதிர்பார்த்தல் இயல்பானதே. என்றுமே கண்டிராத மக்கள் உற்சாகத்திற்கும் ஈடுபாட்டிற்கும் இடையே நம் பெரு மதிப்புக்குரிய குடியாட்சித் தலைவர் டாக்டர் ஜாகிர் ஹுசேன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, தமிழ் நாட்டின் பண்டைப் பெருமையின் மாட்சியை தமிழகத்தின் கண்முன்னே எடுத்துக் காட்டிற்று. உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த நுண்ணறிவாளர்களும் புலவர் பெருமக்களும் பங்குகொண்ட இம் மாநாடு, நமது தமிழ் மொழி, காலத்திற்கிணங்க புத்தம் புதிய கலைகளைத் தெற்றென விளக்கும் திறனும் வளமும் வன்மையும் வாய்ந்த விழுமிய மொழியென்பதை எடுத்துக் காட்டியுள்ளது. கவிதை, தத்துவம், கலை, சிற்பம் போன்ற பற்பல துறைகளில் தமிழ் கூறும் நல்லுலகம் எய்தியுள்ள சாதனைகள், இம் மாநாட்டிற்குத் தொடர்பான பற்பல விழாக்களிலே, குன்றின் மேலிட்ட விளக்கேபோல் குவலயத்தார்க்கெல்லாம் எடுத்துக் காட்டப்பெற்றன. சென்ற காலத்தைச் சிந்தை செய்யும்போது உண்மையான ஒரு பெருமித உணர்ச்சியையும் வருங்காலத்தை எண்ணும்போது இடையுறாத ஒரு நம்பிக்கையையும் இன்றைய இன்னல்களுக்கு இடையிலும் தமிழர்களின் உள்ளத்திலே இவ் விழாவின் நிகழ்ச்சிகள் ஏற்றி வைத்திருக்குமென்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

### எல்லா மொழிகளும் தழைத்தோங்க:

மொழி, மக்களின் உள்ளத்தை ஈர்க்க வல்லது என்பதற்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, தக்கதொரு சான்றாக அமைந்துள்ளது. எனவே, தத்தம் மொழிகளின்பால் மக்களுக்குள்ள அன்பையும் ஆர்வத்தையும் மதித்து நடப்பதே, அரசியல் நுண்ணறிவாகும். பற்பல மொழிகளும் பண்பாடுகளும் நாகரிகமும் படைத்த பல்வண்ணத் திருநாடு நம் இந்தியப் பெருநாடு. வேறு வேறான மொழிகளும், பண்பாடுகளும் ஒருமித்துத் தழைத்து அவற்றின் முழுத் திறனையும் எய்துவதற்கேற்ற சூழ்நிலையைத் தோற்றுவித்தல் வேண்டும். ஒரு மொழித் தொகுதியினர்க்குள்ள உரிமைகளும் வாய்ப்புக்களும், தங்களுக்கும் உள்ளன என்ற எண்ணமும் தாங்களும் இந் நாட்டின் பொதுச் செயல்களை உருவாக்குவதில் தங்கள் முழுப் பங்கினையும் ஏற்க முடியும் என்ற மன நிறைவும் மொழித் தொகுதியினர் ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும். ஒரு மொழித் தொகுதியினர் பிற மொழித் தொகுதியினர்மீது ஆதிக்கம் செலுத்துவது தவிர்க்கப்பட வேண்டும் என்றால், தமிழையும் பிற தேசிய மொழிகளையும் மத்திய ஆட்சி மொழிகளாக ஏற்க வேண்டும். இதற்கிணங்க அரசியலமைப்பும் ஏற்ற வகையில் திருத்தப்பட வேண்டுமென்று எனது அரசு கருதுகிறது. இவ்வாறு குறிப்பாக, அரசியலமைப்பு திருத்தப்படுகிற வரையில், ஆங்கிலம் மட்டுமே மத்திய ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும். அண்மையில் நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ள 1967-ம் ஆண்டு ஆட்சி மொழிகள் (திருத்த) சட்டம் பரந்த இந் நாட்டின் பல்வேறு தேசிய மொழிகளுக்கும் அவற்றிற்குரிய மதிப்பிடம் அளிக்கப்பட வேண்டுமென்கிற அடிப்படைக் குறிக்கோளுக்கும் முரணாய் அமைந்துள்ளது. ஆட்சி மொழிகள் (திருத்த) சட்டத்தோடு கூடவே நிறைவேற்றப்பட்டுள்ள மொழிக் கொள்கை தீர்மானம், பெருஞ் சுமையினை, இந்தி பேசாத மக்கள் மீது மட்டும் சுமத்துவதன் வாயிலாக குறிப்பாக அவர்களுக்கு விளைவித்துள்ளது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் அண்மையில் நிறைவேற்றிய மொழிக் கொள்கைத் தீர்மானத்தைச் செயல்படுத்துவதை மத்திய அரசு உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டுமென்று, எனது அரசு எடுத்துக் காட்டியதற்கிணங்க, சட்டப் பேரவை

[25-ம் பக்கம் பார்க்கவும்]

**தத்தம் மொழிகளின்பால் மக்களுக்குள்ள அன்பையும்**

**ஆர்வத்தையும் மதித்து நடப்பதே, அரசியல் நுண்ணறிவாகும்**

# "உணவு உற்பத்தியில் - புரட்சிகரமான முன்னேற்றம் காண்போம்..."

[ மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை ]

"தமிழ்நாடு உணவு உற்பத்தியில் உபரியாக இருப்பதாக ஒரு நினைப்பு ஏற்பட்டுள்ளது. இது சரியல்ல. உண்மையில் இப்போதுதான் முன்னேற்றப் பாதையில் நாம் காலடி எடுத்து வைத்திருக்கிறோம். தமிழக விவசாயத்துக்கு அவசியமான நிதி உதவிகளை மத்திய அரசு அளித்திடுமானால், இன்னும் இரண்டு ஆண்டுகளில் அரிசி உற்பத்தியை உபரியாக்குவதோடு, நேர்த்தியான சில ரக அரிசி வகைகளை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோம்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் தீவிர சாகுபடித் திட்ட அதிகாரிகளின் மாநிலக் கருத்தரங்கை (7-2-68-ல்) துவக்கி வைத்துப் பேசுகையில் கூறினர். அவருடைய பேச்சின் சாரம் கீழே தரப்பட்டுள்ளது :—

"தமிழகத்தில் விவசாயிகள் முற்போக்கான வர்கள். நாம் கணக்கைப் போட்டு முடிப்பதற்குள் அவர்கள் கணக்கைப் போட்டு நமக்கே சொல்லுகிறார்கள். எத்தகைய நவீன விவசாய முறையானாலும், அவற்றை ஏற்று செயல்படுத்திட அவர்கள் தயங்குவதில்லை. 'மாறிய நிலைக்கேற்ப வசதிகளைக் கொடுத்திடுக' என்று நம்மை அவர்கள் கேட்டபடி இருக்கிறார்கள்.

மத்திய அரசு துணை நிற்குமேயானால்....

தமிழ் நாட்டிலுள்ள நாம் தடைகள் எல்லாவற்றையும் மீறி முன்னேறிவிட்டோம் என்றும் தமிழ்நாடு உணவு உற்பத்தியில் உபரி மாநிலமென்றும் ஒரு நினைப்பு பரவியுள்ளது. இத்தகைய நினைப்பு ஏற்பட ஒருவகையில் நாமும் காரணம் எனினும் இது சரியல்ல. இது நீக்கப்பட வேண்டும்.

நாம் முன்னேற்றப் பாதையில் செல்கிறோம். ஆனால் முன்னேறிவிடவில்லை. கடந்த ஆண்டு நாம் பெற்ற நல்ல விளைச்சல் தொடர்ந்து இருக்குமா என்பதை நாம் பொறுத்துப் பார்க்க வேண்டும். ஆக, நமக்கு அவகாசம் அளித்து, மத்திய அரசும் மற்றவர்களும் நம்மோடு துணை நிற்பார்களானால், விவசாயத் துறையில் சிறப்பான வெற்றிகளை நாம் நிச்சயமாக பெற்றிட முடியும்.

தஞ்சை, திருச்சி, வட ஆர்க்காடு, செங்கல்பட்டு, நெல்லையில் கணிசமான பகுதிகளில் நெல் விளைச்சல் முழு அளவுக்கு நடைபெறுமானால், தமிழகத்தின் இதர மாவட்டங்களை பருத்தி, கரும்பு, நவதானியங்கள் ஆகியவற்றின் சாகுபடிக்கென ஒதுக்கிடலாம், ஆனால் துரதிருஷ்டவசமாக நிலைமை அவ்வாறில்லை, ஒரு சில இடங்களில் ஓர் ஏக்கருக்குப் பாசனத்தை ஏற்படுத்த ரூ. 8 ஆயிரம் வரை செலவழிக்க வேண்டியிருந்ததாக அதிகாரிகள் என்னிடம் தெரிவித்தார்கள். இவ்வளவு நிறைய செலவழித்து அதற்கேற்ப வரியைப்போட்டால் அதை நம் விவசாயிகள் தாங்குவார்களா ? எனவே, அரசு தன்னாலானதைச் செய்கிற அதே நேரத்தில் பூமிக்கடியில் கிடைக்கும் நீரை விவசாயிகள் அதிக அளவில் பயன்படுத்தும்படி ஊக்குவிக்க வேண்டும்.

தவறான கருத்தைப் போக்குவோம்

பூமிக்கடியிலிருந்து கிடைக்கும் நீர், தாதுச் சத்துக்கள் குறைந்தது என்று விவசாயிகளிடத்தில் நிலவுகின்ற அவநம்பிக்கையைப் போக்க வேண்டும்.

ஒரு காலத்தில் இரசாயன உரத்தைப் பற்றிக்கூட இப்படித்தான் கருதப்பட்டது. இன்று அந்த நிலைமையில்லை.

இன்றே, கலப்பு உரமா அதை நாங்களே தயாரித்துக் கொள்கிறோம். தேவையானதை மட்டும் எங்களுக்குக் கொடுத்துதவுங்கள் என்ற அளவுக்கு விவசாயிகளிடம் உரத்தைப் பற்றிய அறிவு வளர்ந்துள்ளது.

தீவிர சாகுபடித் திட்டமென்பது தஞ்சை மாவட்டத்துக்கு மட்டும் உரியதாக இருந்தால் போதாது. மாநிலம் முழுவதும் தஞ்சையை எதிர்பார்ப்பதென்பதும் இயலாது. எனவே படிப்படியாகத் தீவிர சாகுபடித் திட்டம் மற்ற மாவட்டங்களுக்குப் பரவ வேண்டும். இம்மாநிலம் உபரி மாநிலமாக வேண்டுமென்றால் அது ஒன்றே வழி.

தமிழ்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரிக்க சிறிய நீர்ப்பாசனத்திற்கு ரூ 20 கோடி செலவிட வேண்டுமென்று கூறி அதற்கான திட்டம் முழுவதையும் அழகுபட அச்சேற்றி புத்தக வடிவில் கொண்டு போய் நான் டெல்லியில் கொடுத்து வந்தேன். ஆனால் இன்று வரை அதற்கான பதில் வரவில்லை.

### தமிழகத்தின் செயல் திறன்

எந்த திட்டமானாலும் அதை சிறப்புற ஆற்றிக் கொடுக்கும் அதிகாரிகள் இங்கே இருக்கிறார்கள். தேவையானதைக் கொடுத்தால் உற்பத்தி செய்து குவிக்கும் உழைப்பாளர்களாக நமது உழவர்கள் இருக்கிறார்கள்.

மத்திய அரசு தான் நடத்திப் பார்க்க விரும்பும் எத்தகைய மேம்பாடான திட்டமாயினும் தமிழகத்தில் வந்து நடத்தட்டும். வெளிமாநிலங்களில் ஒரு காரியத்தைச் செய்ய 100 ரூபாய் செலவாகுமானால், இங்கே அதே காரியத்தைச் செய்ய 80 ரூபாய்தான் செலவாகும்.

முன்னாள் தமிழக முதலமைச்சர் திரு குமாரசாமி ராஜா அவர்கள் இதை அப்போதே வலியுறுத்தினர். வடக்கே கொட்டும் பணத்தில் ஒரு பகுதியைத் தமிழகத்திற்குக் கொடுங்கள், உணவு உற்பத்தியைக் குவித்துக் காட்டுகிறோம் என்று கூறியிருக்கிறார்.

தமிழகத்தில் ஏற்பட்ட புதிய ஆட்சி அதன் முதல் ஆண்டிலேயே இரண்டு புதிய வரிகள் மூலம் இந்த பத்து மாதங்களில் ரூ. 6 கோடி அளவுக்கு அதிக வருவாயைத் தேடியுள்ளது, இன்னும் இரண்டு மாதங்கள் உள்ளன. இன்னும் இரண்டு கோடி ரூபாய் சேரும். இந்த அளவுக்கு ஈடாகவேனும் மத்திய அரசு மானியம் கொடுத்து உதவக் கூடாதா ?

இந்த நாட்டிற்கு ஒருங்கிணைந்த தேசிய தண்ணீர்த் திட்டம் தேவை என்று இங்கு பேசப்பட்டது. இதே கருத்தை நீண்ட நெடு நாட்களுக்கு முன்பாகவே டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர் தெரிவித்தார். நாள் தவறினாலும் ஒருமைப்பாட்டைப் பற்றிய பேச்சு தவறுவதில்லை, ஆனால் நதிகளின் நீரை இணைப்பது பற்றி இதுவரை யாரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

**கிருஷ்ணா – கோதாவரியைப் பெண்ணாற்றுடன் இணைத்தால் வரண்டு கிடக்கும் தமிழ்நாட்டுப் பகுதிகள் பலனடையும். மேற்கே ஓடி கடலில் விழுந்து வீணாவதாகச் சொல்லப்படும் ஆறுகளின் நீரும் தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிடப்பட்டால், நல்ல பலனையளிக்கும். ஒருமைப்பாடு பற்றி பேசும் மத்திய அரசு இதை கவனத்தில் வைக்க வேண்டும்.**

விவசாயிகள் அதைச் செய்ய வேண்டும் இதைச் செய்ய வேண்டும் என்று கூறிவிட்டு அவர்களுக்குத் தேவையானதைத் தராவிட்டால், அது பசியைக் கிளறிவிட்டுவிட்டு சோறு போடாமல் பட்டினிப் போடுவதற்கு ஒப்பாகும்.

### விவசாயிகளுக்குக் கடன் வசதிகள்

வர்த்தக பாங்குகள் விவசாயக் காரியங்களுக்காக கடன் வசதியளிக்க முன் வர வேண்டும். விவசாயக் காரியங்களுக்குக் கடன் கொடுக்கிறோம் என்று வர்த்தக பாங்கி ஒன்றின் நிர்வாகத்தினர் தெரிவித்தனர், முதலில் செங்கற்பட்டு மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம். ஐந்தாண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடனை எட்டரை சதவிகித வட்டியின் பேரில் நிதியுதவிசெய்யலாம் என்று அவர்கள் சொன்னார்கள். இதை நமது விவசாயிகள் ஏற்றுக் கொள்வார்களா ?

எப்படியேனும் விவசாயிகளுக்குத் தேவையான கடன், சிக்கலில்லாமல் கிடைக்க வேண்டுமென்பதற்காகச் சில திட்டங்களைத் தயாரித்து வருகிறோம். சர்க்கார் மட்டுமே அல்லாமல் வேறு நிதி உதவி நிறுவனங்களும் விவசாயக் காரியங்களுக்காக கடன் வழங்க வகை செய்து சில விதிகளைச் செய்ய இருக்கிறோம்.

தமிழக விவசாயத்துக்கு அவசியமான நிதி உதவிகளை மத்திய அரசு அளித்திடுமானால், இன்னும் இரண்டு ஆண்டுகளில் அரிசி உற்பத்தியை உபரியாக்குவதோடு, நேர்த்தியான சில ரக அரிசி வகைகளை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோம்.'

—o—

# "கடல் வளம் சிறக்க தொழில் திறமையைப் பெருக்குவோம்"

**பிரான்ஸ் நாட்டு உதவியைப் போற்றி, முதலமைச்சரின் பாராட்டுரை**

"வெளிநாடுகளிலுள்ள மீன்பிடிப்பாளர்களுக்கு மீன்களைப் பிடிப்பதற்கு நூதன கருவிகள் இருக்கின்றன. ஆனால் தமிழக மீனவர்களுக்கோ இத்தகைய சாதனங்கள் இல்லையென்றாலும், அபாயத்தை எதிர்நோக்கியே, வெறும் தைரியத்துடன் ஆழ்கடலுக்கும் சென்று மீன் பிடிக்கிறார்கள். தைரியத்தில் நாம் யார்க்கும் சளைத்தவரல்ல என்பதை நாம் வாழ்ந்து காட்டியுள்ளோம்" என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சி. என். அண்ணாதுரை அவர்கள், பிரான்ஸ் நாடு அளித்த 'டோரிஸ்' என்ற இயந்திரப் படகுகளை ஏற்றுக்கொள்கையில் குறிப்பிட்டார்.

இந்திய-பிரான்ஸ் நட்புறவுத் திட்ட அடிப்படையில் நிறுவப்பட்ட "டோரிஸ் திட்டத்" துவக்க விழா, 31-1-1968 அன்று சென்னைத் துறைமுகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு ஆர்ச் பிஷப் அருளப்பா தலைமை வகித்தார். தமிழக மீன் வளத் துறை இயக்குநர் அனைவரையும் வரவேற்றார். துறைமுகப் பொறுப்பாணைக் குழுவின் தலைவர் திரு வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ். அவர்களும் விவசாயத் துறை இணைச் செயலாளர் குமாரி அன்னா ஜார்ஜ் அவர்களும் விழாவில் கலந்து கொண்டனர்.

சுமார் ரூ. 15,000 மதிப்பில் உள்ள இந்த நவீன பிரெஞ்சுப் படகுகளை இயக்குவதற்கு இருவரே போதும். நாளொன்றுக்கு சராசரியாக 640 கிலோ வரை மீன்கள் பிடிக்கலாம். ஆனால் இது நாளொன்றுக்கு 3,000 கிலோ வரை மீன் பிடிக்கத் தகுதி பெற்றது. இந்த "டோரிஸ்" படகுகளில் பொருத்தப் பெற்றுள்ள "மீன் கண்டுபிடிப்புக் கருவி" (Electronic fish finder) யைக் கொண்டு கடலினடியில் 240 அடி ஆழத்தில் உள்ள மீன்களை கண்டு கொண்டு, அவற்றை எளிதாகப் பிடிக்க முடியும். 5 அல்லது 6 நாட் (Knot) வேகத்தில் போகும் 8 மீட்டர் நீளம் கொண்ட இப் படகிற்கு 2 முதல் 3 குதிரை ஓட்ட சக்தியுள்ள என்ஜின்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றை நிறுத்தி வைக்க துறைமுகம் தேவையில்லை

மாண்புமிகு முதலமைச்சர் பேசுகையில், "மீனவர் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும், பிரெஞ்சு நாட்டு அரசுக்கும் மக்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகக்" கூறினார். அவர் மேலும் கூறுகையில், "பிரெஞ்சுநாட்டின் வல்லுநரை இங்கு அறிமுகப்படுத்துகையில், அவர் பிரெஞ்சு நாட்டில் மீன் பிடிப்பதில் மிகச் சிறந்தவர் என்று பெருமையுடன் கூறினார்கள். இதனால் அவர்கள் எத்தொழிலையும் ஏற்றத் தாழ்வு காணாமல் சிறப்பாக மேற்கொள்கிறார்கள் என்பதை நம்மால் கண்டு கொள்ள முடிகிறது. ஆனால் இங்கேயுள்ள செல்வந்தர்களான சிலரிடம் 'என்ன தொழில் செய்கிறீர்கள்? என்று கேட்டால், 'தொழில் செய்யும் அந்த நிலைமை எனக்கெதற்கு' என்ற பாவத்தில், பதில் சொல்லுவதைக் கேட்கிறோம். இந்த வகையில் மேலை நாட்டினருக்கும் நமக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. கை வந்த தொழிலை நம் சந்ததிகளுக்கு நாம் மனமுவந்து முழுவதையும் கற்றுக்கொடுப்பதில்லை. தேள் கடிக்கு உடனே குணமளிக்கும் மூலிகை ஒன்று ஒருவருக்குத் தெரிந்திருக்கும். ஆனால் 'அது இன்னது என்பதை மற்றவர்களுக்குச் சொல்ல

முதல் அட்டைப்படம்: 'டோரிஸ்' இயந்திரப்படகில், தமிழக முதலமைச்சருடன் திரு அரங்கண்ணல், எம்.எல்.ஏ., முதல் அமைச்சரின் அந்தரங்கச் செயலாளர் திரு கே. சொக்கலிங்கம், ஐ.ஏ.எஸ்., மீன்துறை இயக்குநர் திரு ஏ. பத்மநாபன் ஆகியோரைக் காணலாம்.

மாட்டார். சொன்னால் மருந்து பலிக்காது என்பார்கள். நமக்குத் தெரிந்த வித்தையை பிறருக்குத் தெரிவிக்காமலேயே அழித்துவிடச் செய்வது நம்மிடையே உள்ள சித்தாந்தம். அந்த வித்தை அவருடனேயே போய்விட்டது என்று சொல்வதில் வீண் பெருமை கொள்கிறோம்''.

~~முதலமைச்சர் மேலும் கூறுகையில்,~~

"தாங்கள் அறிந்த தொழில் வித்தைகளை மற்றவர்களும் பெறச் செய்வதுதான், விஞ்ஞான வளர்ச்சி. எனவே இதை நாமும் பின்பற்ற வேண்டும். எத்தொழிலாக இருந்தாலும், அதன் நுணுக்கங்களை ஆராய்ந்து, அதைப் பயனுள்ளதாக்கிக்கொள்ள வேண்டும்"

''இங்கு தயாராகும் படகுகள் 35,000 ரூபாய்கள் வரை விலை மதிப்பாகின்றன. ஆனால் ரூ. 15,000 செலவிலேயே மீன் பிடிப்பதற்கு வசதியான கருவிகள் அமைந்த படகுகளை பிரெஞ்சு நாட்டினர் நமக்குத் தர முடிகிறது" என்பதைக் குறிப்பிட்ட முதலமைச்சர் அவர்கள், ''நல்ல கருவிகள் இல்லாவிட்டால் எதிர்பார்க்கும் பலன் கிடைக்காது. அந்த வகையில் பிரான்ஸ் நாட்டு படகுகளையும், அதை செலுத்த நமது மீனவர்களுக்கு பயிற்சியளிக்கும் நிபுணர்களையும் நமக்கு அந்நாடு அளித்திருப்பது வரவேற்கத்தக்கது; பாராட்டப்படக்கூடிய ஒன்று. கடல் வளம் சிறக்க தொழில் திறமையை நாம் பெருக்கிக்கொள்ள வேண்டும். இதை நல்ல முறையில் பயன்படுத்தி, வற்றாத கடல் செல்வத்தை நாம் பெறவேண்டும்" என்று கூறினார்.

### விவசாய அமைச்சருக்குப் பாராட்டு

மாண்புமிகு விவசாய அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி அவர்களை முதலமைச்சர் பாராட்டினர், ''விவசாய அமைச்சருக்கு உடல் நலம் சரியில்லாததினால், நான் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்துள்ளேன். மீன் வளர்ச்சித் துறையிலே விவசாய அமைச்சர் காட்டிவரும் ஆர்வம் மிகவும் பாராட்டுதலுக்குரியது. அவர் இத்துறையில் காட்டுகின்ற அக்கறையும் ஆர்வமும் மீன் வளர்ச்சித் துறையிலே மேலும் ஊக்கமும் செயல்திறனும் அமைவதற்கு காரணமாக இருக்கும் என திடமாக நம்புகிறேன்" என்று முதலமைச்சர் கூறினர்.

படகில் உள்ள கருவியின் மூலம் கடலின் அடியில் இருக்கும் மீன்களைக் கூட கண்டறிந்து ஒரு சில நிமிடங்களில் ஏராளமான மீன்களைப் பிடிக்க முடியும் என்றும் ஐந்தே மாதங்களில் 30 ஆயிரம் கிலோ கிராம் மீன்கள் பிடிக்கப்பட்டிருக்கின்றன என்றும் பிரெஞ்சு நாட்டு தூதுவர் திரு ரானேகிராஸ் டோரிஸ் படகு பற்றி விளக்குகையில் குறிப்பிட்டார்.

---

மா. முத்துசாமி, பி.ஏ.,பி.டி.,
உள்ளாட்சித் துறை அமைச்சர்,
தமிழக அரசு.

கோட்டை, சென்னை-9,
23—2—1968.

பேரன்புடையீர்,

" எண்ணிய எண்ணியாங் கெய்துவர்-எண்ணியர்
திண்ணியராகப் பெறின் "

வணக்கம். நம் பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களும், இவ்வாண்டு ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளிகளின் நலனுக்காகச் சற்றேறக் குறைய 76 இலட்சம் ரூபாய்கள் அளித்திருக்கின்றார்கள். தமிழகத்தில் கல்வியின் தரம் சீரிய முறையில் உயரவேண்டுமானால் ஆரம்பக் கல்வியின் நலனை நாம் முதலில் கவனித்தாக வேண்டும். உங்களது மாவட்டத்திற்கு பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், விஞ்ஞானக் கருவிகள் வாங்குவதற்கும், ஆசிரியைகளுக்கான வீடுகள் கட்டுவதற்கும் ஆக மொத்தம் * இலட்சம் ருபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. உங்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் நான் இதுபற்றி நேர்முகக் கடிதம் எழுதியுள்ளேன்.

வருகின்ற மார்ச் மாத இறுதிக்குள் (31—3—1968) இந்த மானியங்கள் எல்லாம் விதிகளுக்குட்பட்டு நல்ல முறையில் பயன்படுத்தவேண்டியுள்ளதால், இப்பெரும் பணியில் தங்களது ஒத்துழைப்பை பெரிதும் விரும்பி வேண்டுகிறேன்.

எப்பணியையும் ஏற்றமுறச் செய்து முடிக்கும் தாங்கள் இப்பணியையும் எடுத்து நல்லமுறை வெற்றியுடன் முடிப்பீர்கள் என்ற பெரு நம்பிக்கையோடு உங்களிடம் இப்பணியை ஒப்படைக்கிறேன்.

தமிழகம் தனது வரலாற்றுச் சிறப்புகளைத் திரும்பவும் பெற்று ஒளி வீசித் திகழவும் " என்னருந் தமிழ்நாட்டின்கண் எல்லோரும் கல்வி கற்றுப் பன்னருங் கலை ஞானத்தால், பராக்கிரமத்தால், அன்பால், உன்னத இமயமலைபோல் ஓங்கிடும் கீர்த்தி எய்தி" இன்புற ஆவன செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
**மா. முத்துசாமி**

[ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு மாண்புமிகு அமைச்சரின் நேர்முகக கடிதம்.]

---

* ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வெவ்வேறு தொகையாக இருப்பதால், தொகையை இங்கே குறிக்கவில்லை.

மதுவிலக்கினல் தோன்றிய சிக்கல் தீர்ந்த வரலாறு :

# தமிழகத்திலே பனைத்தொழில்

[மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி]

[மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், 4-10-67-ல் மதுராந்தகத்திலே நடைபெற்ற செங்கல்பட்டு மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் கருத்தரங்கில் ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவின் சாரத்தை இங்கே அளித்துள்ளோம். அண்ணல் காந்தியடிகளின் அருந்தொண்டினைப் பற்றியும், மதுவிலக்கின் அவசியத்தைப் பற்றியும் அழகு தமிழில் வலியுறுத்திக் கூறும் அமைச்சரின் பேச்சில் கண்டுள்ள கருத்துக்கள், நம் சிந்தனையிலே பதித்துவைத்துக்கொள்ளக்கூடிய கருத்துக் கருவூலங்களாகத் திகழ்கின்றன என்பதனல், சென்னையில் அகில இந்திய மதுவிலக்கு மாநாடு அண்மையில் நடைபெறப்போகும் இவ்வேளையில் அப்பேச்சின் சாரத்தை வெளியிடுவது சாலப் பொருத்தமுடையது எனக் கருதி, அவற்றை இங்கே வெளியிட்டுள்ளோம்—ஆசிரியர்.]

"ஜனநாயக நாட்டிலே வாழ்கிறோம் என்கிற பெருமை நமக்கெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. அத்தகைய பெருமையை நமக்கு ஏற்படுத்திக் கொடுத்தவர் மறைந்துவிட்ட உலக உத்தமர் காந்தியார் ஆவார்கள். ஆகவே, நாமெல்லாம் காந்தி நாட்டு மக்கள் என்று சொல்வதிலே பெருமைப் பட்டுக்கொள்கிறோம். காந்தி சகாப்தத்திலே வாழுகின்றோம் என்பதிலே அதைவிடப் பெருமை நமக்கெல்லாம் இருக்கிறது. நாமெல்லாம் அவர்கள் கொண்டிருந்த இலட்சியக் கனவுகளை நிறைவேற்றுகின்ற கிராமக் கைத்தொழில் வளர்ச்சி பற்றிய முயற்சியில் ஈடுபட்டு அதற்கான கருத்துக்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டு, அவற்றிற்கு விடிவுகாணும் முயற்சியிலே ஈடுபட்டிருப்பது, அந்த உத்தமருக்கு நாம் செலுத்துகின்ற நியாயமான அஞ்சலி என்று நான் பெருமைபபடுகிறேன்.

**அண்ணலின் உறுதிமொழி**

இந்த சமுதாயம், வரலாற்றுக் காலத்திற்கு முந்திய காலத்திலேயே, நாகரிகச் சிறப்புப்பெற்ற சமுதாயமாக விளங்கியிருக்கிறது என்பதை நம்முடைய புராதனச் சின்னங்களும், நம்முடைய நினைவுச் சின்னங்களும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. அத்தகைய நிலையிலிருந்து இந்தச் சமுதாயம் தாழ்ந்து போனதற்குரிய பல்வேறு காரணங்களிலே இந்த நாடு மதுவை விடாப்பிடியாகத் தன்னிடத்திலே கொண்டிருந்ததும் ஒன்று. விடுதலை நாட்டிலே வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் என்கிற பெருமையிலிருந்து நாம் தாழ்ந்து போனதற்குக் காரணம் வெள்ளைக்காரன் நம்மிடத்திலே கொடுத்த மது வகையிலே மயங்கியதுதான் என்பதை நமது கடந்தகால வரலாறுகள் நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. காந்தியார் அவர்கள் அந்த மதுவை இந்த நாட்டை விட்டு ஓட்டவேண்டும் என அயராது பாடுபட்டார்கள். அந்த முயற்சியிலே அவர்கள் பலமுறை தோல்விகளைக் கண்டிருந்தாலும், விடாப்பிடியாக, அதில் வெற்றி காண்பதற்காகப் பெரிதும் பாடுபட்டார்கள். "என்னை ஒரு மணி நேரத்திற்கு இந்த நாட்டின் சர்வாதிகாரியாக நியமித்தால், நான் முதற் காரியமாக கள், சாராயக் கடைகள் அனைத்தையும் நஷ்டஈடு தராமலே மூடிவிடுவேன்" என்று அவர்கள் உறுதிமொழி கூறினர்கள் என்றால், இந்த மதுவைப் பற்றி அவர்கள் எவ்வளவு வேகமான எதிர்ப்புணர்ச்சி கொண்டிருந்தார்கள் என்பதை நாம் தெளிவாக அறிய முடிகிறது.

அத்தகைய வகையிலே அன்றைக்கு இந்த நாட்டில் மதுவிலக்கு அமுலாக்கப்பட்டது. அந்த மதுவிலக்கு அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு இன்னமும் இந்த நாட்டிலே பூரணமாக வெற்றி பெறவில்லை. இன்னும் சொல்லப்போனால், காந்தியாரை நாம் நாளுக்குநாள் மறந்து கொண்டு வருவதைப்போலவே அவர்களுடைய இலட்சியங்களிலிருந்துகூட நாளுக்கு நாள் பின்வாங்கிக் கொண்டு போகிறோம் என்பதை இன்றைய வரலாறு நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது. இது அந்த உத்தமருக்குச் செய்கின்ற மிகப் பெரிய துரோகம்.

**நம்முடைய தலையாயக் கடமை**

தமிழகத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்கு முற்றிலும் மாறுபட்ட கொள்கைகளைக் கொண்டிருக்கக்கூடிய ஒரு அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டிருந்தாலும், அந்த அரசினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் பேறிஞர் அண்ணு

அவர்கள் காந்தியாருடைய கொள்கைகளி லிருக்கக் கூடிய நல்லவைகளை நாட்டிலே அமுல் படுத்துவதில், நாம் மற்றவர்களுக்குச் சளைத்தவர்கள் அல்லர் என்று மிக உறுதியாக காட்டிக் கொண்டிருக்கிருர்கள். மற்ருன் வீட்டு மல்லிகைத் தோட்டம் என்று சொன்னுலும் அதிலேயிருந்து வருகின்ற மணத்தை நுகருவதுதான் முறை என்பதைத தெரிந்துகொண்டிருக்கக் கூடிய ஒரு பெருந்தகையாக அவர்கள் விளங்கி, இந்த நாட்டிலே மது விலக்கைத் தீவிரமாக அமுலாக்கிக் கொண்டு வருகிருர்கள்.

## அனைத்திந்திய மதுவிலக்கு மாநாடு

### ஏப்ரல் மாதம் சென்னையில் நடைபெறும்

ஏப்ரல் 12, 13, 14 நாட்களில் சென்னையில் நடைபெறும் அனைத்திந்திய மதுவிலக்கு மாநாட்டை, தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணுதுரை தொடங்கிவைப்பார். டாக்டர் சுசிலா நய்யார் தலைமை தாங்குவார். மருத்துவத் துறை அறிஞர்கள், உளநூல் வல்லுநர்கள், காந்தியடிகளின் கோட்பாடுகளில் நம்பிக்கைகொண்ட ஊழியர்கள், மாநில முதலமைச்சர்கள், அமைச்சர்கள், சமூகத் தொண்டர்கள் முதலானேர் நாடெங்கிலுமிருந்து இம்மாநாட்டில் கலந்து கொள்வார்கள். திரு இராஜாஜி, திரு கு. காமராஜ், டாக்டர் ஜீவராஜ் மேத்தா, ஸ்ரீமான் நாராயண், திரு மீ. பக்தவத்சலம், திருமதி சுசேதா கிருபளானி முதலியோர் மாநாட்டில் கலந்துகொள்வர்.

காந்தியாருடைய எண்ணத்தை இந்த நாட்டிலே ஈடேற்றவேண்டுமென்று பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிற அந்தப் பெரியவருக்கு, நம்முடைய பேரறிஞர் அண்ணு அவர்களுக்கு, நாமெல்லாம் உறுதுணையாக இருந்து இந்த நாட்டிலே மதுவிலக்கைத் தீவிரமாக அமுலாக்கி மது அரக்கனை முற்றிலும் ஒழித்துவிட்டோம் என்று கூறுகிற வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவது நம்முடைய கடமையாகும். அந்தக் கடமையிலே நாம் கொஞ்சம் பின் தங்குகிருேம் என்ருலும், சமுதாயத்தைச் சீரழிக்கிருேம் என்பது பொருள்; அந்தக் களங்கம் நமக்கு ஏற்பட்டுவிடும். ஆகவே நாம் இதிலே எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

### பனைத்தொழில் புதியது—புனிதமானது

பனைத்தொழிலானது இந்த மதுவிலக்காலே பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களைக் காப்பாற்றுவதற்காகக் காந்தியார் அவர்கள் புனருத்தாரணம் செய்துகொடுத்த ஒரு புதுத் தொழிலாகும். இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் தங்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்வதற்காக மட்டும் ஏற்பட்ட தொழிலாக இதைக் கருதாமல், சமுதாயத்திற்குச் செய்கின்ற பெருஞ் சேவையாகக் கருதிச் செயல்படவேண்டும் என்பதை நாம் உணரவேண்டும். ஒரு பக்கத்திலே மதுவை ஒழிக்கவும், அதே நேரத்தில் அந்த மதுப் பழக்கத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு தரவும், புது முறைகளைக் காணவேண்டும் என்ற முயற்சியிலேதான் பதநீர் இறக்குகின்ற தொழிலிலே நம்முடைய கவனத்தை அதிகமாகச் செலுத்தவேண்டும் என்று காந்தியார் அவர்கள் கனவு கண்டார்கள்.

### இலட்சியத்தை பரப்புகிருேம் என்ற பெருமை

ஆகவே, இந்தப் பதநீரை இந்த நாட்டிலே கொடுக்கிருேம் என்று சொன்னுல் நாம் காந்தியாருக்குச் சேவை செய்து கொண்டிருக்கிருேம் என்று பொருளாகும். நமமுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிருேம் என்பது மட்டும் அல்லாமல் ஓர் இலட்சியத்தை இந்த நாட்டிலே முழுமையாகப் பரப்பிக் கொண்டிருக்கிருேம் என்கிற பெருமையையும் உங்கள் அனைவருக்கும் இருக்கும். ஆகவே, காந்தியாருக்கு மணி மண்டபம் எழுப்புகின்றவர்களைவிட, காந்தியாருக்குக் கோயில் எழுப்புகின்றவர்களைவிட, காந்தியாருக்குக் குளங்கள் வெட்டுகின்றவர்களைவிட, காந்தியாருடைய திருவுருவப் படங்களை நாடெங்கும் வைத்து ஊர்வலமாக வருகின்றவர்களைவிட, காந்தியாருடைய திருவுருவப் படத்திற்குத் தினந்தோறும் பூசை போடுபவர்களைவிட, பனைத் தொழில் செய்வது காந்தியாருடைய மனத்திற்கு நிறைவை அளிக்கின்ற காரியமாகும்.

இந்த தொழிலை ஏற்படுத்தியதற்கே காரணம், இந்த நாட்டிலே மதுவிலக்கைத் தீவிரமாகஅமுல்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான். ஆனுல் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற ஒரு சிலர், இந்தத் தொழிலையே மதுவிலக்குக்கு எதிராகப் பயன்படுத்துகிற நிலையிருக்குமானுல் அதைவிட அஞ்சத்தக்க ஒரு காரியம் நிச்சயமாக இருக்க முடியாது. மதுவை ஒழிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிற சில நண்பர்கள், தங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்காகவோ, அல்லது மற்றவர்களுக்கு இன்பத்தைத் தரவேண்டும் என்பதற்காகவோ அல்லது கொஞ்சம் அதிகமாக இலாபம் கிடைக்கிறது என்பதற்காகவோ, கொஞ்சம் தனது நெறியிலிருந்து தவறிவிட்டாலும், சமுதாயத்திற்குப் பெருந்துரோகத்தைச் செய்கின்றேம் என்பதை அவர்கள் தங்களுடைய கவனத்தில் கொள்ளவேண்டும்.

### நம்மை நாமே திருத்திக்கொள்ளும் மனப் பக்குவம்

இந்தத் துறையிலே ஈடுபட்டிருப்பவர்களின் வாழ்க்கையிலே இருக்கக்கூடிய தொல்லைகளை, நான் மிக நன்ருக அறிகிறேன். என்ருலும், அதற்காக நாம் மாருன வழியிலே செயல்படுகிருேம் என்ற நிலைமை இருக்கக்கூடாது. ஆகவே நம்மை நாமே திருத்திக்கொள்கிற மனப் பக்குவத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அப்படி ஒரு சிலர் திருந்த மறுத்தாலும் இந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் அவர்களைத் திருத்துகிற முயற்சியிலே ஈடுபடவேண்டும். ஆகவே அத்தகைய குறைகளுக்கு இடமில்லாமல் நடந்துகொண்டால் சட்டத்திலே இருக்கக் கூடிய சிக்கல்களின் மூலமாக உங்களுக்கு ஏற்படுகிற பாதகங்களைப் போக்குவதற்கு, மிக எளிதில் நம்மால் முயற்சி எடுக்க முடியும். எனக்குத் தெரிந்த வரையில், கிராமப் புறங்களிலே இந்தப் பனைத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுடைய பல்வேறு நண்பர்களும் அந்தக் காலங்களிலே பெரும்பாலும் தவருக நடந்து கொள்வதை நான் கண்கூடாகவே பார்த்திருக்கிறேன். பருவகாலம் வந்தாலே பலபேர் அந்தப் பனைமரத்தடியிலே போய்க் காத்துக்கொண்டிருக்கிருர்கள். அவர்களுக்கு அங்கே என்ன வேலை? பனைமரத்தடியிலேயே போய்ப் பாலைக் குடித்தாலும் அதை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற பழமொழியை, உலகத்திற்குக் கொடுத்தவர்கள் நாம். அப்படிக் கொடுத்துவிட்டுப் பத்துப் பேர் காலை 7 மணியானுல், அந்த மரமேறுகிற தொழிலாளியினுடைய வீட்டைச் சுற்றியோ, அல்லது அவர்களுடைய அந்தக் குடுக்கையைச் சுற்றிக்கொண்டோ, அல்லது மரத்தைச் சுற்றிக்கொண்டோ இருக்கிருர்கள் என்ருல் என்ன பொருள்? ஆகவே, இந்த நிலை மாறவேண்டும். அதற்கு நம்மை நாம் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## அண்ணல் காந்தியடிகளுக்கு முதலமைச்சர் அஞ்சலி

"அவர் ஒரு தூயவர், நமது மார்க்கத்தின் மாசு துடைத்திட வந்த மகான் என்பாரும் ;

அவர் ஒரு விடுதலை வீரர், நமது நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சா நெஞ்சினர் என்பாரும் ;

அவர் ஒரு வேதாந்தி, பழைய தத்துவம் பலவற்றுக்குப் புதிய விளக்க மளித்தவர் என்பாரும் ;

அவர் ஒரு சமதர்மவாதி, ஏழை பங்காளர், ஏழைகள் புதுவாழ்வு பெற வழி வகுத்தவர் என்பாரும் ;

அவர் கிராம ராஜ்யம் அமைத்திட முனைந்தவர் என்பாரும், இதுபோல, அவரிடம் அவரவர் கண்டவற்றினைக் கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவார், பல்வேறு உளர். இவர்களில் எவருடைய பார்வையில் முழு காந்தி அடிகள் தெரிகிறார் என்பது, காலமெல்லாம் ஆராய்ந்தறிந்துகொள்ள வேண்டிய ஒரு பிரச்சினையாகும். காரணம், ஒரு தனி மனிதர் என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியவர் அல்லர் : அவர் காலத்தின் சின்னம், ஓர் எழுச்சியின் அடையாளம், ஒரு மறுமலர்ச்சியின் உருவகம்."

[காந்தியடிகள் பற்றி தமிழக முதல்வர் சி. என். அண்ணாதுரை—வானொலிச் சொற்பொழிவிலிருந்து—2—10—67]

### புறம்போக்கு மரங்களும் வல்லுநர்களும்

இந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குப் பனைமரம் வழங்குவதற்காக நம்முடைய உள்ளாட்சித் துறையிலிருந்து திட்டவட்டமான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த புறம்போக்கு நிலங்களிலே இருக்கக்கூடிய பனைமரங்களை, பனைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் கேட்டால், முதலில் சங்கங்களுக்குத்தான் கொடுக்கவேண்டும். அப்படி யாரேனும் கொடுக்க மறுத்துவிட்டு வேறு யாருக்காவது கொடுத்தால், அதனை நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக அதை ரத்துச் செய்து, இந்தச் சங்கங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று, திட்டவட்டமான உத்தரவும் இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவைகளிலே ஏதாவது சங்கடங்கள் ஏற்படுமேயானால் அதை நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்கு கொண்டு சென்றால் மிக விரைவாகவே அந்தப்பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும். அதே நேரத்தில், அந்தஉரிமைகளைப் பயன்படுத்துகிறபொழுது மிக எச்சரிக்கையாக பயன்படுத்தவேண்டும்.

இந்தச் சங்கத்திலே இருக்கக்கூடிய தொழிலாளர்களை வாழவைப்பதற்காகத்தான் ஒரு சங்கத்தை நிறுவி அதற்கு ஒரு தலைவர் என்று ஒருவரையும் போட்டிருக்கிறோம். தலைவரே, தனக்கு உரிமையாக அதை எடுத்துக்கொண்டு அதை உள் குத்தகைக்கு விடுகிற நிலைமைகள் உருவாகுமேயானால், வேலியே பயிரை மேய்ந்தால் வேளாண்மை உருப்படுமா? ஆகவே, அதில் சில சங்கடங்கள் இயற்கையாகவே ஏற்பட்டுவிடுகின்றன. எனவே, இந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள், நல்லவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அந்தச் சங்கத்தினுடைய மொத்த உருவமாக விளங்கவேண்டும். ஆயிரம் தொழிலாளர்களுக்குத்தான் தலைவரென்றால். அந்த ஆயிரம் தொழிலாளர்களுடைய வாழ்வுப் பிரச்சினையும் தன்னுடைய கையில் இருக்கிறது என்கிற உணர்வு இருக்க வேண்டும். சேர, சோழ, பாண்டியர் ஆண்ட காலத்தில், மக்கள் அத்தனை பேரும் சேர்ந்த மொத்த உருவமாக மன்னன் விளங்கினான் என்பதை நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்ட உணர்ச்சியோடு தலைவர்கள் இருந்து. இந்தக் கடமையிலே ஒழுங்காக நடந்து கொள்வார்களேயானால், இந்தச் சங்கடங்கள் தீர்க்கப்பட்டுவிடும்.

அடுத்து, இந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குக் குத்தகைக்கு மரங்களை எடுத்துக் கொடுப்பதைவிட, மரங்களைச் சொந்தமாக ஆக்கிக்கொடுப்பது சிறப்புடையதாக இருக்கும் என்கிற கருத்தெல்லாம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

### நவீன முறைகளைப் புகுத்துவதில் கவனம்

தமிழகம் முழுதும் ஏறத்தாழ 4 கோடி பனை மரங்கள் இருப்பதாக நம்முடைய கணக்குகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. அந்த 4 கோடி பனை மரங்களையும் நாம் முறையாக உபயோகித்தால், மிகச் சிறந்த வெளிநாட்டுச் செலாவணியை இந்த நாட்டுக்குப் பெற்றுத்தர முடியும். பனை மரத்திலே இருக்கக்கூடிய எல்லாப் பகுதிகளும் பயனபடுகிற ஒன்று. அதில் எந்த ஒரு பொருளும் வீணாகப் போவதாகச் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட ஒரு நல்ல கருவூலம்—நிலையாக நிற்கிற கருவூலம்—சீக்கிரத்தில் அழிந்துவிடாத உயர்ந்த கருவூலம்—நம்மிடத்திலே கிடைத்திருக்கிறது. ஆனால் அதில் நாம் ஈடுபடுவதில்லை. ஈடுபடாததற்குப் பல காரணங்கள் உள்ளன. தேவையான வருமானம் அதில் கிடைப்பதில்லை. மேலும் அதில் ஈடுபடுவதே ஒரு இழிவான காரியம் என்ற கருத்து இன்னும் பலரிடம் நிலவி வருகிறது. நாமெல்லாம் இன்றைக்கு வெள்ளைச் சட்டை போட்டுப்பழக்கப்பட்டு விட்டவர்கள். ஆகவே, தொழில் செய்வதே ஒரு கேவலமாகக் கருதுகிற ஒரு சமுதாயத்தை வளர்த்துக்கொண்டு வருகிறோம்.

கல்வி பெறுவது என்பது அறிவை வளர்த்துக்கொள்வதற்காக என்கிற நிலையிலிருந்து மாறித் தொழிலைத் தேடிக்கொள்வதற்காக ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு சாதனமெனக் கருதி, ஒரு நாலு எழுத்துப் படித்துவிட்டாலே அதற்குப் பிறகு கிராமத்திலே போய் ஒரு தொழில் செய்வது என்பது தன்னுடைய கௌரவத்திற்கு இழுக்கு என்கிற மனப்பக்குவம் நம்மிடையே வளர்ந்து கொண்டு வந்திருப்பதால்தான், நாளுக்கு நாள் இந்த லைசென்ஸ்கள் எல்லாம் குறைவதற்குக்கூடக் காரணம் என்று கூறலாம். ஆகவே இந்தத் துறையை இலாபகரமான துறையாக மாற்ற வேண்டும்; நவீன கருவிகளைப் பொருத்தி மரமேறுத் தொழிலிலே பயிற்சியளித்தோமானால், படித்த பட்டதாரிகள் எல்லாம்கூட இந்தத் துறைக்கு வருவார்கள். நம்முடைய மாதவரம் பண்ணையிலே அதற்கான பயிற்சிகளெல்லாம் தரப்படுகிறது. அங்கு பி. எஸ் ஸி., பி. ஏ., படித்த மாணவர்களெல்லாம் இன்றைக்குப் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நவீன முறைகளை நாம் இதிலே புகுத்துவதிலே கவனம் செலுத்த வேண்டும். அதற்கு நாம் நம்மைத் தயாராக்கிக் கொள்ளவேண்டும்.

### நிரந்தரமான தொழிலாக ஆக்குவோம்

அந்த முயற்சியில் பனைத்தொழில் சம்மேளனம் முழுமையாக இன்றைக்கு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. அது

## "மானமுள்ள வாழ்வு பெற்றுத் தந்த மகான்"

"ஆகாயத் தாமரையைப் பறித்துக் கொடுத்திடும் அற்புதம் அவர் காட்டிஞரில்லை; ஆனல் ஊமைகளாய் இருந்துவந்த மக்களைப் பேச வைத்தார். உரிமை முழக்கமிடச் செய்தார்; படைபல வந்திடினும் தடைபல நேரிடினும் அஞ்சாதீர் என்றுரைத்தார், 'அஞ்சி அஞ்சிச் சாவார்! அவர் அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே' என்று துக்கம் தோய்ந்த குரலிலே பாடினரே பாரதியார், அந்த அச்சத்தைத் துடைத்தார்; ஆயுதம் தாங்கியவர் எதிரில் சாகப் பயப்படாதாரின் ஓர் அணிவகுப்பை நிறுத்திக் காட்டினர். சிட்டுக் குருவிகளுக்கு வல்லூறை எதிர்த்திடும் ஆற்றல் ஏற்படச்செய்தார், நம்மால் என்ன ஆகும் என்ற ஏக்கத்தை விரட்டினர். நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம் என்ற உறுதி எழச் செய்தார், போர் முகாம் அமைத்து அல்ல, எளிய குடில் அமைத்து; வெட்டச் சொல்லி அல்ல, வெட்டுண்டவர் போக ஏனையோர் அறப்போர்ப் பாதை நடத்திடுக என்றுரைத்து; ஆத்திரம் ஊட்டி அல்ல, அன்பினை ஊட்டி. மகான்களிடம் அமைந்திருப்பதாகக் கூறப்படும் அற்புதங்களைக் கண்டவர் அல்ல, இன்று கதை கூறுவோர். காந்தி அடிகள், நடத்திய அற்புதத்தை நாம் நமது கண்களால் கண்டோம், அந்த 'அரை ஆடை' மனிதர் கோடானு கோடி மக்களுக்கு மானமுள்ள வாழ்வு பெற்றுத் தந்ததை விட, 'அற்புதம்' வேறு என்ன இருக்க முடியும்?"

[காந்தியடிகள் பற்றி தமிழக முதல்வர்—வானொலிச் சொற்பொழிவிலிருந்து —2-10-67]

மிக விரைவாக வளர்ந்து இந்தத் துறைக்கு அது பயன்படுவதாக அமையவேண்டும். இந்தத் தொழிலாளர்களுக்குப் பனந்தோப்புகள் விலைக்கு வாங்கக் கடன் கொடுத்து, கொஞ்சம் கொஞ்சமாக கடனைக் கட்டுகிற முயற்சியில் ஈடுபட வேண்டும் என்கிற கருத்துக்களை எல்லாம் அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டு வருகிறது. இது தமிழக அரசாங்கம் மட்டும் அல்லாது இங்கே, இருக்கிற கதர் கைத்தொழில் குழு மட்டும் செய்கிற காரியமல்ல. மத்திய குழுவினுடைய பொறுப்பும் இணைக்கப்பட்டிருக்கிற காரணத்தாலே இதில் சில பல சங்கடங்கள் இருக்கின்றன. இருந்தாலும் அவைகளை எல்லாம் போக்கி மிக விரைவாகவே இந்தத்தொழிலை நிரந்தரமான தொழிலாக ஆக்குவதற்கான முயற்சியிலே ஈடுபடுவேனென் கிற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### குறை போக்கி நலங்காண....

பனைத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொழில் கிடைப்பதில்லை என்கிற ஒரு குறை சுட்டிக்காட்டப்பட்டது. நியாயமான குறை. ஆகவே, அந்தத் தொழில் நடக்கிற காலம் போக, மீதியுள்ள காலங்களில் கைத்தொழில் குழுவின் மூலமாக நடத்தப்படுகிற இதர தொழில்களிலே அவர்களுக்கு வாய்ப்பைக் கொடுக்க வேண்டும். அல்லது இந்தத் தொழிலோடு ஒட்டிய—தொடர்புடைய பிற தொழில்களிலாவது அவர்கள் கவனம் செலுத்துகின்ற அளவுக்குச் சொல்லி அவர்கள் 12 மாதமும் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை நடத்துவதற்கான முறைகளை மேற்கொள்கிற வகையிலே, அவர்களுக்கு ஆங்காங்கு தொழில்கள் அமைக்கப்படுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு நாம் முயலுவோம் என்கிற உறுதியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு ஏற்படுகிற எதிர்பாராத இடையூறுகளுக்கு ஒரு பிராயச்சித்தம் கண்டாக வேண்டும்.

மரத்திலிருந்து தவறி விழுவது, அல்லது மரம் ஏறுகிற தொழிலாளி எதிர்பாராத வகையிலே உடல் நலக் குறைவாலே பாதிக்கப்பட்டு அவற்ருல் ஆபத்துக்கள் விளைந்து பல்வேறு சங்கடங்கள்—அவர்களுடைய குழந்தைகள் படிக்கின்ற காலத்தில் உதவிசெய்ய முடியாத தொல்லைகள், அவர்கள் குடியிருப்பதற்கு தேவையான நல்ல வீடில்லாத குறை, அவர்களுக்கு மருத்துவ வசதிக்குத் தேவையான பண வசதி இல்லாத தன்மைகள், ஆகிய பல குறைகள் தொழிலாளியைத் தாக்குகின்றன. இந்தத் தொழிலாளர்களை எல்லாம் வைத்து, "தொழிலாளர் இயக்கம்" என்கிற ஒன்றை உருவாக்குவோமேயானல் அவர்கள் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலே உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, அந்த விபத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம். ஆனல் அப்படிப்பட்ட அமைப்புக்களை உருவாக்குகிற அளவுக்கு நம்மிடத்திலே தொழிலாளர்கள் நிறைய பேர் இல்லை. இந்தச் சட்ட திட்டங்களுக்கு உட்படுகிற நிலையிலே நமது பொருளாதாரம் இல்லை. ஆகவே, தொழிலாளர்கள் வளர்ச்சி நிதி என்று ஒன்றை உருவாக்கி, ஒரு தொழிலாளி, ஒரு ரூபாய் வியாபாரம் செய்கிருரென்றல் அதிலே 2 பைசாவை அவர் தன்னுடைய நிதியாகக் கொடுக்கவேண்டும். அரசாங்கம் 2 பைசாவைக் கொடுக்கவேண்டும். ஆக இந்த நான்கு பைசாவையும் ரூபாய்க்கு 4 பைசா என்கிற முறையிலே சேர்த்து வைத்துக் கொண்டு விடுவோம் என்று சொன்னல், அவர்களுக்கு இடையூறு ஏற்படுகின்ற காலத்திலே, அந்த நிதியிலிருந்து உதவி செய்வதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம். அப்படி எந்த இடையூறும் ஏற்படாமல் அவர்கள் இருப்பார்களேயானல் அந்த மொத்தத் தொகை அவர்களுடைய பிற்கால வாழ்க்கைக்கு பயன் உள்ளதாக வழங்க வேண்டுமெனும் முறையிலே ஒரு 10 காரணங்களுக்காக, பாதிக்கப்படுபவர்களுக்கு உதவி செய்கின்ற ஒரு திட்டத்தைத் தயாரித்து, அது மத்திய குழுவினுடைய சிபாரிசுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் அதிலே, ஒரு சிலவற்றை எடுக்கவேண்டும்' இதெல்லாம் அந்த ஆபத்து என்கிற கட்டத்திலே வராது என்று கூறுகிருர்கள். அவைகளை எடுத்து விட்டாவது கொடுங்கள் என்கிற நிலையிலிருக்கிறது. அது இன்றைக்கு மத்திய அரசினுடைய பரிசீலனையிலிருக்கிறது. மிக விரைவாக அது முடிந்து விடுமானல், அதை இங்கே அமுல்படுத்துவதற்கான காரியத்திலே நாம் ஈடுபடுவோம்.

### மதுவிலக்குக் குழுவைப் பயன்படுத்திக் கொள்க....

தாலுகா அளவிலே இந்த மதுவிலக்குக் குழு அமைக்கப்பட வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. இது ஏற்கனவே நடைமுறையில் இருக்கிறது. அந்தக் குழு இப்பொழுது புதிதாக அமைக்கப்படத் தேவையில்லை. நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னேன். இந்தச் சம்மேளனத்திலே தொடர்பு உடையவர்களையும், அந்தக் குழுவிலே அங்கம் பெறச் செய்துவிட்டீர்களேயானல், அவர்களுடைய கருத்துக்களை கேட்பதற்கு வசதியாயிருக்கும் என்று சொன்னேன். ஆனல் அந்தக் குழுவிடத்திலே யாரும் வந்து அவர்களாக முறையிட்டதாக எனக்குத் தெரியவில்லை என்று சொன்னர்கள். ஆகவே, குழு இருக்கிறது. அந்தக் குழுவை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

### ஏழை சிரிக்கவேண்டும்—அதுதான் அரசின் இலட்சியம்

புதிய அரசு பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தாலும், அந்த அரசு இந்தத் துறையை வளர்க்க வேண்டுமென்று பாடுபடுகிறது. கதருக்கோ, கிராமக் கைத்

[23-ம் பக்கம் பார்க்க]

# "முன்நிற்கச் செய்வோம் முனைந்து"

(புலவர் திரு ந. சந்தானம்)

பொன்னாய் மணியாய்ப் புலவரெலாம் பாட்டெழுத
என்கவிதை யும்இரங்கி ஏற்பாயே—அன்னாய்
அமிழ்தன்ன சொல்லாலும் அரும்பொருளும் சேர்ந்த
தமிழ்தன்னை என்நாவில் தந்து.

[கடலின் கரையில்]

பூவிரித்துப் பொன்விரித்துப் பூவுலகில் பாவலரின்
பாவிரித்து நாட்டின் பயன்விரித்துப் பாய்ந்தோடிக்
காதலனைக் கண்டவிளங் காரிகைபோல் காவிரியாள்
போதந்து புன்னகைப் பொங்குங் கடலரசன்
வா! வந்து நின்காதல் தா வென்று வலை வீசி
மேவுந்தன் கைகளினால் மெல்லிடையா ளைத்தழுவக்
கண்டுகேட் டுண்டுயிர்த்த காதற் பெருமையென
விண்படர்ந்து சென்றதுவே வீங்கும் அலைவெள்ளம்!

[கவிஞன் கண்ட கனவு]

காலமெனும் கல்நெஞ்சன் கைகளிலே சிக்கியதால்
கோலமெலாம் குன்றிக் குறுகியதோர் சிற்றூராய்ப்
பொன்கோடி ஈத்தாலும் போய்ப்புகார் வேறிடத்தில்
என்றபெயர் மாறிவிட, இன்றெவரும் வந்துபுகார்
என்றபெயர் தாங்கி இருக்கும் புகார்தனிலே
நின்றிருந்தேன்! நெஞ்சில் நினைவலைகள் தாலாட்டக்
கண்துயின்றேன்! கண்ட கனவுகளோர் ஆயிரமாம்!

[கரை கண்ட கரிகாலன்]

பண்துயின்ற பாடல் பசுந்தமிழால் வாழ்வதனால்
வீரத்தைக் காட்டி விரும்புகவி வாணரிடம்
ஈரத்தைக் காட்டி இமயப் புகழ்காட்டிக்
காவிரிக்கு நல்கரை கண்ட கரிகாலன்
பூவிரிக்கும் மஞ்சத்தில் பொற்கவரி நின்றசைய
என்னே வியப்பன்னான் எந்தும் திருமார்பில்
பொன்னார்ந்த பாதத்தால் புக்குதைத்தான் ஓர்சிறுவன்!
போரென்று நிற்கும் புரவலனின் தோற்றத்தில்
ஈரத்தைக் கண்டேன்நான் இல்லறத்தின் பீடுணர்ந்தேன்!

[கடல் வழி வந்த பொருள்கள்]

எழுமலை யென்றே இலக்கியங்கள் போற்றுமவை
தாழுமலை யாகத் தடைமீறி வானுயர்ந்து
நிற்கின்ற பண்டங்கள் நீள்கடலில் வந்திட்ட
பொற்குன்றம் அன்றோ!

[புலிக் கொடி]

புறவுலகில் என்றும்
கலிக்குப் பகையென்று காட்டிப் பகைவர்
பலிக்கென்று பாய்ந்தசையும் பாரீர் புலிக்கொடியை!

[மகிழ்ச்சி வெள்ளம்]

பொற்பெல்லாம் தேக்கும் புகார்நகர வீதியிலே
கற்பெல்லாம் தேக்கிக் களியூட்டும் பெண்களினம்
வெற்பெல்லாம் தேக்கி விளையாடும் வீரர்கள்
மற்றென்ன வேண்டும்? மகிழ்ச்சிப் பெருவெள்ளம்!

[வளம்]

நீரின் வளத்தால் நிலவளமும் வானத்தில்
காரின் வளமும் கவின்சேர் குடிவளமும்
பொங்கும் குடிவளத்தால் போற்றுசெங் கோல்வளமும்
தங்கும் புகழ்வளமும் தாங்கும் புகார்நகரம்

[கண்ணகி சொன்ன திறம்]

எத்தனையோ தோற்றங்கள் என்கனவில் நான்கண்டேன்
மத்தளமும் யாழும்சேர் மாதவியின் நாட்டியத்தால்
கோவலன் செல்லக் கொடியிடையாள் கண்ணகி, தன்
காவலனை நோக்கியெதிர் காத்திருந்தாள் அவ்வேளை
பொன்னெல்லாம் போகப் புகழ்போகக் கண்ணகியின்
இன்னலும் போக எதிர்வந்த நாயகனை
இன்னமும் என்கால் எழிற்சிலம்பு கொள்கவெனச்
சொன்னதிறம் கண்டேன்!

[தவம் செய்யும் நங்கை]

சொக்கவெள்ளிப் பாற்குடமாய்ப்
பந்தாடும் வெள்ளலைகள் பாயும் கடற்கரையில்
வந்தாலும் நாயகற்கு வாழ்தவம் செய்திருக்கும்
நங்கையை நான்கண்டேன்

[பெண்மையும் தாய்மையும்]

நல்லபெரும் போரினிலே
செங்கை சிவப்பச் சிலவீரர் கொண்டுவந்த
தந்தத்தால் தொட்டிலில் தங்க வடம்சேர்த்தே
எந்தாய் உறங்குக! என்மகனே தூங்கென்று
முந்தையோர் வீரம் முழுவதையும் தாலாட்டிப்
பாலூட்டி இன்தமிழைப் பாலோடு சேர்த்தூட்டி
மாலூட்டி நிற்காமல் மாவீரம் தானூட்டிப்
பெண்மை வளர்ந்து பெருந்தாய்மை யாய்நிற்கும்
வண்ணமும் கண்டேன்

[வீரர்கள்]

வளர்புகழின் வீரர்கள்
நாட்டிற்கு நல்லுடலை நாயகிக்கே தம் நெஞ்சைக்
காட்டும் திறன்கண்டேன்

[மாடங்கள்]

கட்டியநல் மாடங்கள்
சேவல் எனநிமிர்ந்த சீரான தோற்றத்தால்
ஆவல் எழுப்பும் அழகுணர்ந்தேன்!

[வாணிகம்]

வீதியினில்
பொன்னோ மணியோ புனைவடமோ மற்றுமுள
தென்னோ அவையெல்லாம் இங்குண்டாம் இந்நகரில்

இல்லாத தொன்றில்லை இந்நகரின் மாண்புகளைச்
சொல்லாதா ரில்லையினிச் சொல்வதற்கும் எல்லையில்லை!

[நனவு]

கண் விழித்துப் பார்த்தேன் கனவெல்லாம் பொய்யாக
மண்ணிட்டு மேடான மாநகரை நான்கண்டேன்

[அன்றும் இன்றும்]

விண்முட்டும் கோபுரங்கள் வீதிகள் பூங்காக்கள்
எண்ணிக்கை யில்லா இவையாவும் மண்கொள்ளக்
கீற்றுக் குடிசைகளும் கீழ்நோக்கும் தென்னைகளும்
நாற்றும் வளராத நன்செய்யும் நான்கண்டேன்!

[தமிழர் கடன்]

பொற்கால மேன்மையெல்லாம் பொய்யில்லை என்
றெடுத்துத்
தற்காலம் காட்டல் தமிழர் கடனன்றோ!
ஆய்வோம்! அகழ்ந்தெடுப்போம் அந்நாளின்
வண்ணங்கள்!
ஓய்வோம் எனவுரையோம்! ஒன்றுபடும் உள்ளத்தால்
சாகாத சின்னங்கள் சான்றாகக் காலத்தால்
போகாத வண்ணம் புதுமைகள் செய்திடுவோம்

[நம் கடமை]

மண்ணை யொதுக்கி, மறைந்திட்ட பேரழகைக்
கண்ணின் விருந்தாக்கிக் காட்சிப் பொருளாக்கி
எந்நாட் டவரும் இவண்வந்து பார்த்தவுடன்
செந்நாத் தடுமாறச் சிந்தை வியப்படைந்து
முன்னாள் தமிழர்தம் மூதறிவைத் தாமுணர்ந்தே
எந்நாளும் போற்ற இவைசெய்தல் நம்கடமை

[பார்க்கும் நாள் வருமோ]

அந்நாள் இருந்த அழகுத் துறைமுகத்தை
இந்நாளிற் கண்டால் எழில்போன வெற்றிடமாய்க்
கப்பல்கள் நின்றவிடம் காட்டுப் புதர்வளர்ந்து
வெப்பப் பெருமூச்சாய் வேதனைதான் மேலோங்கும்!
விண்ணிற் படர்ந்துவரும் விஞ்ஞானக் கண்கொண்டு
மண்ணில் இதற்கேற்ற மார்க்கந்தான் காணோமா?
சீரோங்கு நன்னகராய்ச் சீர்த்த துறைமுகமாய்ப்
பாரோங்க நிற்பதையும் பார்க்கும்நாள் வந்திடுமோ?
முன்வந்தால் பாரில் முடியாத தொன்றில்லை
பின்வாங்கு வோமா? பெருமைசேர் நம்பணியில்!

[முன் நிற்கச் செய்வோம்]

பொன்நின்று வாழ்ந்த புகார்நகரைப் பூவுலகில்
முன்நிற்கச் செய்வோம் முனைந்து.

**பாராட்டுப் பெற்ற கவிதை :**

# "தொல்பதியைத் தேடுகின்றேன்"

(புலவர் திரு கி. வேங்கடசாமி)

வானம் சினந்ததோ
வையம் நடுங்கிற்றோ
மோனப் பெருங்கிழக்கே
மூண்ட கனலெதுவோ?

ஊழிப் புலியின்
உறக்கம் கலைந்ததுவோ?
ஆழக் கடலின்
அமைதி குலைந்ததுவோ?

ஏழு கடலும்
எழுந்துதிசை தூர்த்தனவே!
ஊளையிடும் காற்றில்
ஒருதனிப்புள் தேம்பியதே!

தேம்பும் மனப்புள்ளின்
தீங்கவிதை கேளீரோ?
பூம்புகார் வெள்ளத்தில்
போனதை கேளீரோ

பண்ணைப் பணைத்த
பழம்பெரிய சோணாட்டில்

பொன்னைக் கொழிக்கப்
புனல்கொழிக்கும் காவிரியாம்

அன்னை கடலை
அணைக்கும் கரையோரம்
பெண்ணின் பெருமையினைப்
பேசும் துறையோரம்

பண்டொருநாள்
மானெடுங்கண் மாதவியை,
மாசாத்து வான்மகனை
கானல் வரியில்

கலங்கவைத்த பட்டினத்தை,

நெஞ்சே,

நாமொருநாள் காண்போம்
நடந்த கதைகேட்போம்
தேமொழியின் யாழைத்
திரும்பவும் பேசவைப்போம்

கானல் வரிப்பாட்டில்
காட்சி தடுமாறி
மானெடுங்கண் மாதவியை
மாயத்தாள் என்றெண்ணி
ஊழாம் வினைதான்
ஒருதனி யாழாய்த்தன்

வாழ்வினையே ஈருமொரு
வாளான தோவென்று
தான்செய்த தீவினை
தன்னைச் சுடுமுன்னே

தான்செய்த மாயத்தைத்
தானொருத்தி மேலிட்டுக்
காவலனார் இல்லம்
குறுகியதும், கண்ணகிதன்

காவலனைக் கண்டு
கனிமுறுவல் பூத்துச்
சிலம்புள கொண்மெனஅச்
சேயிழையை அன்னோன்

"எழுக" எனும் போதே
இழந்துவிட்ட தொல்பதியை

நெஞ்சே,

நாமொருநாள் காண்போம்
நடந்த கதைகேட்போம்
தேமொழியின் யாழைத்
திரும்பவும் பேசவைப்போம்
கொள்ளை அழகு
கொலுவிருக்க, நெய்தலென

வெள்ளைமணல் பூத்து
விளங்கும் கடற்கரையில்
காரெழுதிக் காமன்
கலையெழுதிப் போவாரை

'ஊர்திரைநீர் வேலி
உழக்கித் திரிவாரை
ஒவ்வாய் நடையென்
றொருபுள்ளைக் காய்வாரை

கள்வாய்ச் சிறுநீளம்
கண்ணென்வா தென்பாரை
பொன்மீன் உணங்கஅதைப்
புள்ளோச்சிக் காப்பாரை

கண்மீன் உணங்கஅதைக்
காவாது நிற்பாரை
ஆருயிரைக் கொல்லும்
அணங்கிதுவோ என்பாரை
ஊர்சுணங்கு மென்முலையால்
உய்யாநோய் தீர்வாரை

நெஞ்சே,

நாமொருநாள் காண்போம்
நடந்த கதைகேட்போம்
தேமொழியின் யாழைத்
திரும்பவும் பேசவைப்போம்

பொன்மயிலை ஒக்குமோ
பூம்புகார் ? அம்மயிலின்
கண்வாற் படந்தான்
கடற்பரப்போ? ஆங்கே

ஒருசிறகாய்த் தோன்றும்
ஒருமருவூர்ப் பாக்கம்
மறுசிறகாய்த் தோன்றும்
மறுபட் டினப்பாக்கம்

பாக்கம் இரண்டும்
பயில்பூஞ் சிறகாக
மாக்களெனும் பார்ப்பை
மருவும் மணிமார்பாய்

நாளங்கா டிச்சோலை
நட்ட நடுவிடத்தில்

நாளும் ஒலிமிகுந்து
நாள்முழுதும் ஆர்ப்பதுண்
டாம்!

நெஞ்சே,

நாமொருநாள் செல்வோம்
நடந்த கதைகேட்போம்
தேமொழியின் யாழைத்
திரும்பவும் பேசவைப்போம்

தேம்பும் மடநெஞ்சே!
தேம்பாதே! நாம்விரைவில்
பூம்புகார் காணப்
புறப்படத்தான் போகின்
றோம்!

காலம் அழைக்குமென்று
காத்திருக்கச் சொன்னேன்அவ்
வேழை மனந்தான்
இனியும் பொறுப்பதுண்டோ?

அண்ணா, நீ,

"பூவிரித்த கானலிலோர்
போகம் பழுத்ததெனும்
காவிரிப்பூம் பட்டினத்தைக்
காவியமாய்த் தாரீரோ?

நாவிரிப்பார் பேரவையில்
நான்வியக்க, நீரந்தப்
பாவிரித்தே என்றன்
பரிசுபெற வாரீரோ?''

என்றழைத்த அன்பழைப்பை
இந்த மனங்கேட்டுக்
கன்று குதிப்பதுபோல்
கட்டவிழ்ந்து கூத்தாட

நான் கேட்டேன்,
''பித்து மனப்பேடே!
பேரறிஞர் நம்கவிக்கு
வைத்த பரிசென்ன?!
வழங்கும் தொகையென்ன ? !

குத்து மதிப்பெனும்
கோடிட்டுக் காட்டினரோ
மன்னன் கரிகால்
வளவனோ நம்மண்ணன்?

பண்டு பதினாறு
நூறா யிரம்பொன்
உருத்திரங் கண்ணனெனும்
ஒண்புலவர்க் கேற்ற

பரிசளித்தன் றேபெற்றான்
பட்டினத்துப் பாலையினை?"
என்றேன், என, என்னை
ஏளனமாய்ப் பார்த்துவிட்டு

விண்ணென் றெழுந்தந்த
வேகமனம் பேசியது:
''மன்னன் கரிகாலன்
மாமரபில் வந்தவனைத்

தென்னர் புகழைத்
திசைதோறும் வைப்பவனை,
பாட்டு மடைதிறக்கும்
பக்கமெலாம் நிற்பவனை

ஊற்றுத் தமிழால்
உலகூட்டும் உத்தமனை
சாய்ந்த மரபு
தலைநிமிர்த்த வந்தவனை

ஓய்ந்த கவியை
உயிர்ப்பித்துத் தந்தவனை
நாம்விரைவில் காண்போம்
நடந்த கதைசொல்வோம்

பூம்புகார்ப் பட்டினத்தை
போயின்றே நாம்கொணர்
வோம்
அண்ணனுக்குக் காட்டி
அவன்மனத்தை நாம்பெறு
வோம்
மன்னவன் நெஞ்சைவிட
மாப்பரிசும் வேறுண்டோ?''

என்றாங்கே,
ஒற்றை மனப்புள்
உரைப் பறந்ததுவே

நானும்,

கற்பனையாம் தேரைக்
கடிதுருட்டிப் பின்தொடர்ந்
தேன்!
அந்தோவந் தோவந்தோ
அந்தோநான் என்னென்பேன்!

அந்தோவந் தோவந்தோ
அந்தோஈ தென்னென்பேன்!
ஒற்றை மனப்புள்
உணர்வற்று வீழ்ந்ததுவே!
கற்பனையாம் தேரும்
கடலுக்குள் வீழ்ந்துவே!

ஆம். அங்கே,

கண்ட தேதுவுமில்லை
காண எதுவுமில்லை
விண்டுரைக்க வொண்ணாத
வேதனையில் எங்கிருந்தோ

மாயக் குரலொன்று
மாக்கடலின் ஆழத்தே
ஒய்ந்துறங்கும் பட்டிணத்தை
உற்றுற்றுத் தேடிற்றே:

''நகரமென நேற்றிருந்த நகர
மெங்கே?
நாகரீகம் வீற்றிருந்த சிகர
மெங்கே?
பகலெங்கே? ஒளியெங்கே? பாழி
ருட்டில்
பழம்புதையல் புதைந்தஇடம்
எங்கே? எங்கே?

கானலிலே யாழெடுத்த கன்னி
எங்கே?
கரையெங்கே? துறையெங்கே?
காதல் எங்கே?
வேனிலெங்கே? மாரவெங்கே?
வீதி எங்கே?
வேந்தனுக்கு விழவெடுத்தார்
சேதி எங்கே?

மூறையெங்கே? இறையெங்கே?
முடிகளெங்கே?
முறைமைக்கும் இறைமைக்கும்
குடிகளெங்கே?
அரசெங்கே? முரசெங்கே?
ஆட்சி எங்கே?
அரசுக்கும் முரசுக்கும் வீழ்ச்சி
எங்கே!

குழலெங்கே? யாழெங்கே?
பாண ரெங்கே?
கொட்டெங்கே? தட்டெங்கே?
கூத்தரெங்கே?
அழகெங்கே? கலையெங்கே? ஆட
லெங்கே?
ஆடலுக்கும் பாடலுக்கும்
மாத ரெங்கே?

கம்மியரும் காருகரும் புதைந்த
தெங்கே?
கைவினையும் செய்வினையும்
சிதைந்த தெங்கே?
தொன்மணிகள், பொன்னணிகள்
மறைந்த தெங்கே?
சுண்ணங்கள், வண்ணங்கள்
கரைந்த தெங்கே?

கரையருகே கலங்கரையும்
விளக்க மெங்கே?
கண்விழிக்கும் இடந்தோறும்
விளக்க மெங்கே?
துறையருகே மணிமாட விளக்க
மெங்கே?
தொல்பதியைத் தேடுகிறேன்
விளக்க மெங்கே?

—o—

**புகாரில் ஒரு நாள்:**

# தேன் துளிகள்

[பரிசும் பாராட்டும் பெற்ற கவிதைகள் அல்லாமல் மற்றக் கவிதைகளிலிருந்து சுவையான பகுதிகளைத் "தேன் துளிகள்" என்ற தலைப்பில் இங்கு தருகின்றோம்.]

வானைத் தொடுமென மாளிகை யின்நிரை
வாவியும் கொண்டதுவாம்!—புகார்
தேனைப் பழிமொழி, மானைநி கர்விழி
தேவியர் மண்டியதாம்!
தூய்மை நெறியினர், வாய்மை யுரையினர்
துல்லியர் வாழ்வதுவாம்!—அது
தாய்மை யுயர்வினைச் சேய்மையி லின்றியே
தன்னகம் கொள்வதுவாம்!

—கு. பாலசுப்பிரமணியன்

மேழிச் சிறப்பாலே மிக்கவளந் தேக்கித்தன்
ஆழிக் கணவனுடன் அன்பாய் அணைவதற்குக்
காவிரிய வந்தே கடலோர ஊரிடையிற்
காவிரிபோம் பட்டிணமே காவிரிப்பூம்
பட்டிணமாம்!
முத்தமிழும் சங்கு முழங்குங் கடல்நகரம்!
முத்தமிழும் பொங்கி விளங்கும் புகார்நகரம்!
நட்டோர் புகும்புகார்! நண்ணார்வந் துட்புகார்!
கெட்டுப் பிறநகரம் கிட்டார்அப் புகார்நகரார்!
வாரியுண்ட நீரின் வளத்தால் பொழிகின்ற
மாரி வளங்குறையா வண்மையினல் காவிரித்தாய்
குன்றிற் பிறந்து குமுறும் கடல்தழுவி
நின்று புகழ்பாடும் நீண்ட புகார்நகரம்!
கோட்டை மதில்மேல் கொடிக்கம்பத் துச்சியின்
மேல்
கேட்டை அழிக்கக் கிளர்ந்தெழுந்து சோழர்பகை
மாயும் படியாக மாற்றுரைக் கொன்றே விண்
பாயும் புலிக்கொடியால் பாராண்ட பண்டைநகர்!

—புதுமதியன்

மடலவிழ் தாழை புன்னை
மணமது சூழக் காதல்
உடலுயிர் கலந்த வாழ்வின்
உயர்மணம் கரையில் சூழக்
கடலுடன் காவி ரிப்பெண்
கலந்திடும் திரு மணத்தின்
திடலதிற் பூம்பு காரின்
திகலெழில் பிறந்த தம்மா!
கள்ளம் அறியார், கலையறிவார்:
கன்னித் தமிழின் கவிதையுடன்
தள்ள முடியாக் குழலிசையும்
தனியாழ் அமுதும் இயல்கூத்தும்
வெள்ள மதுவாய் நெஞ்சினிலே
விளைவிப் பார்காண் புகார்மாந்தர்!
கொள்ளை யழகின் இருப்பிடமாம்
குன்றாப் புகழ்சேர் புகார்வாழி!

—மின்னூர் சீனுவாசன்

——o——

# நெஞ்சை விட்டகலா நினைவுகள்

(மோகூர் திருமதி வாசுகி, எம்.ஏ., எம்.லிட்.,)

இக்கட்டுரை ஆசிரியை, டில்லியில் உள்ள மிராண்டா மகளிர் கல்லூரியில் தமிழ்த் துறையில் பணியாற்றுகிறார். அண்மையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் ஒரு பிரதிநிதியாக அவர் கலந்து கொண்டார். தமிழ் மாநாட்டின் சிறப்பியல்புகள் பற்றி, தெள்ளு தமிழில் சுவைபட இக்கட்டுரையில் கூறுகிறார். மாநாட்டு ஊர்வலத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது "ஊர்வலத்தைக் கண்டபோது மெய்சிலிர்த்து, கண்களில் இன்பக் கண்ணீர் தளும்பிற்று" என்று அவர் கூறுவது முழுதும் உண்மை. திருமதி வாசுகி அம்மையாருக்கு மட்டுமல்ல, அங்கே கூடியிருந்த இலட்சக் கணக்கான மக்களின் கண்களில் உவகை நீர் பெருக்கெடுத்தோடியது என்று சொன்னால் மிகையாகாது. தமிழக முதல்வருக்கு, தமிழ் உணர்வை வளர்த்த இருபெரும் ஆசான்களில் ஒருவரான மோகூர் கந்தசாமி முதலியார் அவர்களின் புதல்வியார் திருமதி வாசுகி அம்மையார். சென்ற இதழில் இவரைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

—ஆசிரியர்.

தில்லியிலிருந்து வந்த "சதர்ன் எக்ஸ்பிரஸ்" (Southern Express) இரயில் சென்னை சென்டிரல் நிலையம் அடைந்தது. தாய்நாட்டிற்குத் தமிழ் மொழி மாநாட்டிற்கு வந்திருக்கிறேன் என்ற உணர்வு பொங்கி உள்ளத்தில் இருந்த சோர்வையே மாற்றிவிட்டது. இரயில் நிலையத்தை விட்டு வெளியே வந்தேன். மாநாட்டின் ஆரம்ப விழா பற்றித் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் பட்டொளி வீசி பறந்ததைக் கண்டேன். சொல்லொணு இன்பம் இதயத்தில் பரவி நின்றது. "கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளுங் களிப்பே" என்று வள்ளலார் இறைவன் தன்மையைக் கூறியதுபோல், இங்குத் தமிழன்னை அனைவருக்கும் களிப்பையருளும் கன்னித் தமிழாக இருந்தாள் எனலாம்.

## பெண் குலத்திற்கே பெருமை

புத்தாண்டு முதல் நாள் மாநாட்டை ஒட்டிய நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. தமிழ் வளர்த்த சான்றோர் பலருக்குச் சிலையமைத்தபோதும், மகளிர் பெருமைக்கே வழிகாட்டியாக அமைந்த ஔவை சிலையும், தமிழ் நாட்டுத் தனிப்பண்பாக அன்றும் இன்றும் விளங்கும் கற்பு வழி நிற்கும் செல்வியர்க்குக் குன்றின் மேலிட்ட விளக்குபோல் திகழும் கற்புக்கரசி கண்ணகியின் சிலையும் விளங்குவதைக் கண்டு பெண் குலமே பெருமையடைகிறது. அத்துடன் நின்றுவிடாமல் அவர்களை உயர்த்திய பண்புகள் எவையோ அவற்றைப் பின்பற்றி நாமும் உயரவேண்டும் என்று ஒவ்வொரு பெண் உள்ளமும் சிந்திக்கவேண்டும். செந்தமிழ்க் கடற்கரையில் செந்தமிழ்க் காவலர்கள் காத்து நிற்கின்றார்கள். சிலைகளைக் காணும்போது தமிழின் தொன்மையும், வளமும், இனிமையும், சிறப்புந் தோன்றி சிலையென்பதை மறந்து வள்ளுவரையும், இளங்கோவையும் (கண்ணகி சிலை நினைவு), கம்பரையும், பாரதியையும், பாரதிதாசனையும் காண்கிறோம். அவர்கள் தமிழ் முழக்கத்தைக் கேட்கிறோம். அந்த அளவுக்குச் சிலை நம்மைச் சிந்திக்க வைக்கிறது. அவர்கள் வளர்த்த வளமான தமிழ்ப் பயிரைப் பூச்சிகள் அழிக்காமல் தக்க மருந்திட்டுக் காக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

பல்கலைக் கழகத் தேர்வு மண்டபத்தில் தமிழ் நாட்டுக் கலைகளின் சிறப்பை எடுத்துக் காட்டும் கண்காட்சியை மூதறிஞர்—இராஜாஜி அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றினார்கள். பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர் ஏ.எல். முதலியார் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சிறந்த சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மக்கள், கலைக் காட்சியைக்காண உள்ளே சென்று

அருங்கலைச் செல்வங்கள் பலப்பல இடம் பெற்றுள்ளதைக் கண்டு மகிழ்ந்தனர். தமிழ்நாட்டுக் கோயில்களில் தெய்வங்களுக்கு அணிவிக்கப்படும் ஆபரணங்களும், சுடர்விட்டு ஒளி வீசும் குத்துவிளக்குகளும் இருந்தன. சிறந்த வைத்திய மூலிகைகளும், சித்த வைத்தியங்களும் இடம் பெற்றன. தமிழர்களின் இலக்கியப் படைப்புகளைச் சித்தரிக்கும் கைவண்ணங்களும் கண்காட்சியாகத் திகழ்ந்தன.

### வரலாறு கண்டிராத எழுச்சி

உலகத் தமிழ் மாநாட்டு விழாவையொட்டிச் சென்னை நகரமே விழாக்கோலம் பூண்டு விளங்கியது. பூம்புகாரிலிருந்து புறப்பட்ட பெரியதோர் ஊர்வலம் கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்ந்தது. உள்ளத்தைத் தொடும் காட்சிகளை, அலங்கார வண்டிகளில் கண்டபோது மெய்சிலிர்த்துக் கண்களில் இன்பக் கண்ணீர் தளும்பிற்று. அதியமான் ஔவைக்கு நெல்லிக் கனி அளித்தது, பாரி முல்லைக்குத் தேர் ஈந்தது, கண்ணகி பாண்டியன் முன் வழக்குரைத்தது, முரசு கட்டிலில் மோசிகீரனார் உறங்கியது, ஆராய்ச்சிமணி அடிக்கும் பசு, இன்னும் இவை போன்ற பழம்பெருமைகளை விளக்கியும், கிராமிய நிகழ்ச்சிகளும், கரகம், பரதம் போன்றவையும் இடம் பெற்றன. நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படையின் விளக்கம், முருகனும் ஆறுபடை வீடுகளும் இருந்த சிறப்பைக் கண்டபோது சங்க இலக்கியத்தைப் பொது மக்கள் அறியுமாறு செய்த பெருமையினை நினைந்து மகிழ்ந்தேன்.

### கற்பனையிலும் எண்ண இயலாத பெருவிழா

அன்று மாலை (3-ம் தேதி) கடற்கரையில் தொடக்க விழாவிற்காக மக்கள் கூடியிருந்தனர். இலட்சக்கணக்கான மக்கள் அமைதியான முறையில் கூடியிருந்ததும் அவர்கள் காட்டிய ஆர்வமும், கட்டுப்பாடும், கணணியமும் பிறநாட்டினரை வியக்கச் செய்தது. ஒவ்வொரு உள்ளமும் தன் தாய்மொழியின் சிறப்பை எண்ணியே பொங்கும் மகிழ்ச்சியுடன் காணப்பெற்றது. கற்பனையிலும் நினைக்க முடியாத ஒரு பெருவிழா மொழிக்காக நிகழ்வதை நினைக்கும்போதே தமிழின் பெருஞ்சிறப்புத் தோன்றுகிறது. இந்தியக் குடியரசு தலைவர் பேரறிஞர் சாகீர் உசேன் அவர்கள் ஆற்றிய சிறந்த உரை, அவருக்கு இருந்த தமிழ் இலக்கியப் புலமையையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்தியதுடன் மக்கள் மனத்தைக் கவர்ந்ததாகவும் அமைந்தது. அமைச்சர்கள் பலரும் பங்குகொண்டு உரையாற்றினர்.

இந்த நன்னாளில், வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய அரியதோர் சாதனையைத் தமிழக அரசு செய்தது குறித்து, தமிழ் நெஞ்சங்கள் பூரித்து மகிழ்கின்றன.

அதாவது திருக்குறள் ஆராய்ச்சிக்கென மும்மூன்று இலட்சம் ரூபாய், மூன்று பல்கலைக் கழகத்திற்கும் அந்தந்தப் பல்கலைக் கழக துணைவேந்தர்களிடம் பொதுமக்கள் அறிய அளித்தது மிகச் சிறப்பானதாக இருந்தது. உலகம் உள்ளவரை இந்த அரிய செயல் நிலைபெற்று வளரும், வாழும் என்று நினைக்கும்போது நெஞ்சம் நிறைந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. கடைசியாகப் பலவகையான புதுமுறை வாணவேடிக்கைகளைக் காணப் பெற்ற மக்கள் மகிழ்ச்சி பொங்கும் உள்ளங்களோடு இல்லம் நோக்கி நடந்தனர்.

பிரதிநிதிகளுக்கு என்று அமைக்கப்பட்ட விரைவு வண்டிகளில் (Express Bus) நானும் மற்றவர்களுடன் சேர்ந்து இரவு விருந்துக்குச் சென்றேன். அன்றையிலிருந்து தில்லி திரும்பும்வரையும் அமுதான விருந்தோடு உபசரித்த முறையைப்பற்றிச் சொல்வதற்குரிய ஆற்றல் இல்லையென்றே சொல்லலாம். மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்ட பல்வேறு உணவுவகைகளைக் காணும்போது, எதை எடுத்து உண்பது என்று தெரியாமல் திகைக்க வேண்டியதாக இருந்தது. முடத்தாமக் கண்ணியார் எழுதிய பொருநராற்றுப்படையில் சோழன் அரண்மனையில் புலவர்களுக்கு அளித்த சிறப்பும், விருந்தும் நினைவுக்கு வந்தன. தமிழ் இலக்கியங்களில் விருந்து உபசரித்த முறை சான்றுகள் பல உள்ளன. அவற்றையெல்லாம் கடந்து நின்றது, இந்த முறை தமிழகத்து புலவர்களுக்கு விருந்து அளித்தது என்றுதான் கூற முடியும். உள்ளே நுழையும்போதே தமிழ்ப்பண்பாட்டை விளக்குவதுபோல் சந்தனம், பன்னீர், மலர்கொடுத்து அழைத்தது மிகச் சிறப்பாக இருந்தது. மிக்க அன்பும், பணிவும், இனிய முகமும், புன்முறுவலும் கொண்டு எங்களை உபசரித்த முறையைச் சிறப்பாகக் கூறவேண்டும். ஏதோ ஓர் இனிய உலகில் இருப்பது போன்றே மகிழ்ந்து இருந்தேன். உணவுவகைகளைத் தயார் செய்தவர்கள் திறமையைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. பலவகைகள் ஒரு நாளும் ஒரு குறையுமின்றி செம்மையாகவும், சுவையாகவும் தயார் செய்து காலமறிந்து அளித்த அவர்களின் அன்பை நினைத்துப் பார்த்து மகிழ்ச்சியோடு நன்றி சொல்லுகிறேன்.

### கண்ணுக்கினிய காட்சி—கருத்துக்கு விருந்து

கலைநிகழ்ச்சிகளின் சிறப்பை எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. தலைசிறந்த நடிகர்களும், நடிகைகளும், கலைஞர்களும், இசைப்பேரறிஞர்களும் பங்கேற்று அளித்த கலைவிருந்து கண்ணுக்கு இனிய காட்சியாகி கருத்திற்கும் சுவையான ஊட்டமாகியது. பெருங்குறை என்னவென்றால் அன்றாட நிகழ்ச்சி நிரலைக் காணும்போது எங்கு போவது என்ற குறையேற்படும். மனமின்றி ஓர் இடத்துக் கலை நிகழ்ச்சிக்குப் போகமுடியாமல் விட்டு விடுவேன். இவ்வாறே எல்லா நாட்களும் கண்ணுக்கும், கருத்துக்கும், அரியதோர் விருந்தினை அளித்த சிறப்பை எண்ணி மகிழ்கிறேன்.

கருத்தரங்கு பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில் இனிய நாதசுர இசையுடன் ஆரம்பமாகும். இறைவணக்கம் திருக்குறளோடு ஆரம்பமாகி, பாரதியார் பாடலில் “யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிப்போல்” என்ற வரி தமிழ் உள்ளங்களைத் தொட்டிழுக்கும் முறையில் தொடர்ந்து பாடி முடிப்பர். ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலர் படிப்பார்கள். ஆர்வமுடன் கேள்விகளைக் கேட்டு ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளவும், புதிய கருத்துக்களைத் தெரிந்துகொள்ளவும் வாய்ப்புகள் கிடைத்தன. ஆயினும்

[20-ம் பக்கம் பார்க்க.]

# மறக்கமுடியாத மாநாட்டு நினைவுகள்

(திரு. ஏ. ரங்கநாதன்)

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

இந்தக் குறளை எத்தனை தமிழர்கள், உட்பொருளை உணர்ந்து, சரியான பொருள் சொல்ல முடியும்? தமிழர்களின் நிலை இப்படி இருக்கும்போது, தமிழ் நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து வாழும் ஐரோப்பியர் ஒருவர் இந்தக் குறளை பழுதற்ற உச்சரிப்புடன் சொல்லி, பொருளையும் விளக்குவாரானல், யார்தான் வியக்காதிருக்கமுடியும்!

### ருஷ்ய அறிஞர் சொன்ன குறளின் பொருள்

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகை தந்த ருஷ்யக் குழுவினருள் ஒருவரான பேராசிரியர் எஸ். ஜி. ரூடின் (S. G. Rudin) மேற்கூறிய குறளைச் சொன்னபோது, என் காதுகளையே நான் நம்பமுடியவில்லை. அவரிடமே, குறளின் பொருளைக் கூறுமாறு கேட்டபோது அவர் புன்னகையுடன் விளக்கம் சொன்னர்.

திரு. ரூடின் அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாகவே திருக்குறள் ருஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப் பட்டுவிட்டதாகச் சொன்னர். அருகிலிருந்த ரஷ்ய குழுவின் தலைவர் திரு. செலிசேவ் இந்தக் கூற்றை ஆமோதித்தார்.

ஜனவரி ஆறும் நாள் கருத்தரங்கில் பேசிய ஸ்விட்சர்லாந்து தேசத்தைச் சேர்ந்த டாக்டர் கார்ல தெல்லர் (Dr. Garl Deller) தமிழில் பேசுவதை மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டார். அவருடன் எங்களோடு பேச்சில் கலந்துகொண்ட பேராசியர் ரூடின் அவர்கள் குறளைப் பற்றி மேலும் விளக்கவுரை கொடுத்தார்.

"ஒரு தாய் பேருவகை அடைவது இரண்டு முறை என்று திருவள்ளுவர் சொல்லுகிறர். இந்தக் கருத்துக்காக வள்ளுவருக்கு நான தலைவணங்குகிறேன. ஆனல் தமிழ் இலக்கியங்களை படிப்பவர், ஒரு தாய் மூன்றுமுறை களிப்படைவாள் என்று சொல்லலாம். அதாவது, அவள் முதல்முதலாக, தனக்கு ஆண்குழந்தை பிறந்தபோதும், அடுத்ததாக, அந்த ஆண்மகன் வளர்ந்து கல்விக் கேள்விகளால் சிறந்தவனுகும் போதும் களிப்படைவாள். இரண்டையும் விட, மாற்றானின் அம்பு மார்பில் துளைத்த அந்த மகன் மடிந்தான என்று அறிந்தபோது களிப்பு மிக்கவளாவாள்" என்ருர்.

இதைக் கேட்டதும் நானும், சங்க நூல்களை நன்கு பயின்ற என் நண்பர்கள் இருவரும் உண்மையிலேயே பிரமித்துப் போய்விட்டோம்.

பிரபல முஸ்லிம் வணிகர் ஒருவர் அளித்த விருந்தில், ருமேனிய நாட்டுப் பிரதிநிதியாகிய டாக்டர் டெமிட்ரியன் (Dr. Demetrian) என்ற பெயருடைய அறிஞரோடு அறிமுகமாகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவர் மேல்நாட்டுப் பாணியில் உடை அணிந்திருந்தும், தலையில் காந்திக்குல்லாய் அணிந்திருந்தார். இதைப்பற்றி அவரிடம் கேட்டபோது, அவர் ஒரு சொற்பொழிவே நிகழ்த்திவிட்டார்.

"காந்தியின் அரசியல் கொள்கையை முழுவதும் ஆதரிக்காவிட்டாலும், அவரை உலகம் போற்றும் உத்தமராக, இயேசு, புத்தர், முஹமது நபி போன்ற மகான்களுடன் வணக்கத்திற்குரியவராகக் கருதுகிறேன். அவரிடம் எனக்குள்ள பக்தியையும் மரியாதையையும் காண்பிக்கும் நோக்கத்துடன்தான், நான் இந்தக் காந்திக் குல்லாயை இந்தியா வந்ததும் அணிய ஆரம்பித்தேன்" என்ருர்.

[ கட்டுரை ஆசிரியர் திரு ஏ. ரங்கநாதன் தமிழார்வம் மிக்கவர். உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொண்ட மேலைநாட்டுத் தமிழ் அறிஞர்களைப் பற்றிச் சுவைப்படச் சொல்லுகிறர் தன்னுடைய கட்டுரையில்.

—ஆசிரியர்.

சிகப்பு கூரை நாட்டுப் புடவை கட்டி, நெற்றியில் குங்குமப் பொட்டுடன் வந்து நின்ற அழகிய இளம் பெண்ணைப்

—20-ம் பக்கம் பார்க்க

## நெஞ்சை விட்டகலா நினைவுகள்—[18-ம் பக்கத் தொடர்ச்சி]

காலம் போதிய அளவு இல்லாததால் மேலும் பல அறிஞர்கள் படிக்கும் வாய்ப்பைப்பெற முடியாமல் போய்விட்டதுடன், அவர்கள் கருத்துக்களை அறியவும் இயலாமல் போய்விட்டது.

### இதயத்தில் பதிந்துவிட்ட பூம்புகார்

பொதுமக்கள் மனங்குளிர அமைந்த பூம்புகார் சிறப்பைக் காணுதல் வேண்டும். பழம்பெரும் நகரை நினைவுபடுத்தும் பெயரைத் தாங்கி, அழகும், பொலிவும் பெற்றுத் திகழ்ந்தது. அறிஞர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பாக நடைபெறும்படி செய்தனர். ஊக்கத்துடனும், ஆர்வத்துடனும் ஆடவரும் மகளிரும், குழந்தைகளும் சளைக்காமல் சொற்பொழிவு களைக் கேட்கவும், பட்டி மன்றத்தைப் பார்க்கவும், கவி யரங்கைக் காணவும், புலவர் குழுவுக்குச் சிறப்புச் செலுத்தவும் வந்து குவிந்தனர். ஒரு நாள் பட்டி மன்றத்தில் 'அன்பில் சிறந்தவர் யார்? கண்ணகியா? மாதவியா?' என்பது குறித்து பலர் பேசியதைக் கேட்ட போது என் உள்ளத்தில் ஐயமேற்பட்டது. அந்த அளவுக்கு இருதரப்பிலும் ஆற்றல்மிக்க பேச்சுத்திறனால் பொதுமக்கள் மகிழ்ச்சி நிறைந்த கைதட்டல் ஆர வாரத்தைப் பெற்றார்கள். அன்று பூம்புகார் அமைப்பை யும், சிறப்பையும் கண்டு சுற்றிப் பார்த்தேன். அழகான தமிழ்ச்சொற்கள் கடைகளின் பெயராக இருந்தன. பொதுமக்கள் காண்பதற்கென்றே ஊர்வலத்தில் இடம் பெற்ற அலங்கார வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. என்னைக் கவர்ந்தது வண்ணக் கோலக் காட்சியாகும். நெல் உமியையும், மணலையும் கொண்டு பல வண்ண ஓவியங்கள் போன்று கையினால் கோலங்கள் போடப்பட் டிருந்ததை நோக்கும்போது, கலைத்திறனைப் பாராட்ட வேண்டியதாகும். தமிழ் நாட்டில் கோலம் போடுவது மரபாக இருந்தாலும் மார்கழி மாதத்தில் சிறப்பாகவும், அழகாகவும் தெருக்களில் வெண்மையான கோலப் பொடியும், குருவிக்கல் (செம்மண்) பொடியும் சேர்த்துப் போட்டுத் தெருவிற்கே அழகையும் தனியான கலையை யும் அளித்துவிடுகிறது. பெண்களின் கைத்திறனும் இன்று அந்தக் கலை எவ்வளவு சிறப்பாக வளர்ந்துள்ளது என்று வண்ணக் கோலக் காட்சியை நோக்கப் புலனா கிறது. அந்தக் கலை வளரவேண்டும். அதற்கு வாய்ப்புத் தரவும் வேண்டும்.

### அன்னைக்குச் செய்யும் சேவை

தமிழ்நாட்டுப் பலதுறை அறிஞர்களும், இளைஞர்களும், மகளிர்களும் சளைக்காமல் இன்முகங்காட்டி எங்களை உபசரித்த முறையை நினைக்குந்தோறும் நெஞ்சம் நெகிழ்கிறது. மகிழ்ச்சி பொங்குகிறது. மேலும் தொண்டர் படைகளும், காவற்காரர்களும், விரைவு வண்டி ஓட்டு பவர்கள், அதில் பணியாற்றியவர்களும் பொறுப்பும், கடமையும் கொண்டு நடந்ததுடன் இன்றி, அன்பான தமிழ்க் குரலையும் பெற்றிருந்தனர். எனவே இந்தத் தமிழன்னையின் சிறந்த விழாவில் ஒவ்வொருவரும் தன் தாய்க்குச் சேவை செய்வதாகவே நினைத்து அன்பும், பண்பும், ஆர்வமும் கொண்டு பணியாற்றினர். அவர்கள் ஒவ்வொருவரையும் இந்தப் பட்டியலில் குறிக்கப்படாமல் விடப்பட்டிருக்கும். எல்லா சகோதர சகோதரிகளுக்கும் என் அன்பு கலந்த நன்றியை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தில்லிக்குத் திரும்பும் நாள் நெருங்கி வருவது நினைவு வந்தபோது கண்கள் கலங்கின. தேமதுரத் தமிழோசை தெருவெல்லாம் முழங்கும் சிறந்த காட்சியையும், பூம்புகாரில் நடந்த நிகழ்ச்சி – சிலப்பதிகாரத்தையும், இந்திர விழாவையும் நினைவுபடுத்தி வருவதையும் கண்டு கேட்டு மகிழ்ச்சியோடு இருக்கும் தமிழ் நாட்டை, தாய்நாட்டைப் பிரியுங்கால் நெஞ்சம் பொறுக்காத துன்பத்தைத் தாங்கியே வந்த என்னை சென்ட்ரல் நிலையத்திலிருந்து சதர்ன் எக்ஸ்பிரஸ் இரயில் சுமந்து புறப்பட்டது.

தமிழ்த்திருநாடே! தாய்த்திருநாடே!
வாழ்க! வளர்க!!

---

## மாநாட்டு நினைவுகள்—[முன் பக்கத் தொடர்ச்சி]

பார்த்து, 'இவர் எந்த நாட்டுப் பிரதி நிதியோ' என்று நாங்கள் திகைத்து நின்றபோது, அவரே நெருங்கி வந்து, தாய்லந்து நாட்டிலிருந்து வந்த பிரதிநிதியென்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவர் ஆங்கிலமும் தமிழும் கலந்து பேசினார்.

### அரியதொரு வாய்ப்பு

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்ட எல்லாப் பிரதிநிதிகளும், தங்களுடைய தாய்மொழிகளிலும், தமிழ் நடையிலும் பேசினார்கள். ஐரோப்பிய பிரதிநிதிகள் தமிழைக் கற்பதிலும், பிழை யின்றி பேச முயலுவதிலும், பல்வேறுபட்ட ஆராய்ச்சி களை நடத்துவதிலும், காட்டிய உண்மையான ஆர்வ மும் ஊக்கமும் தமிழன்பர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டுவதாக அமையவேண்டும். ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து வந்திருந்த இந்த மேனாட்டு அறிஞர்கள், தமிழ் பேசுவதைக் கேட்கும் வாய்ப்பே அரியதுதான்.

ஏறக்குறைய எல்லா ஐரோப்பிய பிரதிநிதிகளும் தமிழ்ச் சொற்களைச் சரியாகத்தான் உச்சரித்தார்கள். உச்சரிப்ப தில் அவர்களுக்குச் சிரமம் கொடுத்த எழுத்துக்கள்— 'ழ, ஷ,' போன்றவை. 'வாழைப்பழம்' என்பதை,'வாளப் பளம்' என்று, இந்த தமிழ் மண்ணிலே பிறந்த சிலர் சொல்வதில்லையா?

இலங்கை அமைச்சரின் மனைவியார் திருமதி புனித வதி திருச்செல்வம் அவர்கள், மாநாடு ஆரம்பிப்ப தற்கு மூன்று வாரங்களுக்கு முன்பே சென்னை வந்து, மாநாட்டு நிர்வாகிகளின் அரும்பெரும் பணிக்குத் தன்னாலியன்ற உதவியை அளித்ததாக, தன்னடக்கத் துடன் சொன்னபோது, அவர் திருச்செல்வத்திற்கேற்ற புனிதவதி தான் என்று நினைக்கவே எனக்கு தோன்றி யது.

# "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்"...

[திரு ஏ. கோபாலகிருஷ்ணன், ஆணையாளர், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், இராமநாதபுரம் மாவட்டம்.]

பொங்கல் நன்னாளை நாடெங்கிலும் ஏர்முனை திருவிழாவாக நடத்த தமிழக அரசு பணித்துள்ளது. இத்திருவிழாவின் போது புத்துணர்ச்சியும் புது வேகமும் கொடுத்து விவசாயிகளுக்கு அமோக விளைச்சலை ஏறபடுத்த நம்மை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டுமென்பது தமிழக அரசின் அவா.

எத்துறையிலும் ஏற்றம் பெற்று பீடு நடை போடும் தமிழனனைக்கு மற்றுமோர் அணிகலனாய் அமைந்தது மாண்புமிகு முதலமைச்சருக்கு கிராமநலத் துறையின் அமைச்சர் மாண்புமிகு திரு முத்துச்சாமி அவர்கள் அளித்துள்ள சிறப்புத் திட்டங்கள். இத்திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த தினமாகிய 1968-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாளுக்கு முன்பு நிறைவேற்றி தங்களது காணிக்கையை, சமர்ப்பிக்க வேண்டுமென்பது ஊராட்சி ஒன்றியங்களின் குறிக்கோள்.

இராமநாதபுரம் மாவட்ட அளவிலான ஏர் முனை விழாவும், மாண்புமிகு முதலமைச்சருக்குரிய காணிக்கைச் சிறப்புத் திட்டத்தின் தொடக்க விழாவும் பொங்கல் புது நாளன்று திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திருவிடையார்பட்டி என்ற கிராமத்தில் மாண்புமிகு சட்டம், கூட்டுறவு அமைச்சர் திரு மாதவன் அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது.

ஏர்முனை விழாவிலே தரிசாக இருக்கும் விளை நிலங்களைப் பண்படுத்தி பாசன வசதி ஏற்படுத்தி புஞ்சைகளை நஞ்சைகளாகவும், நஞ்சைகளை இரு போக நஞ்சைகளாவும் ஆக்க வேண்டும் என்பது திட்டத்தின் ஓர் அம்சம். இதற்காக ஊராட்சி ஒன்றியங்கள் இயந்திர உழவுக் கருவிகளை வாங்கி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மலிவு வாடகையில் அளிக்க வேண்டுமென்பதும் குறிக்கோள். திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் விவசாயிகளுக்கு வளமளிக்கும் திட்டத்தை துரிதமாக செயல்படுத்த முயற்சி எடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்திலேயே முதலாவதாக 1968-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 6-ம் நாளன்று ஓர் இயந்திர உழவு கருவியை (எஸ்கார்ட் டிராக்டர்) வாங்கியுள்ளது.

மேற்படி உழவுக் கருவிக்கு இணை இயந்திரங்களாக கொழுக் கலப்பை, கூண்டுக் கலப்பை, கட்டிக் கலப்பை சமப்படுத்திப் பரம்படிக்கும் இயந்திரம் இணைப்பு வண்டி ஆகியவை சுமார் ரூ. 40,000 செலவில் வாங்கப்பட்டுள்ளது. இவ்வியந்திர உழவுக் கருவியை மாண்புமிகு சட்டம் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இத்திருவிழாவின்போது இயக்கி வைத்தார்கள். ஓராண்டுச் சிறப்புத் திட்டத்தின் கீழ் வாங்கப்பட்டுள்ள 'கிரிஷி பவர் டில்ல'ரும் விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு விடப்பட்டு வருகிறது.

**பாலைவனம் சோலைவனமாயிற்று!**

பெரும் பாசனத் திட்டங்களை நிறைவேற்றும் வாய்ப்புக்களையெல்லாம் முற்றிலும் பயன்படுத்திய பின்பு, பாசன வசதிகளை மேலும் பெருக்குவதற்குள்ள ஒரே சாத்தியக் கூறு, பூமிக்கடியிலுள்ள தண்ணீரை கிணறுகளில் பம்புகள் செட்டுக் அமைப்பதன் மூலமாக விளை நிலங்களாக பயன்படுத்துவது தான். இதை நன்கு உணர்ந்து கொண்ட தமிழக அரசு இத் திட்டங்களுக்குப் பெரு நிதி அளிக்க முன் வந்தது போற்றத் தக்கது. தனிப்பட்ட முறையில் கடன் பெற்று பாசனக்

**இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், திருவிடையார்பட்டி என்ற கிராமத்தில் மாவட்ட அளவிலான ஏர் முனை விழாவும், மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த தின காணிக்கைச் சிறப்புத் திட்டத்தின் துவக்க விழாவும், பொங்கல் திருநாளன்று நடைபெற்றன. மாண்புமிகு சட்டம், கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு எஸ். மாதவன் அவர்கள் இச்சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.**

**அவ்விழாவினைப் பற்றியும், கிராம வளர்ச்சிப் பணிகளை சிறப்புடன் ஏற்று நடத்தும் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்றுவரும் ஆக்க வேலைகளைப் பற்றியும் விவரிக்கிறது இக்கட்டுரை. மற்ற ஊராட்சி ஒன்றியங்களி பணிகள்ன் பற்றிய விவரங்கள் தொடர்ந்து ''கிராமநல''த்தில் வெளி வரும்.**

**— ஆசிரியர்**

கிணறு மின்னிறவை இயந்திரமும் அமைத்துக்கொள்ள இயலாத நிலையிலுள்ள எண்ணற்ற விவசாயிகளுக்கு சமுதாயக் கிணறு அமைக்கும் திட்டம் அரசு அளித்த ஒரு பெரும் வாய்ப்பாகும்.

சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட பொது இடங்களிலோ அல்லது தனி நபர் உரிமை விட்டுக் கொடுக்கும் இடங்களிலேயோ இக்கிணறுகளை அமைத்து மின் இறவை இயந்திரம் மூலம் தண்ணீர் வழங்கும் பொறுப்பை ஊராட்சிகள் ஏற்று நடத்தி இதற்கான கட்டணத்தை வசூல் செய்து விவசாய மக்களுக்கு உதவலாம் என்பதே இத்திட்டத்தின் கருத்து. இத்திட்டத்தை அமுல் நடத்துவதில் முதல் கட்டமாக திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் இரண்டு சமுதாயக் கிணறுகளை திருவுடையார் பட்டி ஊராட்சியில் அமைத்து, மின் இறவை இயந்திரத்தை இயக்கி வைக்கும் பணியைப் பொங்கல் நன்னாளில் ஏர் முனை விழாவின் ஓர் அம்சமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கொண்டு நடத்தி வைத்தது, பெருமைக்குரிய நிகழ்ச்சியாகும். அமைச்சர் அவர்கள் மின் விசையை அழுத்தியதும் வற்றாத ஊற்றுள்ள கிணற்றிலிருந்து கடல் மடை திறந்தாற் போல் பெரு வெள்ளம், வலிமை மிக்க இளைஞர்கள் வகுத்த வாய்க்கால் வழியோடி காய்கறித் தோட்டத்தை அடைந்தது, அன்றைய துவக்க விழாவில் ஒரு கண்கொள்ளாக் காட்சி.

சில தினங்களுக்கு முன்பு வரை முட் புதரும் சப்பாத்திக் கள்ளிகளும் முளைத்து, புதர் நிரம்பி விஷப் பிராணிகளின் உறைவிடமாக இருந்த அவ்விடம், இயந்திர உழவுக் கருவியின் துணைக் கொண்டு, புதர் நீக்கி, காய்கறித் தோட்டமாக காட்சி அளித்தது.

மதுரை தேவகோட்டைப் பெருஞ்சாலையின் ஓரத்திலே அமைக்கப்பட்டுள்ள இக்காய்கறித் தோட்டம், சமுதாயக் கிணறுக்கு அருகாமையிலேயே அமைந்துள்ளதோடு, கல் நாட்டி முள்வேலி அமைத்துள்ளபடியால் பாசன வசதியும் தக்க பாதுகாப்பும் பெற்றுள்ளது.

இாணசிங்கபுரம் கிராமத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட காய்கறித்தோட்டம் ஓர் ஏக்கர் பரப்பு உள்ளது. இதில் நெல்லும் காய்கறியும் விளைவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் பள்ளி இளஞ்சிறுர்களின் உறுபசி தீர்க்க உணவளிக்க வழி வகை செய்ய முயற்சியெடுக்கப்பட்டுள்ளது.

வான் பொய்த்த நேரத்தில் ஏற்பட்ட வரட்சியின் காரணமாக வளமான நிலத்திலும் ஆண்டு ஒன்றுக்கு ஒரு மகசூல் கூட எடுக்க முடியாத நிலை உள்ளது. பூத்துக் குலுங்கிப் பொதிகட்டும் வேலையில் தண்ணீர் பற்றுக் குறையினல் பயிர்கள் கருகி விடுவது இப்பகுதியில் அடிககடி காணும் காட்சி. தமிழக மின் குழு ஊழியர்கள் இப்பகுதியில் விசேஷத் திட்டமிட்டு கிராமங்களுக்கு மின் விசையை துரிதமாகக் கொண்டு செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியது. அவர்களுக்கு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து மின் இறவை இயந்திரம் பொருத்துவதற்கு, 13 பேர்களுக்கு ரூபாய் 30,000 கடனுக வழங்கப்பட்டது ஏர் முனை விழாவின் மற்றுமொரு அம்சமாகும்.



மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் இரணசிங்கபுரத்தில் காய்கறித் தோட்டத்தைத் துவக்கி வைத்தார்.

## கருத்தைக் கவரும் விவசாயக் கண்காட்சி

விவசாயத்தில் திருந்திய முறைகளைப் பரப்புவதற்காகவும் மிகு விளைச்சல் தரும் தானிய வித்துக்கள் பற்றியும் அவற்றிற்குரிய செயல் முறை நேர்த்திகளையும், செயற்கை உரத்தை மட்டும் நம்பி இராமல் தழை உர, மரங்களையும் பயிரிடுவதற்கான அவசியத்தை வலியுறுத்திக் காட்டியும் அமைக்கப்பட்டுள்ள விவசாயப் பொருட்காட்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். வளமான கால் நடைகளையும் கோழிகளையும் வளர்த்து முட்டை, பால் போன்ற உப உணவுகளைப் பெருக்குவது இந்நேரத்தில் எவ்வளவு முக்கியமான பணி என்பதை விளக்கிக் காட்டும் வகையில் ஒரு கால் நடைக் கண்காட்சியும் அமைக்கப்பட்டிருந்தது. அவ்வமயம் சிந்தி, முர்ரா, பொலிகாளைகள் காட்சியில் இடம்பெற்றன. மிகு விளைச்சல் பற்றிய எல்லாக் குறிப்புகளும் அடங்கிய பிரசுரம் ஒன்று விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. அமைச்சர் அவர்கள் கிராமத் தொழிலாளிகளின் உள்ளங்களிலும் உவகைப் பொங்கு மளவில் ஒரு தொழில் சேவை நிலயத்தையும் ஆரம்பித்து வைத்தார்கள். திருவிடையார்பட்டி கிராமத் தச்சுத் தொழி

லாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் இத்தொழில் சேவா நிலையமும், தொழில் கருவிகளும் இவ் வூராட்சி ஒன்றியத்தினால் வழங்கப்பட்டது.

பின்னர் இன்று புரட்சிகரமாகக் கருதப்பட்டுள்ள சமுதாயக் கிணறு திட்டத்தை கடந்த ஓராண்டு காலமாக நடத்தி வரும் திருவிடையார்பட்டி ஊராட்சியின் சமுதாயக் கேணியை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள். மின் விசையை அழுத்தி நீர்ப்பாய்ச்சி பின்பு நிறுத்தியதும் கிணற்றில் பொங்கி மேலெழும் ஊற்றின் காரணமாக நீர் மட்டம் உயர்வதை அமைச்சர் கண்டு மகிழ்ந்து இப்பகுதியில் வற்றாத நீர் ஊற்று இருப்பதின் காரணமாக மேலும் பல சமுதாயக் கிணறுகளை அமைக்குமாறும் விவசாயத் துறை அரசாங்க ஆணை 121-ல் கண்டுள்ள மானியக் கடன் உதவி வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளுமாறும் ஆணையிட்டார்கள். பின்னர் ஊராட்சி ஏற்று நடத்தி வரும் மாந்தோப்பினைப் பார்வையிட்டு அது மிக்க பயனுள்ளவகையில் அமைந்துள்ளது பற்றி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

வரவேற்பு விழாவை ஆரம்பித்து வைக்கும்போது அமைச்சரவர்கள் தமிழக அரசு விவசாயிகளின் வாழ்வு வளம் பெறத் தீட்டியுள்ள நல்ல பல திட்டங்கள் பற்றி விளக்கிக் கூறினார்கள். சமுதாயக் கிணறு, கிராமங்களுக்கு மின் வசதி அளித்தல், இறவை இயந்திரக் கடன் இவைகளுக்காக அரசு அள்ளி அள்ளிக் கொடுக்க முன் வந்துள்ளது என்பதை மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே தெரியப்படுத்தினார்கள்.

கட்சி வேறுபாடின்றி பொது நோக்குடன் உழைத்து மிகவும் பின் தங்கியுள்ள இவ்வட்டார மக்களுக்கு பணி செய்ய தாம் அல்லும் பகலும் காத்திருப்பதாகக் கூறினார்கள்.

**சாலை அமைப்பு வேலை**

முப்புரமும் நீரால் சூழப்பட்டு சாலை வசதியின்மையால் ஆண்டில் சில மாதங்கள் தீவு போல கண்மாய்களுக்கு மத்தியில் அமைந்துள்ள பல கிராமங்களுக்கு நிலச்சிக்கல்களைத் தீர்த்து வைத்து, சாலை அமைக்கும் பொறுப்பை மக்கள் மன்றமாகிய ஊராட்சி நிறுவனங்கள் ஏற்று நடத்தவேண்டும் என்பதையும் குறிப்பிட்டார்கள். இதற்காக இப்பகுதிக்கு ஊராட்சி நிறுவனங்களை செயல்படுத்தக்கூடிய நிலையில் மனித சக்தித் திட்டம் தமிழக அரசினால் கொடுக்கப்பட்டது என்பதையும் குறிப்பிட்டார்கள். ஆண்டாண்டுக் காலமாக தீர்க்கப்படாதிருந்த சாலை அமைப்பதற்குரிய நிலம் பெறுவதில் ஏற்பட்ட சிக்கல் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு நாட்டார் மங்கலம் கோட்டையிருப்பு இணைப்புச் சாலை மனித சக்தித் திட்டத்தின் முதற் கட்டமாக தன்னால் ஆரம்பித்து வைக்கப்பட்டது குறித்து அமைச்சர் அவர்கள் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். இதேபோன்று இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள நிதி வசதியைத் தக்க முறையில் பயன்படுத்தி வசதி அற்ற சற்றேறக் குறைய 50 குக்கிராமங்களுக்கு சாலை வசதி ஏற்படுத்திக்கொள்ளுமாறு அதிகாரிகளையும் மக்கள் பிரதிநிதிகளையும் அமைச்சர் அவர்கள் வேண்டிக் கொண்டார்கள்.

---

[தமிழகத்திலே பனைத் தொழில்—12-ம் பக்கத் தொடர்ச்சி.]

தொழிலுக்கோ நாங்கள் விரோதிகளல்லர் என்பது திட்டவட்டமாக இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் துறையை அழித்துவிடுவோம், ஒழித்துவிடுவோம் என்ற ஐயப்பாடு யாரும் கொள்ளத் தேவையில்லை. இந்த நாடு வாழவேண்டும். நாட்டு மக்கள் வாழவேண்டும். கிராமப் புறங்களிலே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் வாழவேண்டும். ஏழை சிரிக்க வேண்டும். அதுதான்—இன்றைய ஆட்சியினுடைய இலட்சியம். அந்த இலட்சியத்திற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். உங்களுக்கு இருக்கக்கூடிய குறைகளை அவ்வப்பொழுது முறைப்படி நீங்கள் முறையிட்டீர்களானால் எந்த நேரத்திலும் அவைகளைக் கேட்டுப்பரிகாரம் தேடுவதற்கான உறுதியை நிச்சயமாக நான் தருகிறேன்.

**பட்டியல் படையுங்கள்:**

அடிக்கடி நாம் இதுபோலச் சந்தித்து, கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு, இந்தத் துறையை வளம்பெறச் செய்து, நல்ல வெளிநாட்டுச் செலாவணி பெருகுகிற அளவுக்கு வளர்த்துக் காட்டவேண்டும்.

அடுத்த ஆண்டு நிதி நிலை அறிக்கை தருகிறபொழுது இதிலே இவ்வளவு லாபம் வந்திருக்கிறது. இந்தத் துறை 'இவ்வளவு வளர்ந்திருக்கிறது' இத்தனை புதிய சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இத்தனை தொழில்கள் புதிதாக துவக்கப்பட்டிருக்கின்றன என்கிற பட்டியலைக் கொடுப்பதுதான் எனக்குப் பெருமை அளிப்பது. இந்தப் பட்டியலைத் தேடிக் கொடுக்கவேண்டிய பொறுப்பும், கடமையும் பனைத்தொழிலில் ஈடுபட்டுள்ளோரிடமே இருக்கிறது. ஆகவே, என்னையும் சக ஊழியனாக ஏற்றுக் கொண்டு அத்தனை பேரும் என்னுடைய உடன் பிறந்த ஊழியர்களாக நின்று எனக்கு உறுதுணையாக விளங்க வேண்டும்."

# சீரிய பணியாற்றும் நகராட்சிகள்

## மன்னை நகராட்சி மக்கட்குச் செய்யும் நல்லாக்கப் பணிகள்

மன்னார்குடி நகராட்சி 1886-ல் உருவாகிய பழம்பெரும் நகராட்சி மன்றம் ஆகும். 19,447 எண்ணிக்கையுள்ள மக்கள் தொகையும் ரூ. 18,850 வருமானத்தையும் கொண்ட இந்நகராட்சி 1961-ம் ஆண்டு கணக்குப்படி 33,554 பேர் கொண்ட நகரமும் 9,64,396 ரூபாய் வருமானத்தையும் அடைந்துள்ளதிலிருந்து இந்நகரின் சிறப்பான வளர்ச்சியை நன்கறியலாம்.

16-வார்டுகளாகவும் 20 நகராட்சி மன்ற உறுப்பினர்களையும் கொண்டு செயல்படும் இம்மன்றம் 1968-ம் ஆண்டு ஜூலை 1-ம் நாள் முதல் 22 வார்டுகளையும் 24 உறுப்பினர்களையும் கொண்டு செயல்பட இருக்கிறது. இந்நகரில் அமைந்த மொத்த வீடுகளின் எண்ணிக்கை 10,713 ஆகும்.

இந்நகராட்சிக்குச் சொந்தமாக 101 ஏக்கர் புஞ்சை விளை நிலம் உள்ளது. இது வடுவூர்—மன்னார்குடி வழியில் உள்ளது. இதன் நீளம் சுமார் 11 மைல் ஆகும்.

சீரிய பணியாற்றிடும் இந்நகராட்சி அண்மையில் நகரமாந்தர்க்கு நற்பணி பல செய்துள்ளது. 36 தெருக்கள் தூசியில்லாத தளமாக தார்ச்சாலையாக மாற்றப்பட்டு இருக்கின்றன. பெரிய குடிநீர்த் தேக்கம் ஒன்று, சிறிய குடிநீர்த் தேக்கத்தொட்டி 6 கட்டப்பட்டு, 53 குழாய்கள் மூலமாக பல தெருக்களுக்கு தண்ணீர் வசதி செய்யப்பட்டதுடன், வீடுகளுக்கும் குடிநீர் வசதி குழாய் மூலம் செய்யப்பட்டு வருகிறது. 29·53 இலட்சம் ரூபாயில் நகரம் முழுவதற்கும் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று பரிசீலனையில் இருக்கிறது.

நகராட்சி மன்றம் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கும் 54 வீடுகளை கட்டிக் கொடுத்திருக்கிறது. புதிதாக ரூ. 25,000 செலவில் குறைந்த வருவாயினருக்கான புதிய குடியிருப்பு வீடுகள் 12 கட்டி முடிக்கப்பட்டுள்ளன. பாமணி ஆற்றில் கர்த்தநாதபுரம் அருகில் ரூ. 36,000 செலவில் நடைபாலம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. ரூ. 2,62,600 செலவில் நகரில் ஒரு பேருந்து நிலையம் கட்ட எல்லா ஏற்பாடுகளும் முடிந்து டெண்டர் வரவழைக்கும் நிலையில் உள்ளது.

கல்விப் பணியில் நகராட்சி மன்றம் மிகச்சிறப்பாக பணியாற்றி வருகிறது. நகராட்சி நிர்வாகத்தில் 3 உயர் தொடக்கப் பள்ளிகளும் 5 ஆரம்பப் பள்ளிகளும் உள்ளன. டியூப் லைட்டுகள் 403, சாதாரண மின் விளக்குகள் 554, முக்கிய இடங்களில் ஃபோகஸ் விளக்குகள் முதலியன பொருத்தப்பட்டு பாராட்டுதற்குரிய முறையில் உள்ளன. 5 இடங்களில் கம்பி ஒலி பெருக்கிகள் நிறுவப்பட்டுள்ளன.

### பெருமை தரும் நூற்றாண்டு விழா

வாரச்சந்தை 1, காய்கறிச் சந்தை 3, மீன் சந்தை 2, ஆடு அறுக்கும் இடம் 1, மாமிசக்கடை 8, பூங்காக்கள் 4, பர்மா அகதிகளுக்காக 9 கடைகளும், 2 கீழராஜ வீதியிலும், 2 மேலராஜ வீதியிலும், கல்கிப் பூங்காவின் அருகே 2 கடைகளும் கட்டப்பட்டு நகராட்சிக்கு வாடகை வருமானம் கிடைக்கிறது. வண்டிக்காரர்களின் நலனுக்காக 3 வண்டிப் பேட்டைகள் நிறுவப்பட்டுள்ளன.

சுகாதாரப் பணியில் இந்நகர் பெரும் முன்னேற்றம் கண்டிருக்கிறது. ஆயுர்வேத மருத்து மனை ஒன்றும் 3 மகப்பேறு நிலையங்களும் இயங்கி மக்களுக்கு நற்றொண்டு ஆற்றிவருகிறது. கம்போஸ்ட் உரத் தயாரிப்பில் தமிழகத்திலேயே இந்நகர மன்றம் முதற்பரிசு பெற்றிருக்கிறது. இந்நகர மன்ற ஆணையர், சிப்பந்திகளின் அரும்பெரும் முயற்சியினால் 100 சத விகிதம் வரி வசூல் செய்து தமிழக அமைச்சர்கள், அதிகாரிகள் பாராட்டையும் பெற்றதற்கு நகர மக்களின் மகத்தான ஒத்துழைப்பே காரணமாகும். நூற்றாண்டு விழாவின் போது கடை வீதியில் பெரிய மணிக்கூண்டு திறக்கப்பட்டுள்ளது.

1967 டிசம்பர் 21-ம் நாள் முதல் 24-12-67 முடிய கொண்டாடப்பட்ட இந்நகராட்சியின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் நகராட்சி மன்ற வரலாற்றிலேயே புகழாரம் சூட்டப்பட்ட பெரும் நிகழ்ச்சியாகும்,

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு சி. என். அண்ணாதுரை அவர்களும், மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்களும் நூற்றாண்டு விழா நினைவாக நகரமன்ற நுழைவாயிலையும், நினைவு ஸ்தூபியையும் குறைந்த வருவாயினரின் குடியிருப்புக் காலனியையும் திறந்து வைத்தும், சிறப்பு மலரை வெளியிட்டும் சிறப்பித்தார்கள்.

—: o :—

அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்த மொழிச் சிக்கலை மீண்டும் ஆய்வு செய்வதற்கும், மொழித் தீர்மானத்தின் விளைவாக ஏற்பட்டிருக்கும் இன்னல்களை நீக்குவதற்கான வழிகளை ஆய்வதற்கும் அரசியல் கட்சித் தலைவர்களின் உயர்மட்ட மாநாடு ஒன்றினைக் கூட்ட வேண்டுமென்று எனது அரசு வலியுறுத்தும்.

### இரு மொழித் திட்டம்

இம் மாநிலப் பள்ளிகள் அனைத்திலும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகள் மட்டுமே கற்பிக்கப்பட வேண்டுமென்கிற இச் சட்டமன்றப் பேரவையின் முடிவினைச் செயல்படுத்த இவ் வரசு ஏற்கெனவே நடவடிக்கைகள் மேற்கொண்டுவிட்டது. பல்கலைக் கழக அளவில் தமிழ் பயிற்சி மொழியாக மாற்றப்படும் முடிவினால், இன்றைய ஆங்கிலப் பயிற்சித் திறன் குறைந்துவிடும் நிலை ஏற்பட்டுவிடுமோ என்று கவலைப்பட வேண்டிய தேவையில்லை. நமது பாடத்திட்டத்தில் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தைப்பற்றி அரசாங்கம் முற்றிலும் உணர்ந்திருக்கிறது. இன்றைய ஆங்கிலப் பயிற்சியின் தரங்களையும் சாதனைகளையும் மேநிலைப் படுத்துவதற்காக அரசாங்கம் கல்வித்துறை வல்லுநர்களையும் பல்கலைக்கழகங்களையும் கலந்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

## மத்திய, மாநில அரசுகளின் அதிகாரங்களையும், நிதி வசதிகளையும்

மத்திய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும் இடையே, பொறுப்புக்களையும் அவற்றிற்கேற்ப நிதி வசதிகளை பகிர்ந்தளிப்பதிலும், நிலவுகின்ற சமனற்ற நிலை, பெரியதொரு கூட்டப்படியும், மற்றப்படியும் மாற்ற வேண்டிய நிதி வசதிகளின் அளவும், குறிப்பாகச் சென்ற இரு ஆண்டுகளில் தேவையைவிடக் குறைந்துள்ளது. இதனால், எந்தெந்தத் துறைகளின் வளர்ச்சிக்காக மாநிலங்கள் பெறுப்பேற்றுள்ளனவோ அத் துறைகளில் சீரான முன்னேற்றம் அடைய இயலவில்லை. கடந்த பதினைந்து ஆண்டுகளின் அனுபவத்தையொட்டி, மத்திய மாநில அரசுகளுக்கிடையே இருக்கவேண்டிய நிதி வசதிகளையும், அதிகாரங்களையும் வரையறுக்கிற அரசியலமைப்பின் விதித் துறைகளை உயர்மட்ட அளவில் மறு ஆய்வு செய்தல்

## மறு ஆய்வு செய்தல் இன்றியமையாதது

இன்றியமையாததென்பது எனது அரசின் உறுதியான கருத்தாகும்.

### நிதி ஆணைக் குழு

இத்தகைய ஆய்விற்குக் காலம் சிறிது தேவை என்பதும் இந்த ஆய்வின் வரம்பினைத் தொடர்புள்ள அனைவருடனும் கலந்து விழிப்புடன் வரையறுக்கவேண்டும் என்பதும் உண்மையே. இதற்கிடையில் மாநிலங்களின் மிக நெருக்கடியான தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ப நிதி ஆணைக் குழுவின் (Finance Commission) ஆய்வு வரம்பினை விரிவுபடுத்துவதன் மூலம் மாநிலங்கள் கூறிவந்துள்ளதை ஓரளவுக்காவது ஏற்றுக்கொள்ள இயலும்.

முன்னர் நிதி ஆணைக் குழுவின் ஆலோசனை வரம்புகளை மத்திய அரசு மாநிலங்களைக் கலந்து ஆலோசியாமல் முடிவு செய்து வந்தது. கூட்டு அரசியலமைப்பின் உட்கிடக்கையையும், மத்தியிலும், மாநிலங்களிலும் வேறுவேறான அரசியல் கட்சிகள் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ள புதியதொரு அரசியல் சூழ்டாட்சியில், அரசிற்கும் உள்ளிணைந்த மாநிலங்களுக்கும் ஊடே நிலவ வேண்டிய இனிய தொடர்பினைக் கெடுத்துள்ளன.

பொருளாதார வளர்ச்சிக்கென மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் நிகர உதவி முந்திய ஆண்டுகளில் வழங்கப்பட்டு வந்ததைவிட மிகவும் குறைந்துள்ளது. அரசியல் அமைப்பிற்கிணங்க, மாநிலங்களுக்கே உரிய தனி நிதி வசதிகள் அவைகட்குப் போதிய அளவில் இல்லை. மத்திய அரசு மாநிலங்களுக்குச் சட்

நிலையையும் கருத்திற்கொண்டு நோக்கின், மாநிலங்களை முற்றிலும் கலந்து இப் புதிய நிதி ஆணைக் குழுவின் ஆய்வு வரம்புகளை நிச்சயிக்க வேண்டுமென்பது தெளிவாகும். இந்திய அரசு, அவ்வாறு கலந்து ஆலோசிப்பதற்கான நடவடிக்கையைத் தொடங்குமென்றும், புதிய நிதி ஆணைக் குழுவின் ஆய்வு வரம்புகளை மாநில அரசுகள் தெரிவிக்கும் கருத்துக்களுக்கிணங்க முடிவு செய்யும் என்றும் எனது அரசு எதிர்பார்க்கிறது.

# பிற மாநிலங்களில்

**பூனு மாவட்டம்** (மகாராஷ்டிர மாநிலம்.) 13 வட்டங்களையுடையது. இந்த மாவட்டத்திலுள்ள 1529 கிராமங்களில் 1138 கிராமங்களில் குறுகிய காலப் பயிர்களும், எஞ்சிய 391 கிராமங்களில் நீண்ட காலப் பயிர்களும் சாகுபடியாகின்றன. ஆனால் 1965–66–ம் ஆண்டில் தொடர்ச்சியாக வரட்சி நிலைமையே இந்த மாவட்டத்தில் இருந்தது. இந்த மாவட்டத்தின் மேற்கு பகுதியில் பயிர் செய்யப்பட்டிருந்த பயிர்கள் மழையின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டது. 1965–ம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் வரட்சி நிலைமை மிகவும் மோசமாகியது. ஆனால் டிசம்பர் மாதத் தொடக்கத்தில் சிறிதளவு மழை பெய்தது. அதுவும் காலங் கடந்தே பெய்ததால் எப் பயனும் விளையவில்லை.

பூனு மாவட்டத்தின் வேளாண்மை நிலையை பரிசீலித்த மகாராஷ்டிர அரசு, கிராமங்களனைத்தும் பற்றுக் குறை பகுதி என்று அறிவித்தது. பற்றுக்குறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்காக 76 இடங்களில் பற்றுக்குறை உதவி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பற்றுக்குறை உதவி வேலைகளை திறமையாக நிறைவேற்ற தொழில் நுட்பம் அறிந்தவர்கள் போதிய அளவில் இல்லாதிருந்தும் பெரும் முயற்சியின் விளைவாக இந்த வேலைகள் திறம்பட நடந்தேறின, பூனுவில் வசிக்கும் மக்கள் இயற்கையின் சீற்றத்தைக் கண்டு பயந்துவிடவில்லை. பற்றுக் குறையால் ஏற்பட்ட சவாலை அவர்கள் உறுதியுடன் சமாளித்தனர்.

### ஒருங்கிணைந்த முயற்சிகள்

மகாராஷ்டிர முதல் அமைச்சரான திரு வி. பி. நாயக் அவர்கள் "நாம் எப்படியும் இரண்டு ஆண்டுகளில் உணவில் தன்னிறைவு அடைய வேண்டும் என்ற உறுதியை எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறினார். இதன் பிறகு அரசு ஊழியர்களும், தனியார்களும் இந்த இலட்சியத்தை அடைய தீவிர முயற்சி எடுத்துக் கொண்டார்கள் என்று கூறினால் அது மிகையாகாது. ஏற்கனவே பயிர் செய்யப்பட்டிருந்த பயிர்களுக்கு பாசனத்தை தாராளமாக வினியோகிக்க மாநில அரசு ஏற்பாடு செய்திருந்த தோடன்றி வர்த்தகப்பயிர்களுக்கு கிடைக்கும் பாசன வசதியையும் கட்டுப்படுத்தியது. இந்த நடவடிக்கையானது பற்றுக்குறையைக் கருத்தில் கொண்டு எடுக்கப்பட்ட முன் நடவடிக்கையாகும். விவசாயிகளுக்கு வேண்டிய அளவு கடன் வசதி கிடைப்பதற்கும் 'பம்பு செட்டு' கள் மற்றும் ஆயில் இஞ்சின் ஆகியவை கிடைப்பதற்கும், உரிய முறையில் மாநில அரசு ஆணை பிறப்பித்தது. குழாய்கள் மூலம் குளங்களிலிருந்தும், கிணறுகளிலிருந்தும், நதிகளிலிருந்தும் நீர் இறைத்து விவசாயிகளுக்கு வினியோகிப்பதற்காக, பம்புகளை மாவட்ட மன்றங்கள் வாடகைக்கு கொடுத்து உதவின. விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, மாநில மின்சார ஆயம் மின்சாரக் கம்பங்களை நாட்டி, மின் வசதி செய்து கொடுத்தது. விவசாயத் துறை வீரிய ஒட்டு விதைகளை விவசாயிகளுக்கு கொடுத்து அதிக விளைச்சல் ஏற்பட வகை செய்தது. இதனால் 50 சதவீத கூடுதல் விளைச்சல் ஏற்பட்டது.

### தாய்மொழியில் விவசாய நுட்பங்கள்

உணவில் தன்னிறைவு ஏற்பட வேண்டும் என்ற உறுதியான நோக்கத்தை வகுத்துக் கொண்ட பின், முதல் அமைச்சர் சக அமைச்சர்களை மாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, தற்போதைய பற்றுக் குறையை எடுத்துச் சொல்லி, அதை போக்குவதற்கு உழவர்களுக்கு தற்போது என்னென்ன வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களை பயன் அடையச் செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். வருவாய்த் துறை துணை அமைச்சரான திரு சங்கர் ராவ் பாட்டில், பூனு மாவட்டத்தின் எல்லை வட்டாரத்திற்கும் ஒரு சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு அரசு உழவர்களுக்கு செய்துதரும் வசதி பற்றி விளக்கமாக எடுத்துச் சொன்னார். முதலமைச்சரே ஒரு தீவிர விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவராகையால், உழவர்களுக்கு விளங்கக் கூடிய முறையில் தாய்மொழிலேயே விவசாய நுட்பங்களை எடுத்துக் கூறி, அவர்களை நவீன வேளாண்மை முறைகளை பின்பற்றி அதிக விளைச்சல் செய்யத் தூண்ட முடிந்தது. மாவட்டத்தில் பற்றுக்குறையால் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய சோதனையான கட்டத்தை கடப்பதற்கு பொதுக் கூட்டங்களை அடிக்கடி கூட்டி பற்றுக் குறையால் ஏற்பட்ட சவாலை சமாளிப்பதற்கு வழி முறைகள் விளக்கிச் சொல்லித் தரப்பட்டன.

### பாசனத்திற்கு தீர்மானங்கள் நிறைவேற்றுதல்

புதிய திட்டங்களை நிறைவேற்றி வரும் இடங்களுக்கு அரசு ஊழியர்களும் தனியார்களும் ஒன்று சேர்ந்து பிரயாணம் செய்து, அங்கு ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை மற்றவர்களுக்கு விளக்கிச் சொன்னார்கள். மேலும் வருவாய்த் துறை அதிகாரிகள் மின் துறை பொறி இயல் வல்லுநர்கள்.

ஊராட்சி மன்ற அதிகாரிகள், வட்டாரத் தலைவர்கள் ஆகியோர் ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து பாசனத்தை எப்படி வளர்ச்சி செய்யலாம் என்பது பற்றி ஆராய்ந்தனர். நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றி உழவர்களுக்கு விளக்கிச் சொல்லி, எந்தெந்த இடங்களுக்கு பாசனம் கொண்டு வரமுடியும் என்பது பற்றி ஒரு தீர்மானம் கொண்டு வரும்படி கிராம சேவக்குகள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். நீர்ப்பாசன வசதி செய்து தருவதற்கு விவசாயிகளிடம் பாதுகாப்பு பத்திரங்கள் வாங்கிக் கொண்டு கடன் கொடுத்து நீர்ப்பாசனத்தை விருத்தி செய்ய உதவி செய்யப்பட்டது.

பது சிரமமாக இருந்தது. மாவட்ட மன்றத் தலைவரான திரு சங்கர் ராவ் உர்சல், கட்டிடங்கள் வேலைகள் பற்றிய குழுவின் தலைவரான திரு சாகேப் ராவ் சட்கார் இருவரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட தீவிர முயற்சியினால் மாவட்ட மன்றங்களின் பணத்தில் அதிக அளவு சிமெண்ட் குழாய் வாங்குவதற்காக செலவழிக்கப்பட்டது. குழாய்ப் பாசனத்திட்டத்தில சிமெண்ட் குழாய் வாங்குவதற்கென எட்டுலட்சம் ஒதுக்கப்பட்டது. மின்சார பம்பு செட்டு 'ஆயில் என்ஜின்கள் கிடைப்பதிலும் சிரமம் இருந்தது. ஆகையால் அரசு அலுவலர்களும் தனியார்களும் மின்சார மோட்டார்கள் விற்பனை செய்யும் நிறுவனங்களோடு நேரடித் தொடர்பு கொண்டு, பூனா மாவட்டத்

கிணறு நிறுவுவதில் சிரமம் ஏற்பட்டது, இந்த சிரமத்தை போக்குவதற்கு ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது அதன் வாயிலாக பழங்காலத்திலிருந்து தொடரும் சண்டைகளையும் பூசல்களையும் மறந்து விட்டு அனைவரும் ஒன்று சேர்ந்து குழாய் நீர் பாசனப் பெருக்கச் சங்கம் ஒன்றை அமைத்தனர்.

**வரட்சி அளித்த நல்வாய்ப்பு**

வாகி என்ற இடத்தில் அமைந்த குழாய் நீர்ப்பாசனத் திட்டத்தை மகாராஷ்டிர மாநில உள்துறை அமைச்சர் திரு பால சாகேப் தேசாய் அவர்கள் திறந்து வைத்து பேசுகையில், ''இந்த நீர்ப்பாசனத் திட்டம் கொய்னா திட்டத்தைக் காட்டிலும் மிக

# வரட்சி அளித்த நல்வாய்ப்பு

கிராம வளர்ச்சியில் ஊராட்சிகள் பெரும் பங்கு ஆற்றுகின்றன. பூனா மாவட்ட மன்றத் தலைவரான திரு சங்கர் ராவ் உர்சல் தலைமையில் அரசு ஊழியர்களும் தனியார்களும் பெரு முயற்சியுடன், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் விவசாயக் கருவிகள், இயந்திரங்கள் கொடுத்து உதவியிருப்பதோடு 13,500 ஏக்கர் பரப்பளவில் வீரிய ஒட்டுச் சோளத்தை சாகுபடி செய்யவும் உதவியிருக்கின்றனர்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு பணத்தைக் கொடுத்து விட்டால் மட்டும் உணவு உற்பத்தி செய்து விட முடியுமா? பணத்தைக் கொண்டு விவசாயக் கருவிகள், மற்ற பொருட்கள் வாங்குவதற்கு, எளிய முறையில் வழி முறைகள் உருவாக்கப்பட வேண்டும். குழாய்க் கிணறு திட்டப்படி பாசனத்தை அபிவிருத்தி செய்வதற்கு சிமெண்ட் குழாய்கள் கிடைப்

தின் தேவையை பூர்த்தி செய்வதற்கு பேருதவி செய்தார்கள்.

**3,000 டன் சிமெண்ட் கொள்முதல்**

இங்கு கிடைக்கும் பாசன வசதி எவ்வாறு மின்சார 'பம்பு செட்டால்' சாகுபடிக்கு உபயோகப்படுத்தப்பட்டது என்று விளம்பரம் செய்வதற்கு 'கிர்லோஸ்கர் என்ற நிறுவனத்தினர் இரண்டு 'மோட்டார் எஞ்சின்'களை இனமாகக் கொடுத்தனர். இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பெருமளவு சிமெண்ட் தேவைப்பட்டது. தேவைப்பட்ட அளவு சிமெண்ட் கிடைப்பதில் சிரமம் இருந்ததால், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், வட்டார ஆணையர்களும் எடுத்துக் கொண்ட தனி ஆர்வத்தினால் 3,000 டன் சிமெண்ட் கொள்முதல் செய்ய முடிந்தது. ஒவ்வொரு உழவருக்கும் உயர்ந்த அளவாக ரூபாய் 5,000 மட்டுமே கடன்கொடுக்க முடியும் என்ற நிலை இருந்ததால்,

வும் சிறந்த திட்டம் என்று குறிப்பிட்டார். நீர்ப்பாசனத் திட்டத்தினை பயன் பெறுபவர்கள் பலகாலமாக புறக்கணிக்கப்பட்டும், சரியான உரிமை மறுக்கப்பட்டும் வந்துள்ள தாழ்த்தப்பட்டவர்களின் வயல்களுக்கு இந்த திட்டம் வசதி செய்து கொடுக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

இப்போது பூனா உணவில் தன்னிறைவோடு வெற்றி நடை போடுவதற்கு காரணம், இந்த மாநிலம் இதற்குமுன் வரட்சி நிலையை திறமையோடு சமாளித்து, பல திட்டங்களை நிறைவேற்றியதனால் தான் என்றால் அது மிகையாகாது. பூனா மாவட்டத்தின் சாதனையில் இருந்து அறிந்து கொள்ள வேண்டிய பாடம், அரசு அலுவலர்களும், தனியார்களும், ஆர்வம் உள்ளவர்களும் கூட்டாகச் சேர்ந்து அரசு திட்டங்களைப் பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களை ஒன்று திரட்டி, இப்பணியில் ஈடுபடச் செய்ய வேண்டும் என்பதேயாகும்.

# பட்டம் பெற்ருல் என்ன?

* மூன்று சகோதரர்களும் மூன்று தீவிர விவசாயிகள்.

* மூவரில் மூத்தவரும் இளைய வரும் பட்டம் பெற்றவர்கள்.

* அலுவலகத்தைச் சுற்றி வருவதை தவிர்த்து தங்கள் நேரத்தை வேளாண்மையில் செலுத்துகின்றனர்.

* வெள்ளையுடையுடன் அலுவலகத்தில் ஊதியம் பெறுவதைக் காட்டிலும், வேளாண்மையில் அதிகமாக பொருளீட்டுகின்றனர்.

* மூவரும் மகாராஷ்டிர மாநில முதலமைச்சரின் மருமகன்கள்.



## விவசாயம் செய்யலாமே!

மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் திரு வி.பி. நாயக் அவர்களின் மூன்று மருமகன்களும் மூன்று தீவிர விவசாயிகள். இவர்கள் மூவரும் பூசாத் ஊரைச் சார்ந்தவர்கள். மூத்தவரான திரு சுதாகர்ராவ் நாயக் என்பவர், பூசாத் ஊராட்சி சமிதியின் தலைவர். அங்குள்ள சிறந்த விவசாயப் பண்ணையின் உரிமையாளரும் அவரே. இரண்டாமவரான திரு மதுகர் ராவ் நாயக்,காகுலி என்ற பண்ணையின் சொந்தக்காரர் மட்டுமின்றி, சிறந்த ஒட்டுச் சோள விதைகள் உற்பத்தியாளரும்கூட. இளையவரான திரு மனேகர் ராவ் நாயக், 'சீலு' என்ற பண்ணையை நடத்துகிருர்,

### வேளாண்மையில் அதிக வருவாய்

முதலமைச்சரே இம் மூவரையும் விவசாயத்தில் ஈடுபடும்படி அறிவுரை கூறியவர். மூவரில் முதல்வரும் இளையவரும் கல்லூரிப் பட்டம் பெற்றவர்கள். பட்டம் பெற்று அலுவலகங்களைச் சுற்றி சுற்றி வருவதைக் காட்டிலும் வேளாண்மையில் ஈடுபட்டு பொன்னுன நேரத்தை உணவு உற்பத்தியில் செலுத்த வேண்டுமென்று, அவர்களுக்கு முதலமைச்சர் தெளிவுபடுத்திஞர். அலுவலகங்களில் சம்பாதிப்பதைவிட, வேளாண்மையில் நல்ல வருவாயைப் பெற இயலும் என்பதையும் கூறியவர் அவரே. அவர்கள் மூவரும் வயதால் மிகவும் இளையவர்களே.

### பட்டதாரிகளின் விவசாயப் பணி

திரு சுதாகர் ராவ் மது 32 வயதிலேயே பூசாத் ஊராட்சி சமிதியின் நிர்வாக வேலைகளில் பெரும் பங்கேற்றுர். இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையானஅவர் தமது முழு நேரத்தையும் வீரிய ஒட்டு சோளம், கம்பு ஆகியவற்றை விவசாயிகள் பயிரிட முனையவேண்டும் என்ற பிரச்சாரத்திலேயே கவனத்தை செலுத்துகிருர். வீரிய ஒட்டுப் பயிர் முறையே உணவுப் பற்ருக்குறையைத் தீர்க்கும் வழி என்று இவர் உறுதியாக நம்புகிருர். 110 ஏக்கர் பரப்பளவு உள்ள இந்தப் பண்ணை செழுமைக்குச் சின்னமாக விளங்கு

கிறது. வீரிய ஒட்டு சோளக்கதிர்களின் முதிர்ந்த மணிகள் நெருக்கமாக இருக்கின்றன. இந்த நிலத்தை திரு சுதாகர் ராவ் நாயக் தன்னுடைய மாமாவிடமிருந்து பெறுகையில் அது ஒரு தரிசான மலைப்பிரதேசமாகவே இருந்தது என்று இவர் கூறும்போது நம்பமுடியவில்லை. பெரும் முயற்சி எடுத்து, நிலத்தை பண்படுத்தி செழிப்புள்ளதாக மாற்றியிருக்கிறார்.

இந்த இளம் பட்டதாரிகளை விவசாய வேலைகளில் ஈடுபடும்படி தூண்டிய அவர்களது மாமாவான முதலமைச்சரும் ஒரு தீவிர விவசாயியே. வீரிய ஒட்டுச் சோளம், கம்பு. வாழை, வேர்க்கடலை, காய்கறி 'கோப்ரா' பண்ணையில் பயிர் செய்யப்படுகின்றன. இதில் விளையும் பொருட்களையும், அந்த நிலத்தின் வளத்தையும் மற்றவர்களுக்கு காட்டி, இதன் சாதனைகளை எடுத்துக்கூறி அவர்களையும் இவ்வாறு பயிர் செய்யத் தகுந்த வழிமுறைகள் கூறப்படுகின்றன.

### பாராட்டை எதிர்பார்க்கவில்லை

திரு மதுகர் ராவ் நாயக்கின் பண்ணையான 'காகுலி'யும் செழுமையாக, வளமுடையதாக இருக்கிறது. இந்தப் பண்ணை, மாலை நேர மஞ்சிய ஒளியில் செழுமை பொங்கி சிரிப்பதானது பொன்னைபோல் காட்சியளிக்கிறது. உண்மையிலேயே இந்தப் பண்ணை பொன்னிற்கு இணையானதாகும். இந்தப் பண்ணையின் உரிமையாளர் இந்தப் பண்ணையை இவ்வளவு சிறந்ததாக மாற்றியதற்கு எந்த சிறப்பான பாராட்டையும் எதிர்பாராமல் இருக்கிறார். இவர் அடக்கமும் கூச்ச சுபாவமும் உள்ளவராக இருக்கிறார். இவர் பண்ணையை எவரேனும் பாராட்டிக் கூறுகையில், இவர் அடக்கமாகவே இருக்கிறார். காகுலி கிராமத்தில் வசிக்கும் மக்களில் பெரும்பாலோர் 'பஞ்சாரா' இனத்தைச் சார்ந்தவர்கள். மனோகர் ராவைப் பின்பற்றி பஞ்சாரா இன மக்கள் அனைவரும் விஞ்ஞான முறைப்படி விவசாயம் செய்ய முற்பட்டுள்ளனர்.

### பதவி வேண்டாம்: வேளாண்மை போதும்

மனோகர் ராவ் எல்லா தானியங்களையும் பயிர் செய்வதில்லை. தமது நிலத்தில் அதிகப் பயன்தரக்கூடிய பயிர்களை மட்டுமே பயிர் செய்கிறார். இவரது நிலத்தில் சோளம், பருத்தி, மிளகாய், நெல், கோதுமை, கம்பு, வேர்க்கடலை, கரும்பு, திராட்சை ஆகியவை மட்டுமே பயிர் செய்யப்படுகின்றன. இவர் சமீபத்தில் 300 ஆரஞ்சுக் கன்றுகளை நட்டார். இவை 5 ஆண்டுகளில் பலன் தரும் என்று எதிர்ப்பார்க்கிறார். இங்குள்ள நிலத்தில் பாசனம் செய்வது சிரமமாக இருக்கிறது என்றாலும் இவர் 'போர்காடி' என்ற ஏரி ஒன்றை வைத்திருக்கிறார். இது 110 ஏக்கர் பண்ணையின் ஒரு பாதியை பாசனம் செய்வதற்கு பயன்படுகிறது. மின்சார பம்பு செட்டுடன் கூடிய மூன்று கிணறுகளும் இங்குண்டு.

''நீங்கள் ஓர் இளம் பட்டதாரியாக இருக்கிறீர்களே, ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாகவோ அல்லது அதற்கு சமமான பதவி உள்ள அதிகாரியாகவோ ஆக விருப்பம் இல்லையா?'' என்று இவரைக் கேட்கையில் ''எனக்கு பதவிகளில் விருப்பம் இல்லை. சாகுபடி செய்வதையே விரும்புகிறேன்'' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார். இவருடைய ஒரே ஆவல் இந்த நாட்டின் 'தலைசிறந்த விவசாயி' என்று தாம் அழைக்கப்பட வேண்டுமென்பதே என்கிறார். ஒவ்வொரு சகோதரருக்கும் ஆண்டுதோறும் ரூ. 60,000 வரை விவசாயத்திலிருந்து வருவாய் கிடைக்கிறது.

# இருபோக சாகுபடித் திட்டம்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில், இந்த ஆண்டு கூடுதலான பாசன வசதியுள்ள 12 லட்சம் ஏக்கர் நிலங்கள், இருபோகச் சாகுபடிக்கு கொண்டுவரப் படவிருக்கின்றன. ஆறு லட்சம் ஏக்கர் நிலம் ஏற்கனவேயே நீண்ட காலச் சாகுபடித் திட்டத்தில் கொண்டுவரப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ள ஆறு ஏக்கர் நிலமும் இருபோகச் சாகுபடிக்கு கொண்டுவரப்படவிருக்கிறது.

இம்மாநிலத்தில், மொத்தச் சாகுபடி பரப்பளவான 421 இலட்சம் ஏக்கர் நிலத்தில் 120 இலட்சம் ஏக்கர்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சாகுபடிகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. இதனால் அதிக விளைச்சல் ஏற்படும்.

குறுகிய காலப்பயிரில் உயர் வகை கோதுமையை விதைப்பதற்கு ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம், ஒன்றுக்கு மேற்பட்ட சாகுபடியை ஒரே நிலத்தில் மேற்கொள்ள வேண்டும் என்ற குறிக்கோளையொட்டி மேற்கொள்ளப்பட்டுள்ளது. உற்பத்தியை பெருக்கும் விவசாயிகளுக்கு மேலும் இரசாயன உரங்களை கொடுக்க மத்திய அரசு உறுதியளித்திருக்கிறது.

குறுகிய காலப் பயிர் பருவத்தில், மிகு விளைச்சல் தரும் கோதுமையை உற்பத்தி செய்ய 25 இலட்சத்திற்கும் அதிகமான விவசாயிகள் பங்கு கொள்வர். இந்த விவசாயிகளுக்கு தங்களது பகுதிகளில் உள்ள அரசு பண்ணை, அல்லது தனியார் விவசாயப் பண்ணைகளில், மிகு விளைச்சல் கொடுக்கும் பயிர்களை சாகுபடி செய்வது பற்றிய பயிற்சி கொடுக்கப்படும்.



அந்த கிராம மக்கள் மகிழ்ச்சியில் திளைத்திருந்தனர். ஏனெனில் அவர்களின் நெடுநாளைய அவா அன்று நிறைவேறிவிட்டது. மங்கலாக ஒளி சிந்திக்கொண்டிருந்த அவர்களின் வீடுகளில், மின் விளக்குகள் பளிச்சென்று ஒளியை உமிழத் தொடங்கி விட்டன.

அவர்களின் பெருமைக்கு மின்வசதி கிடைத்தது மட்டும் ஒரு காரணமன்று. மின்வசதி கிடைப்பதற்காக குழி தோண்டுதல், கம்பங்களை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லுதல், அவற்றை வரிசையாக நடுதல் போன்ற பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.

தங்களது 363 மாட்டு வண்டிகளை மின்வசதி அளிக்கும் பணியில் வேலை செய்வதற்கு வாடகையின்றி அளித்ததோடு, 2,083 மனித சக்தி நாட்களையும் அளித்தனர். உடல் உழைப்பையும் பயன் கருதாது தர முன் வந்ததனால், மின்விசை வசதி கொடுப்பதிலுள்ள செலவு பெருமளவு குறைந்தது.



# மின்விசை பரவ வேளாண்மை உயரும்

கிராம மக்கள் மின் வசதிகளை அடைவதற்கு, அவர்களுடைய உழைப்பை பயன் கருதாது தர அவர்களை ஊக்குவிக்கவேண்டும் என்ற அரசின் விருப்பப்படி, ஆந்திர மாநிலத்திலுள்ள நந்திராம் வட்டாரத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் மின் வசதி செய்து தரப்பட்டது. இங்கு 150 கிராமங்களுக்கு மின் விசை வசதி அளிக்கப்படுவதுடன் 263 'பம்ப் செட்டு'களுக்கும் மின்சாரத் தொடர்பு கொடுக்கப்படும். இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியதால், மாநில மின்சார ஆயத்திற்கு ரூ. 83,000 வரை வருவாய் கிடைத்தது.

**மின்வசதியை இரு மடங்காக்க......**

விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமெனில், கிராம மக்களுக்கு மின் வசதி அளிக்கப்படவேண்டுமென்பதை இம்மாநில அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே, கிராம மின் வசதித் திட்டம், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கேற்றவாறு திருத்தி அமைக்கப்பட்டது. மொத்த மக்கள் தொகையில் 12 கோடி மக்களுக்குத்தான் மின் வசதி கிடைத்திருக்கிறது. இன்னும் பல இலட்சக் கணக்கான கிராம மக்களுக்கு மின் வசதி கிடைப்பதற்கும், தற்போது கிடைத்திருப்பவர்களுக்கு மேலும் மின் வசதியை அதிகரிப்பதற்கும் வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிராமங்களுக்கு தற்போது கிடைத்து வரும் மின் வசதியை இரு மடங்கு அதிகரிக்க வேண்டும் என்பது தற்போதைய குறியளவாகும். மகாத்மா காந்திக்கு நாம் செலுத்தும் காணிக்கையாக, அவரது நூறாவது பிறந்த நாளான 1969-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இரண்டாம் நாளுக்குள் எவ்வளவு கிராமங்களுக்கு மின்விசை வசதி கிடைக்கச் செய்ய முடியுமோ அவ்வளவு கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கக்கூடிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு நடவடிக்கை எடுத்து வரப்படுகிறது.

**61,092 கிராமங்களுக்கு மின்வசதி**

இந்தியா விடுதலை அடைந்த பிறகு கிராம மக்களுக்கு மின் வசதி அளிக்க வேண்டிய திட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் வகுப்பதற்குமுன் 150 கிராமத்திற்கு ஒரு கிராமம் தான் மின்சாரம் பெற்றிருந்தது. ஆனால் தற்போது 10 கிராமங்களுக்கு ஒரு கிராமம் மின்வசதி பெற்றிருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டம் வகுப்பதற்கு முன், நாட்டில், 3,677 கிராமங்களுக்குத்தான் மின் வசதி கிடைத்திருந்தது, ஆனால் சென்ற ஆண்டு மார்ச் திங்களோடு 61,092 கிராமங்களுக்கு மின் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 15 ஆண்டுக்குள்ளாகவே, மின் விசை உற்பத்தி 2·3 மில்லியன் கிலோ வாட்டிலிருந்து 12·3 மில்லியன் கிலோ வாட்டாக உயர்ந்துள்ளது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தான், முதல் முறையாக திட்டமிட்ட மின் விசை உற்பத்தியும், கிராமங்களுக்கு மின்வசதி செய்து கொடுப்பதும் இணைத்து மேற்கொள்ளப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 27 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது ரூ. 75 கோடியாக உயர்ந்தது. இந்தத் தொகை மீண்டும் ரூ. 110 கோடியாக மூன்றாவது திட்டத்தில் பெருகியது. பல்வேறு சூழ்

நிலைகளால் கிராம மின் வசதித் திட்டம் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபாடடைகிறது.

### தமிழகத்திற்கு முதலிடம்

மொத்த மின்விசை உற்பத்தியில் கிராம மக்கள் உபயோகிக்கும் மின் விசையானது, விவசாயப்பணிகளுக்கும் சேர்த்து 7 அல்லது 8 சதவீதமாகவே இருக்கிறது. தமிழகத்திலுள்ள மொத்த கிராமங்களில் பாதிக்கு அதிகமாகவே கிராமங்களுக்கு மின்விசை அளிக்கப்பட்டுள்ள செயல் மற்ற மாநிலங்களுக்கும் ஓர் எடுத்துக் காட்டாக விளங்கி வருகிறது. கிராமப் புறங்களுக்கு மின்விசை கொடுத்ததில் தமிழகத்திற்கு அடுத்த இடம் கேரள மாநிலத்திற்கு தாம் உண்டு.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியான 1966-ஆம் ஆண்டில், கிராம மின்விசைத் திட்டத்தின் நோக்கம், வீட்டு உபயோகத்தைக் காட்டிலும், விவசாயக் காரியங்களுக்கு 'பம்பு செட்டு'கள் அமைத்தல், குழாய்க் கிணறுகள் அமைத்தல் ஆகியவற்றிற்கு முக்கிய இடம் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் திருப்பி விடப்பட்டது. இதனால் பெருமளவு உணவு உற்பத்தியை அதிகரிக்க செய்ய முடியும் என்று எதிர்பார்க்கப் பட்டது. கிராம மின் விசைத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையைக் காட்டிலும், அதிகமாகவே மூன்ருவது திட்டத்தின் இறுதி இரண்டு ஆண்டுகளில் ரூ. 11·21 கோடி செலவு செய்யப்பட்டது.

### தமிழகத்தில் 2,77,891 பம்புசெட்டுகள் குழாய்க் கிணறுகள்

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 5,10,000 'பம்பு செட்டு'கள், ஏற்படுத்தப்பட்டன. இவற்றில் 1,06,000 பம்பு செட்டுகள் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டில் நிறுவப்பட்டதாகும். தமிழகத்தில் மின் சக்தியால் இயங்கக்கூடிய 2,77,891 'பம்பு செட்'டுகள், குழாய்க் கிணறுகள் ஆகியவை ஏற்படுத்தப் பட்டுள்ளது மகத்தான செயலாகும். மற்றெந்த மாநிலத்தையும் விட தமிழகத்தில் தாம் அதிக எண்ணிக்கை கொண்ட 'பம்பு செட்'டுகள், குழாய்க் கிணறுகள் இருக்கின்றன. தமிழகத்தை பின்பற்றி ஆந்திர மாநிலத்தில் மொத்தம் 73,969 'பம்பு செட்'டுகள் இருக்கின்றன. இந்தத் திட்டத்தை தீவிரப்படுத்தப்படுவதற்கு அரசு தேவைப்பட்ட பணத்தை இதற்காக ஒதுக்கியிருக்கிறது.

1966-67-ல், கிராம மின் வளர்ச்சிக்காக மாநிலங்களுக்கு உதவி செய்வதற்கென ரூ. 39·33 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. பஞ்ச, வரட்சி நிலைமைகளை போக்குவதற்கு, மாநில அரசு அமைக்க இருக்கும் 'பம்புசெட்'டுகள், குழாய்க் கிணறுகளுக்கு உதவுவதற்காக மேலும் ரூ. 22·79 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### மின்விசைக் கூட்டுறவுச் சங்கம்

ஏற்கனவே திட்டமிட்டதற்கு அதிகமாக குழாய்க் கிணறுகளையும், 'பம்பு செட்டு'களையும் ஏற்படுத்த ஒரு தீவிர திட்டம் வகுக்கும்படி பீகார், உத்தரப் பிரதேச மாநிலங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே ஒதுக்கியுள்ளதற்கும் அதிகமாக, பீகார் உத்தரப்பிரதேச மாநிலங்கள் ஒவ்வொன்றிற்கும் 6 கோடி கொடுக்கப் பட்டுள்ளது. இதனால் 14,000 'பம்பு செட்டு'களும் குழாய்க் கிணறுகளும் அதிகரித்தன. உத்தரப்பிரதேசத்தில் இவை 17,000 ஆக உயர்ந்தது.

மின்சாரத் திட்டத்தின் அமைப்பு, செயல் முறையில் எவ்வாறு சிக்கனத்தைக் கையாளலாம் என்பது பற்றி கிராம மின்விசை கூட்டுறவு நிறுவனம் யோசனைகள் தெரிவித்துள்ளது. கிராமங்களுக்கு குறைந்த செலவில் மின்விசை கொடுப்பதோடு, மின்விசைக் கூட்டுறவு சங்கங்கள் கிராம மக்களிடையே பொறுப்புணர்ச்சியையும், மின்சாரத்தை உபயோகிப்பதில் கட்டுப் பாட்டையும், தாங்களாகவே நிதி வசதியைப் பெருக்குவதற்கு நிறுவனங்களையும் ஏற்படுத்த முயற்சிகளைச் செய்யும். மேலும் இந்தக் கூட்டுறவு நிறுவனம், நாட்டில் கிராம மின்சாரத் திட்டத்தை ஏற்படுத்தி, சீராக நடை பெறுவதற்குரிய கருவிகளை உற்பத்தி செய்தல், அவற்றை சேகரித்து வைத்தல் ஆகிய பணிகளைச் செய்து மின் விசைக்கு ஒரு சிறந்த சேவை செய்யும் என்பது நிச்சயம்.

## கால்நடை சத்துணவு

பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, கால்நடை வைத்திருப்போருக்கு தீவனம் வினியோகிக்க உலக உணவு உற்பத்தி திட்டத்தின் உதவியுடன் உத்தரப் பிரதேசத்தில் ஒரு திட்டம் வகுக்கப் பட்டுள்ளது.

உலக உணவு உற்பத்தி திட்ட நிறுவனத்தோடு, இம்மாநில அரசு ஓர் உடன்பாடு செய்துள்ளது. இதன்படி ஆண்டொன்றிற்கு 5,000 டன் வீதம் மூன்று ஆண்டுகளுக்கு 15,000 டன் மட்ட ரக சோளத்தை உலக உணவு உற்பத்தி நிறுவனம் கொடுத்து உதவும்.

இந்த மட்ட ரக தானியங்களைக் கொண்டு, 45,000 டன் சத்துள்ள கால் நடைத் தீவனம் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். இந்த சத்துணவு கால்நடைத் தீவனமானது, பால் விற்பனைச் சங்கத்தில் உறுப்பினராக உள்ளவர்களுக்கு தகுந்த விலையில் விற்கப் படும்.

—o—




**சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு** முன்பு ஒரு சிறு கிராமம் எவ்வாறிருந்தது ?

அந்த கிராமத்தின் நெல் வயல்களின் பசுமையான தோற்றம் பொன்மயமாகத் தோன்றிற்று. அந்தக் கிராமத்தின் ஒவ்வொரு வீட்டிற்கும் முன்னால் அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்க் கட்டுகள் வரிசையாக அடுக்கிவைக்கப்பட்டிருக்கும். வீட்டுத் தோட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள குளிர்காலக் காய்கறிச் செடிகளும், கொடிகளும் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தன. ஒவ்வொரு வீட்டுத் தோட்டத்திலும் வாழை, தென்னை மரங்கள் நடப்பட்டு அவை செழுமையாக வளர்ந்திருந்தன. அப்போது ஒவ்வொரு வீட்டிலும் ஏராளமான தானியங்கள் இருந்தன. அந்தக் கிராமத்து மக்கள் எப்பொழுதும் சுறுசுறுப்பு உள்ளவர்களாக இருந்ததால், அவர்களுடைய முகத்தில் களிப்பு, திருப்தி இழையோடிக் கொண்டிருந்தன. அப்போதிருந்த அவர்களின் மகிழ்ச்சியும் உற்சாகமும் இப்போது இல்லை.

**ஊரோடு பகிர்ந்துண்டனர்**

அந்த கிராமத்து சிறுவர்களும் சிறுமிகளும் மிகவும் மகிழ்ச்சியாக விளையாடி, உற்சாகமாக இருந்தனர். ஒரு வீட்டின் சிறுமி தட்டில் சோற்றுடன் மற்றொரு தோழி வீட்டிற்குச் சென்று அவளுடன் சேர்ந்து உண்டு மகிழ்ந்து இருப்பாள். சிறுவர்கள் ஒற்றுமையாக விளையாடுவார்கள். யாரும் மற்றவர்களை துன்புறுத்துவது கிடையாது. அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தனர். அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் கல்கத்தாவில் பணிபுரிகிறார். அவர் விடுமுறைக்கு ஊருக்கு வந்தார். இந்தச் செய்தி மின்னல் வேகத்தில் அந்தக் கிராமத்து சிறார்களிடம் பரவியதுதான் தெரியும், உடனே அனைவரும் அவர் வீட்டை அடைந்து அவரைச் சூழ்ந்துகொண்டனர். அவர் தன்னுடன் கொண்டு வந்திருந்த பை ஒன்றை தமது அன்னையிடம் கொடுத்தார். அந்த அன்னை பையிலுள்ள சுவையான இனிப்புப் பண்டங்கள் அனைத்தையும் சிறார்களிடம் பங்கிட்டுக் கொடுத்தார். கல்கத்தாவில் பணியாற்றுபவர், தன் குழந்தைகள், அன்னையுடன், மற்ற குழந்தைகளையும் சேர்த்துக்கொண்டு இந்த இனிப்புப் பண்டங்களை சரியளவில் பகிர்ந்து சாப்பிட்டனர்.

அந்தக் கிராமத்து மக்கள் விழாக்களிலும் துன்ப நிகழ்ச்சிகளிலும் ஒன்றுபட்டே பணியாற்றுவார்கள். அங்குள்ள ஒரு குடும்பத்தின் இன்ப, துன்ப நிகழ்ச்சிகளை அந்தக் கிராமத்து அனைவரின் இன்ப, துன்ப நிகழ்ச்சிகளாகவே கருதி, ஒரு குடும்பத்தவர் போல் இருந்தனர்.

**நகரங்கள் நோக்கி..**

நகர மக்களைப் போன்றே, தற்போது கிராம வாசிகளும் தனித்தனியே வாழத்தலைப்பட்டுவிட்டனர். ஒரு காலத்தில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த குடும்பங்கள் இன்று தனித்தனியே பிரிந்து விட்டது. பண்பட்ட நாகரிகம் உடையவர்கள் கூட தங்களது சகோதரர்களையும் உறவினர்களையும் விட்டு விட்டு, தங்களுக்கு சொந்தமான உரிமைகளை எடுத்துக்கொண்டு, பாகப்

---

## ஆணையாளருக்கு கேடயம் பரிசு

உத்திரப் பிரதேசத்திலுள்ள தேராலி ஊராட்சி ஒன்றிய ஆணையாளரான திரு கே. டி. சன்வால் அவர்களுக்கு கேடயம் பரிசாக அளிக்கப்பட்டது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற, சிறந்த முறையில் பணியாற்றியதற்காக அவருக்கு இந்தக் கேடயம் பரிசாக அளிக்கப்பட்டது.

1966-67-ம் ஆண்டில் இவர் 232 பேர்களுககு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்ய முயற்சி எடுத்துக் கொண்டுள்ளார். உத்திரப் பிரதேசத்திலுள்ள 875 ஒன்றியங்களில் தேராலி ஒன்றியமே இச் சிகிச்சையில் முன் நிற்கிறது. இச்சேவையில் திரு சன்வால் அவர்களுடன் துணை புரிந்த மூன்று இதர ஊழியர்களுக்கும் கூட பரிசு அளிக்கப்பட்டது. இவர்களுடன் கிராம நல ஊழியருக்கும் பரிசு கிடைத்தது.

பிரிவினை செய்து வெளியேறுவது சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது:

இப்போதெல்லாம் இளைஞர்கள் சிறு பட்டணங்களுக்கும் மாநகரங்களுக்கும் சென்று தங்குவது பெருகிக்கொண்டு வருகிறது. அறுவடையாகும் நெற்கதிர் கட்டுகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டே போகிறது. கிராமக் கைத்தொழிலாளர்கள் இயந்திரத்தோடு போட்டியிட இயலாமல், பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

### வயோதிகப் பெற்றோரும் நகரங்கள் நோக்கி....

அந்தக் கிராமத்தில் தாழ்த்தப்பட்டோர் இனத்தைச் சார்ந்த ஒருவர் கல்லூரிப் பட்டம் பெற்று, பக்கத்து ஊரில் ஆசிரியராகப் பணிபுரியச் சென்றார். அதனால் அவருடைய வயோதிகப் பெற்றோர்கள் கிராமத்தை விட்டே அவருடன் சென்று விட்டனர். இவர்களைப் பின்பற்றி அந்த ஆசிரியரின் உறவினர்கள் அனைவருமே அந்தக் கிராமத்தை விட்டுச் சென்று விட்டனர்.

நமது மக்களில் 80 சதவீதத்தினர் கிராமங்களில் வாழ்கின்றனர். இருந்தும் திறமை, அறிவு உள்ளவர்கள், இளைஞர்கள் போன்றோர் நகரங்களுக்கு சென்று விடுவதால், கிராமங்கள் பரிதாபமான நிலையில் இருக்கின்றன. கிராமங்களில் வாழ்க்கை வசதிகள், பொழுது போக்குகள் இருப்பது இல்லை. பெரும்பாலான கிராம மக்களுக்கு அதிகமான வருவாயும் இல்லையெனலாம்.

### கிராமம் செல்வோம்....

இவற்றை களைவது சற்று சிரமமான செயல் எனினும் நாம் ஏமாற்றமுற வேண்டியதில்லை. கிராம மக்களை ஒரு சமுதாயத்தினர் போல் ஒற்றுமையுடையவர்களாகவும் ஒழுக்கம், திறமை முதலியவற்றில் சிறந்தவர்களாகவும் இருக்கும்படி அவர்களுக்கு போதுமான வசதியும் நிலையும் ஏற்படுத்தித்தரவேண்டும்.



## சிறுமிகள் செய்யும் கண்ணாடி மணிகள்

முரியா என்ற பழங்குடி பெருமக்களின் சிறுவர்கள், சிறுமிகள் அணியும் ஆபரணங்கள் பல வண்ணங்கள் கொண்ட கண்ணாடி மணிகளால் செய்யப்பெற்றது. தாங்கள் தயாரித்ததையே அணிந்துகொண்டு அவர்கள் அழகுடன் விளங்குகின்றனர். மத்திய பிரதேசத்திலுள்ள பழங்குடி மக்களின் முக்கிய இடமான முரியாவில் கண்ணாடி மணிகள் செய்யும் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலை, வட்டாரத் தலைமை இடத்தில் அமைக்கப்பட்டு அங்கு கண்ணாடி மணிகள் உற்பத்தி செய்வதுபற்றி பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்தொழிற்சாலை பழங்குடி மக்களின் இருப்பிடத்திலேயே இருப்பதால், அவர்கள் இத்தொழிலில் ஈடுபட பெரிதும் துணை செய்கிறது. பயிற்சி பெற்ற ஒரு பெண் நான்கு மணி நேரத்தில், சுமார் 250 கிராம் எடையுள்ள மணிகளை உற்பத்தி செய்ய முடியும். அதனால் அப்பெண்ணுக்கு உற்பத்தி செலவு போக, ரூபாய் இரண்டு ஆதாயம் கிடைக்கிறது. அவள் இதைத் தொடர்ந்து செய்வதனால், அவளுக்கு ரூபாய் நான்கு வரை வருவாய் கிடைக்கும். பெண்கள் அனைவருமே இப்பொழுது இம் மணிகள் செய்வதில் பயிற்சி பெற்றுவிட்டபடியால், அவர்கள் நாள்தோறும் மாலை நேரங்களில் இதர பயிற்சி வகுப்புகளுக்கு செல்கின்றனர். பயிற்சி பெற்ற ஒவ்வொரு பெண்ணிற்கும், மணிகள் செய்யும் கருவிகள் இலவசமாக அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் அவர்களை கூட்டுறவு முறையில் ஒன்று சேர்க்கவும், முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. முரியா இனத்து பழங்குடி மக்கள், தங்களது இனத்தைச் சேர்ந்த பெண்கள் செய்த கண்ணாடி மணிகளை நாகரிகமாக கருதி இப்பொழுது அணிந்து வருகின்றனர்.

— o —

"பஞ்சாயத்து ராஜ்" இதழ்களிலிருந்து இடம் பெறுபவை :

பக்கங்கள் : 26 முதல் 33 வரை.

Articles reproduced from 'Panchayati Raj' on pages : 26 to 33.

# நமது பற்களும், பாதுகாக்கும் முறைகளும்

திரு ச. க. கண்ணப்பன், M.D.S.

பல் மருத்துவ ஆசிரியர், சென்னை மருத்துவக் கல்லூரி

**“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.” “உறுபசியும் ஓவாப் பிணியும்” என்கிறது குறள். பிணி நம்மை அணுகாமலிருக்க, உடலைச் சுத்தமாக, தூய்மையானதாக வைத்துக்கொள்ளவேண்டும். உள்ள உரம் மட்டுமல்ல; உடல் உரமும் வேண்டும். அவ்வகையில், மானிட உடலின் முக்கிய கூறுகளான பற்களைப் பாதுகாக்கும் முறைகளைப் பற்றி விவரிக்கும் இக்கட்டுரை, அனைவருக்கும் பயன்தரத்தக்க தொன்றாகும் —ஆசிரியர்.**

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்”; ஒருவரின் சுகமான வாழ்வானது, அவருக்கு கிடைத்த பேறு. பண்டைக் காலத்திலேயே அதன் முறைகளை தமிழர் அறிந்துள்ளனர் என்பதை “கூழானாலும் குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு” என்பதன் மூலம் கண்டுள்ளோம். மேலும் உடலுக்கு இட்ட கட்டளைப் போல் பற்களுக்கும் முதுமொழி கூறியுள்ளார்கள்.

“ஆலும், வேலும் பல்லுக்கு உறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி” ஆகும்.

ஒருவன் சுகவாழ்வு உடலை மட்டும் பேணுவதல்லாமல், பற்களின் நலமும் நாடவேண்டும் என்பதை, நான் அறிவுறுத்த விரும்புகிறேன். பற்களினால் ஏற்படும் நோய் பற்களைக் கெடுப்பதோடல்லாமல், உடலையும் தாக்குகிறது. ஆகவே, பற்களை பேணுவதன் முக்கியத்துவத்தையும், அதன் முறைகளையும் இக் கட்டுரையில் ஆராய்வோம். சாதாரணமாக இந்த முறைகளை நாம் நாள்தோறும் எளிதாக பின்பற்ற முடியும்.

நமக்கு நிலையான பற்கள் முப்பத்திரெண்டு ஆகும். இப்பற்கள் நமது உணவுப் பொருட்களைச் சிறியதாக்கி, பொடித்து உமிழ்நீருடன் கலக்கி எளிதாக்கி விழுங்க உதவுகின்றன. இந்நிலையில் மாவுப் பொருட்கள் சிறிதளவு செரிமானமாகிறது. ஆகவே செரிமான மண்டலத்தில் முதன்மையாக நமது பற்கள் விளங்குகின்றன.

மேலும் நமது பற்கள் நமது முக அழகிற்கும் பேச்சிற்கும் உதவுவனவாக உள்ளன. பற்களினால் மேலும் பல நன்மைகள் உண்டு. எனவே பற்களைப் பற்றி நாம் அறியவேண்டியது மிக்க இன்றியமையாததாகும்.

“பல் போனால் சொல் போயிற்று”

“பல் போனால் சொல் போயிற்று” என்ற பழமொழியால் பற்களின் அவசியத்தை நமது முன்னோர்கள் நன்றாக அறிந்துள்ளார்கள் என்பது தெரிகிறது. தமிழில் பற்களைப் பற்றிய கவிதைகள் பல உள்ளன.

மனிதனுக்கு சாதாரணமாக இருமுறை பற்கள் முளைக்கின்றன. முதன்முறையாக வளர்வதை “பால் பற்கள்” என்றும், இரண்டாவதாக வளர்வதை” நிலையான பற்கள்” என்றும் சொல்லுகின்றோம்.

நோய் வாய்ப்பட்ட பற்களால் உடலுக்கும் பல தீமைகள் உண்டாகும். சாதாரணமாக ஏற்படும் நோய்கள் பல் சொத்தையும், பயோரியாவும் ஆகும். இந்த வியாதிகளினால் பற்களைத் தாங்கி நிற்கும் ஈறுகள், எலும்புகள் கெடுவதால் நாம் பற்களை இழக்க நேரிடும். மேலும் கெட்ட பற்களினால் பல நோய்கள் ஏற்படுகின்றன. அவையாவன: தசை மூட்டுப் பிடிப்பு, இரைப்பை குடல் நோய், இருதய நோய், உடலில் பல இடங்களில் சீழ் பிடித்தல், மூளையில் சீழ் கட்டுதல் போன்றவை. மேலும் ஒருவனுக்கு பலவீனம், வேலை செய்யப் போதுமான சக்தியில்லாமல் போதல், மன அமைதியின்மை, அதனால் கோபப்படுதல் போன்ற துன்பங்கள் ஏற்படுகின்றன.

ஆகையால் பற்களைப் பேணிப் பாதுகாத்தலை இன்றியமையாத அன்றாடப் பழக்கமாகக் கொள்ளவேண்டும். நாள்தோறும் காலையில் துயிலெழுந்த பின்பும், இரவில் துயில்கொள்வதற்கு முன்னும் பற்களைச் சுத்தம் செய்யவேண்டும். “கந்தையானாலும் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக் குடி,” என்பதுடன் ‘சாப்பிடு முன்னும், பின்னும் பல் துலக்குதல் என்பதனை வழக்கப் படுத்திகொள்ளுதல் வேண்டும்.

## திறம்பட பாதுகாக்கப்பட வேண்டும்

நவீனமாக, பல் துலக்கி (Toothbrush) யைக் கொண்டு சுற்று முறையில் பற்களைத் துலக்குதல் சரியான முறையாகக் கருதப்படுகின்றது. பல துலக்கியில் உள்ள நார்கள் (Bristles) சேர்ந்து இல்லாமல் விலகியோ, மடிந்தோ காணப்படுமானால் அந்தத் துலக்கியைப் பயன் படுத்தக் கூடாது. சாதாரணமாக ஒரு துலக்கியை ஒரு மாத காலத்திற்கு நல்ல முறையில் பயன்படுத்தலாம். நவீன பல் துலக்கியைப் பயன்படுத்த இயலாதவர்கள் “ஆலும், வேலும்” உபயோகப்படுத்தலாம். இவை

இயற்கையிலேயே பற்களுக்கும், ஈறுகளுக்கும் நல்ல மருந்தைக் கொண்டுள்ளன.

ஒரு குழந்தை பிறந்து பல் முளைக்க ஆரம்பித்தவுடன் தாய் தனது விரலில் பஞ்சை சுற்றிப் பற்களைத் தேய்த்து விடவேண்டும். இவ்விதம் சிறு வயதிலிருந்தே பல் துலக்கும் பழக்கம் ஒரு நல்ல பழக்கமாகும். அதனால் பால் பற்களைத் திறம்பட பாதுகாக்க முடியும்.

**சாப்பிடும் முறை**

நம் நாட்டு உணவு பழக்கங்கள் நமது உடலின் நலத்துக்காக வகுக்கப்பட்டிருக்கின்றன. நமது உணவில் காய்கறி, கீரை இவற்றுடன் உணவை உண்டபின் பழவகைகளையும் உண்ணவேண்டும். பின் தாம்பூலம் தரிப்பது நம் நாட்டிற்கே உரிய நல்ல உணவு முறை. இவற்றை அளவுடன் தரித்தால் உண்ட உணவு நன்கு சீரணித்து, செரித்து, உடலுள் ஈர்க்கப்படும். அசீரணம் தவிர்க்கப்படும். மேலும் ஈறுகளைக் கெட்டிபடுத்துவதுடன், பல் சொத்தையையும் தடுக்க ஏதுவாகிறது. அளவுக்கு மிஞ்சினால் நாக்கு தடிக்கும்; பற்களின் மேல் கரைபடிந்து அழகை கெடுக்கும்.

தாம்பூலம் தரிக்கும் முறை இன்று தவருக கருதப்படுகிறது. பண்டைய நாட்களில் இம்முறையில் பல உபயோகமாகும் பொருட்களையும் சேர்த்து வந்தார்கள். நாளாவட்டத்தில் இந்த முறைகளைக் கடைப்பிடிக்காமலும், மறந்து வந்துள்ளதாலும் அதன் பயனை மறந்தது மட்டுமல்லாமல், அதனை கெடுதலாகவும் கொண்டுள்ளோம். அதனால், தாம்பூலத்தை புகையிலையுடன் சேர்த்துக் கொள்வது திட்டவட்டமான கெடுதலாகும்.

நல்ல காய்கறிகள், பழங்கள், கீரை வகைகள் பற்களுக்கு நல்லவை. பற்கள் முளைக்கும்போது நல்ல அமைப்புடன் பலமுள்ள பற்களாக ஆக்க உணவுப் பொருட்கள் தேவை. கருவுற்றிருக்கும் தாயும், பாலூட்டும் தாயும் நல்ல உணவை உண்ண வேண்டும்.

மேலும் பற்கள் முளைத்தபின் உணவை நன்றாக மென்று சாப்பிடுவதால் பற்களுக்கும் தாடைகளுக்கும் பயிற்சி ஏற்பட்டு நல்ல வளர்ச்சியைக் கொடுக்கும். மேலும் அவை பற்களை நன்கு சுத்தம் செய்துவிடும். அதனால் உணவுப் பொருட்கள் பற்களில் தங்கிக் கெடாமல், பல் சொத்தைப் போன்ற நோய் ஏற்படுவதில்லை. அதைப்போன்று, ஈறும் பலப்பட்டு பல்லில் சீழ் தங்குதல், இரத்தக் கசிவு போன்ற நோய் வராமல் தடுக்கின்றன. இனிப்புப் பொருட்களான மிட்டாய், பிஸ்கட், சாக்லட் போன்றவை பல்லுக்கு முதல் எதிரிகள். அவற்றை உண்ண நேரிட்டால் உடனே பற்களைத் துப்புறவாகத் துலக்கவேண்டும்.

**பல் பாதுகாப்பு உடல் பாதுகாப்பாகும்**

எல்லாப் பல் நோய்களும் ஆரம்பத்தில் வலியுடன் ஆரம்பிப்பதில்லை. பல் நோய் முற்றியபின் வலி, வீக்கம் ஏற்படுகின்றன. அந்த நிலையில் பற்களைப் பாதுகாக்கும் அளவிற்குச் சிகிச்சை அளிக்க இயலாது. பற்களை எடுத்தாலொழிய முழு சுணம் கிடையாது. ஆகவே பற்களை எடுக்காமல் அவை பாதுகாக்கப்பட வேண்டின், ஒவ்வொருவரும் குறைந்தது ஆறுமாதங்களுக்கு ஒரு முறையாவது பல் மருத்துவரிடம் பல் பரிசோதனை செய்துகொள்வது நல்லது. நோய் ஆரம்பித்திருந்தால் அதற்கு வேண்டிய சிகிச்சை பெறுவது இன்றியமையாததாகும். இவ்வாறுகப் பற்களுக்கு ஏற்படும் நோயை அகற்றி பற்களைப் பாதுகாப்பதன் மூலம் நமது உடல் நலத்தையும் பேணுகின்றோம்.

சிலருக்குப் பற்கள் ஏறுமாறாகவும், முன்தள்ளியும் இருந்து முகத்தின் அழகைக் கெடுக்கின்றன. அவர்கள் சிறு வயதிலிருந்தே பல் சீர்திருத்த முறையைப் பயன்படுத்தினால் நல்ல பலன் கிடைக்கும். இந்த நாட்களில் இவ்விதமான சிகிச்சையை எளிதாகச் செய்யமுடியும். முகமும் அழகைப் பெறும்.

நல்ல பற்கள் உள்ளத்திற்கும், உடலுக்கும் தேவை. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.' அஃதேபோல் உடலின் நலம் பற்கள் நலத்தில் தெரியும்.


The following particulars regarding the ownership of " GRAMANALAM ", the monthly magazine are published, as called for, by rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956:

**FORM IV**

(*See* rule 8.)

| | | |
|---|---|---|
| 1 | Place of publication .. .. .. | N.C.C. Buildings, Fort St. George, Madras-9. |
| 2 | Periodicity of publication .. .. | Monthly. |
| 3 | Printer's name .. .. | Thiru M. K. Gomethakavelu, B.A. (Hons.), Director of Stationery and Printing. |
| | Nationality .. .. .. .. | Indian. |
| | Address .. .. .. .. | Government Press, Madras-1. |
| 4 | Publisher's name .. .. | Thiru V. Natarajan, I.A.S., Director of Rural Development. |
| | Nationality .. .. .. | Indian. |
| | Address .. .. .. | N.C.C. Buildings, Fort St. George, Madras-9. |
| 5 | Editor's Name .. .. .. | Thiru S. Venkataswamy, M.A., Public Relations Officer, Directorate of Rural Development. |
| | Nationality .. .. .. .. | Indian. |
| | Address .. .. .. .. | N.C.C. Buildings, Fort St. George, Madras-9. |
| 6 | Name and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital. | Government of Madras, Fort St. George, Madras-9. |

I, V. Natarajan, hereby declare that the particulars given above, are true to the best of my knowledge and belief.

(Signed) V. NATARAJAN,
*Publisher.*

Dated 1st February, 1968.

# கிராமநலம் மாதப் பத்திரிகை

## விளம்பர விவரங்கள்

| | |
|---|---|
| ஆசிரியர் .. .. .. .. | மக்கள் தொடர்பு அதிகாரி, கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், கோட்டை, சென்னை-9. |
| வெளியிடுபவர் .. .. .. | கிராம வளர்ச்சி இயக்குநர், சென்னை-9. |
| பத்திரிகையின் நோக்கம் .. .. .. | வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, கூட்டுறவு, குடிசைத் தொழில், பொதுச் சுகாதாரம் முதலான கிராம வளர்ச்சித் திட்டங்கள், ஊராட்சிகள், ஊராட்சி மன்றங்கள், நகராட்சிகள் ஆகியவற்றின சாதனைகள் பற்றி, மக்களுக்குப் பயனுள்ள தகவல்களை வெளியிடுதல். |
| கடிதப் போக்குவரத்துக்கான முகவரி . .. | ஆசிரியர், "கிராமநலம்" & மக்கள் தொடர்பு அதிகாரி, கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், கோட்டை, சென்னை-9. |
| தொலைபேசி எண் .. .. .. | 29233—கிளை எண் 19 |
| தந்தி முகவரி .. .. .. | "ரூரல்" (RURAL) |
| ஆண்டுச் சந்தா .. .. .. | ரூபாய் இரண்டு மட்டும். |

### விளம்பரக் கட்டண விவரம்

| | அவ்வப்போது வெளியிடும் விளம்பரங்களுக்கு. | குத்தகையாக ஒரே இட அளவிற்கு குறைந்தது 12 விளம்பரங்கள். |
|---|---|---|
| **இரண்டாவது, மூன்றாவது அட்டைப் பக்கங்கள் (ஒரே வண்ணத்தில்)** | | |
| முழுப் பக்கம் | ரூ. 420 | ரூ. 315 ஒரு முறைக்கு |
| அரைப் பக்கம் | ரூ. 215 | ரூ. 165 |

# ஊராட்சி அரசிதழ்

# PANCHAYAT GAZETTE

கிராம நலம் பகுதி-2

GRAMANALAM PART-2

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

———o———

## மும்மொழித் திட்டம் கைவிடப்பட்டு, இருமொழிப் பாடத் திட்டம் ஏற்படுத்தப்படுகிறது.

## Education—Schools—Study of languages—Three language formula—Discontinued—Two languages Introduced—Orders issued.

இம்மாநிலத்திலுள்ள பள்ளிகளிலே, மும்மொழித் திட்ட அடிப்படையில், கீழ்க்கண்டவாறு தற்போது மொழிகள் கற்பிக்கப்படுகின்றன:—

பிரிவு ஒன்று

பிராந்திய மொழி அல்லது பிராந்திய மொழியினின்று வேறுபடுகையில் தாய்மொழி.

| | அவ்வப்போது வெளிபிடும் விளம்பரங்களுக்கு | குத்தகையாக ஒரே இட அளவிற்கு குறைந்தது 12 விளம்பரங்கள். |
|---|---|---|
| **நான்காவது அட்டைப் பக்கம் (இரண்டு வண்ணங்களில்)** | | |
| முழுப் பக்கம் | ரூ. 450 | ரூ. 325 |
| அரைப் பக்கம் | ரூ. 230 | ரூ. 170 |
| **உள் பக்கங்கள்** | | |
| முழுப் பக்கம் | ரூ. 400 | ரூ. 300 |
| அரைப் பக்கம் | ரூ. 210 | ரூ. 160 |

**விளம்பர ஏஜென்சிகளுக்கு 15 சதவீத கமிஷன் அளிக்கப்படும்.**

**அச்சிடுதல் பற்றிய குறிப்புகள்.**

| | |
|---|---|
| பத்திரிகையின் அளவு .. | $8\frac{1}{4}'' \times 11\frac{1}{2}''$ |
| பத்திரிகை வெளியிடப்படும் நாள் .. | மாதந்தோறும் அதன் இறுதி வாரத்தில் வெளியாகும். |
| விளம்பரங்களைப் பெற இறுதி நாள் .. | பத்திரிகை வெளியாகும் தேதிக்கு 40 நாட்கள் வரை. |
| அச்சுப் பகுதிக்குரிய தனி அளவு .. | 6–5/6" × 10". |
| ஒரு "பத்தி"யின் (Column) அகலம் .. | 3–1/3". |
| பயன்படுத்தப்படும் காகிதம் .. | சாதாரண வெள்ளை அச்சுக் காகிதம் (Ordinary white printing paper) |
| அட்டைகளுக்கு பயன்படுத்தப்படும் காகிதம் .. | இந்தியன் "ஆர்ட்" காகிதம் (Indian art paper) |
| தேவைப்படும் ஆ.·.ப்டோன் (Half-Tone) .. | அட்டைப் பக்கங்களுக்கு 80<br>இதரப் பக்கங்களுக்கு 50<br>ஸ்டீரியோஸ் (Stereos) ஏற்றுக் கொள்ளப்படும். |

**விற்பனை**

**பிரதிகள்—20,000**

தமிழகத்திலுள்ள செய்தி நிலையங்கள், சமூகக் கல்வி நிலையங்கள், கிராம வானொலி மன்றங்கள் மகளிர் மன்றங்கள், பள்ளிகள், ஊராட்சி நிறுவனங்கள், இந்த இதழுக்குச் **சந்தா செலுத்தி**, மக்கள் படித்துப் பயன்பெற ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

(தமிழகத்தில் 12,881 ஊராட்சி மன்றங்கள், 438 பேரூராட்சி மன்றங்கள், **374** ஊராட்சி ஒன்றியங்கள், 88 நகராட்சிகள், 14 நகரியங்கள் உள்ளன.)


**பிரிவு இரண்டு**

சிறப்புத் தமிழ் அல்லது இந்தி அல்லது பிரிவு ஒன்றில் எடுத்துக் கொள்ளாத பிற இந்திய மொழி.

**பிரிவு மூன்று**

ஆங்கிலம் அல்லது இந்திய மொழி அல்லாத பிற நாட்டு மொழி.

**2.** பள்ளிகளில் கற்பிக்கப்பட வேண்டிய மொழித்திட்டம் பற்றி அரசு தற்போது பரிசீலனைசெய்தது. 1968-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23-ஆம் நாள் கூட்டப் பெற்ற இம்மாநில சட்ட மன்ற சிறப்புக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, பள்ளிகளில் மும்மொழித் திட்டத்தை நீக்கிவிட்டு, அதற்கு மாறாக மொழி பற்றிய பாடங்கள் இருமொழியில் இருக்கவேண்டும் என்று அரசு முடிவு செய்கிறது. அதற்கேற்ப, இம்மாநிலத்திலுள்ள பள்ளிகளில், மொழி பற்றிய பாடத் திட்டம், உடனடியாகக் கீழ்க்காணும் அடிப்படையில் இருக்கவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

பிரிவு (அ)— பிராந்திய மொழி அல்லது பிராந்திய மொழியினின்றும் வேறுபடுகையில் தாய்மொழி.

பிரிவு (ஆ)—ஆங்கிலம் அல்லது இந்திய மொழி அல்லாத வேறு நாட்டு மொழி.

பிரிவு (அ)-ல் கூறப்பட்ட மொழியானது முதல் வகுப்பிலிருந்தும், பிரிவு (ஆ)-ல் கூறப்பட்ட மொழி மூன்றும் வகுப்பிலிருந்தும் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இந்த இரண்டு மொழிகளிலும் தேர்வுகள் கட்டாயமானதாக தொடர்ந்து இருக்கும்.

**3.** தற்போதுள்ள இந்தி ஆசிரியர்களை அவர்களின் தகுதி அடிப்படையில், தகுந்த பதவிகளில் அமர்த்துவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று இந்த சூழ்நிலையில் அரசு தெளிவுபடுத்த விரும்புகிறது. இது பற்றிய ஆணைகள் தனியே பிறப்பிக்கப்படும்.

**4.** ஒன்பது, பத்து, பதினொன்றாவது வகுப்புகளின் பாடத் திட்டத்தில், தேவையான மாற்றங்களைச் செய்து, மேற்கண்ட ஆணைகளை உடனடியாக செயல்படுத்தும்படி, இடைநிலைக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(1968-ம் ஆண்டு ஜனவரி 24-ம் நாளிட்ட, கல்வித் துறையின் அரசு ஆணை எண் 105-ன் சுருக்கம்)

## தேசிய உடல் நலப்படைப் பயிற்சியில், இந்தி ஆணைச் சொற்களுக்குப் பதில், தமிழ் அல்லது ஆங்கில ஆணைச் சொற்களைப் பயன்படுத்தல்—விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன

## National Fitness Corps—Physical Education Training—Use of Tamil or English words of command in the place of Hindi words—Instructions—Issued.

தேசிய உடல் நலப் படைத் (National Fitness Corps) திட்டம் அல்லது வேறு எந்த உடற்பயிற்சிக் கல்வித் திட்டத்தின்படி நடைபெறும் உடற்பயிற்சிக் கல்வி வகுப்புகளில் பயன்படுத்தப்படும் ஆணைச் சொற்களெல்லாம், உடனடியாக தமிழ் அல்லது ஆங்கிலத்தில் இருக்க வேண்டுமேயன்றி, இந்தியில் இருத்தலாகாது என்று, கல்வித் துறையின் 1966-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 148-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்குத் திருத்தமாக அரசு இப்போது ஆணை பிறப்பிக்கிறது.

* * *

(கல்வித் துறையின் 24-1-1968-ட்ட அரசு ஆணை எண் 104-ன் சுருக்கம்.)

## தமிழக அரசுத் தலைமைச் செயலகம்-நுழைவுக் கட்டுப்பாடு பற்றி அறிவிப்பு

தமிழக அரசின் தலைமைச் செயலகம் உள்ள சென்னை கோட்டைக்குள், மக்கள் செல்வது சம்பந்தமான கட்டுப்பாடு பற்றி அரசு அறிக்கையொன்று வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு :

தமிழக அரசின் தலைமைச் செயலகத்திலிருந்து பேனா, எவர்சில்வர் பாத்திரங்கள், மூக்குக் கண்ணாடி, மின்விளக்கு, தண்ணீர்க் குழாய்கள், தட்டெழுத்துப் பொறி, நூல்கள் போன்றவை காணமற் போவதாக 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ந் தேதியும் அதற்கு முன்னும் புகார்கள் வந்தன. புதுடில்லியிலுள்ள மத்திய அரசிலுள்ள தலைமைச் செயலகத்திலும், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரம், மைசூர் போன்ற பல மாநிலங்களின் தலைமைச் செயலகங்களிலும் செய்யப்படுவது போல் செயலகத்திற்குள் மக்கள் நுழைவது அனுமதிச்சீட்டு மூலம் கட்டுப்படுத்தப்பட்டால், அதன் பயனைத் திருட்டுகள் தடுக்கப்படுவதுடன், உண்மையாகவே அதிகாரிகளைப் பார்க்கவும் முறையீடு செய்யவும் வருகிறவர்களை ஒழுங்குபடுத்தி உரிய அதிகாரிகளிடம் அனுப்புவதால், அவர்களது குறைகள் தீர்க்கப்பட வசதியாக இருக்கும் என அரசு கருதியது.

### வாயில்கள்

அதனையொட்டி, தலைமைச் செயலகத்திற்குள் 8 வாயில்களை மட்டும் திறந்துவைப்பதென்றும், மற்றவற்றை மூடிவிடுவதென்றும் அரசு தீர்மானித்தது. சட்டமன்ற மண்டபத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் இருக்கும் வாயில்களும், சட்டமன்ற அங்கத்தினர்கள் ஓய்வு அறைக்கு எதிரிலுள்ள வாயிலும் ஆகிய மூன்று வாயில்கள் அமைச்சர்கள், சட்டமன்ற அங்கத்தினர்கள், நாடாளுமன்ற அங்கத்தினர்கள், சட்டமன்றத் துறை அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோர் மட்டுமே செல்வதற்குரியவை. இவற்றின் வழியாக மற்றவர்கள் செல்வதைத் தடுக்க இந்த வாயில்களில் காவலர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். மற்ற ஐந்து வாயில்கள் அலுவலர்கள் செல்வதற்குரியவை. தலைமைச் செயலக அலுவலர்களுக்கு, அவர்களது புகைப்படம் ஒட்டிய அடையாளச் சீட்டுக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஐந்து வாயில்களின் இரண்டில், அதாவது வடபகுதியிலும் மேற்குப் பகுதியிலும் இருக்கும் இயங்கேணிகளுக்கு (லிப்டுகளுக்கு) அருகில் வரவேற்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அலுவல் காரணமாக தலைமைச் செயலகத்திற்குள் செல்ல விரும்புகிறவர்களுக்கு, வரவேற்பாளர் அனுமதிச் சீட்டுக்கள் வழங்குவார்.

சட்டமன்ற அங்கத்தினர்களுக்கு (சட்டமன்ற) மேலவைத்துறை வழங்கியுள்ள அடையாளச் சீட்டுக்களே தலைமைச் செயலகத்திற்குள் நுழையப் போதுமானதாகும்.

### பார்வையாளர்கள்

வரவேற்பாளருக்குத் தொலைபேசி உண்டு. பார்வையாளர் அவரிடம் செல்லவேண்டும். அவர் யாரைப் பார்க்க விரும்புகிறார் என்பதை வரவேற்பாளர் தெரிந்துகொண்டதும், அந்த அதிகாரி அல்லது அதிகாரியின் நேர்முக எழுத்தர் அல்லது அமைச்சரின் நேர்முக உதவியாளருடன் தொடர்புகொண்டு அவரைப் பார்க்க வசதிப்படுமா என்று கேட்பார். பார்க்கலாம் என்று பதில் கிடைத்தால், வந்தவருக்கு அவர் அனுமதிச் சீட்டு வழங்குவார்.

அந்தச் சீட்டில் பார்வையாளரின் பெயர், அவர் பார்க்க விரும்பும் அதிகாரி, அந்த அதிகாரி சார்ந்துள்ள துறை ஆகிய விவரங்கள் இருக்கும். அனுமதிச் சீட்டின் தேதி, எண், அது வழங்கப்படும் நேரம் ஆகியவையும் அதில் குறிக்கப்பட்டிருக்கும். அனுமதிச் சீட்டில் மூன்றுபகுதிகள் இருக்கும் எதிரிடைச் சீட்டுப் பகுதியை (Counterfoil) வரவேற்பாளர் நிறுத்திக் கொள்வார்; பார்வையாளர் சந்திக்க விரும்பும் அதிகாரி நிறுத்திக்கொள்ள வேண்டிய இரண்டாவது பகுதியும், வெளியே போகும்போது நுழைவாயிலுள்ள காவலாளரிடம் கொடுக்க வேண்டிய மூன்றுவது பகுதியும் பார்வையாளரிடம் தரப்படும். இந்த இரு பகுதிகளையும் எடுத்துக்கொண்டு பார்வையாளர் தான் பார்க்க விரும்பும் அதிகாரியிடம் செல்வார். அதிகாரி இரண்டாவது பகுதியைத் தன்னிடம் நிறுத்திக்கொண்டு, மூன்றுவது பகுதியைப் பார்வையாளரிடம் அளிப்பார். பார்வையாளர் தனது வேலை முடிந்து, செயலகததை விட்டு வெளியே போகும்போது, நுழைவாயிலிலுள்ள காவலாளரிடம் அந்தச் சீட்டைக் கொடுத்துவிடுவார். பார்வையாளர் போய்ப் பார்க்கும் அதிகாரி, அவரை வேறொரு அதிகாரியிடம் அனுப்புவதாக இருந்தால் அந்த அதிகாரியின் பெயரையும் பதவியையும் எழுதி, அனுமதிச் சீட்டின் இரண்டாவது பகுதியையும் பார்வையாளரிடமே தந்துவிடுவார். பார்வையாளர் இரண்டாவது பகுதியையும் மூன்றுவது பகுதியையும் எடுத்துக் கொண்டு, அவர் குறிப்பிட்ட அதிகாரியிடம் செல்வார்.

பார்வையாளர் பார்க்க விரும்பும் அதிகாரி, அல்லது அதிகாரியின் நேர்முக எழுத்தர், அல்லது அமைச்சரின் நேர்முக உதவியாளர் அந்த நேரம் வசதிப்படாது என்று, வேறொரு நேரத்தை வரவேற்பாளரிடம் தெரிவித்தால், அவர் அந்தச் செய்தியைப் பார்வையாளரிடம் சொல்லி, அந்த நேரத்தில் வந்து பார்க்குமாறு அவரைக் கேட்டுக் கொள்வார்.

ஒரே காரியத்திற்காக ஒரு குறிப்பிட்ட அதிகாரியைப் பலர் பார்க்க விரும்பினால், வரவேற்பாளர் அவர்களுக்கு ஒரே ஓர் அனுமதிச் சீட்டு வழங்கி, அதில் அந்தக் குழுவின் பிரதிநிதியின் பெயரையும் அவர் பிரதிநிதித்தவம் வகிக்கும் நபர்களின் எண்ணிக்கையையும் எழுதுவார்.

சட்டமன்ற அங்கத்தினர்களுடன் பார்வையாளர்கள் வந்தால், வரவேற்பாளரிடமிருந்து அந்தப் பார்வையாளர்கள் மட்டும் அனுமதிச் சீட்டு பெற வேண்டும்.

எந்த அதிகாரியைப் பார்ப்பதென்று பார்வையாளருக்குத் தெரியாவிட்டால், வரவேற்பாளர் அவரிடமிருந்து விவரம் கேட்டு அவருக்கு வழி காட்டுவார்.

இந்த ஏற்பாட்டால் வரவேற்பாளர்கள், பார்வையாளர்களுக்குத் தக்க முறையில் அதிகாரிகளை அவர்கள் சந்தித்துப் பேச உதவுவார்கள். அத்துடன் அதிகாரிகள் அவர்களது குறைகளைக் கவனிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள், இதனால் பார்வையாளர்கள் நேரம் வீணுவது தவிர்க்கப்படும்.

இந்த அனுமதிச் சீட்டு முறை 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21-ம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

## ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஊழியர்கள், தங்களின் அலுவலக நேர் உயர்வு அதிகாரிகளல்லாதவர்களுடன் கடிதப் போக்குவரத்து, செய்தல், பேட்டி காணுதல் மற்றும் உயர்மட்ட அதிகாரிகள், அமைச்சர்களிடம் செல்வாக்கை பயன்படுத்துதல்—தடுக்கப்படுகிறது—விளக்க ஆணைகள்—உறுதிப்படுத்தப்படுகின்றன

## Panchayats and Panchayat Union Servants—Correspondence and interviews with authorities other than immediate official superiors and canvassing of influence to bear on high officials and Ministers—Prohibited—Instructions—Reiterated.

ஊராட்சி ஒன்றிய குழுக்கள், ஊராட்சிகளில் பணிபுரியும் அலுவலர்கள், தங்களின் சொந்த முன்னேற்றத்தைக் கருதி, உயர்தர அதிகாரிகளுக்கு கடிதம் எழுதுதல், அவர்களின் பேரில் தங்களது செல்வாக்கைப் பயன்படுத்துதல் அல்லது அவர்களைப் பேட்டி காணுதல் போன்ற செயல்களை, ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் அதிகாரிகள், ஊழியர்களின் தனிப்பட்ட ஒழுக்கத்தைப்பற்றிய விதிகளில் (Rules relating to Personal Conduct of Officers and Servants of Panchayat Union Councils) விதிகள் 18, மற்றும் 19-ம், ஊராட்சிகளின் அதிகாரிகள், ஊழியர்களின் தனிப்பட்ட ஒழுக்கத்தைப் பற்றிய விதிகளிலுள்ள விதிகளும் தடை செய்கின்றன. சமீபகாலமாக தங்களது சொந்த நலன் கருதி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள அலுவலர்கள், வேலை இடமாற்றங்களைக் கோருதல், இடமாற்ற ஆணைகளை தள்ளுபடி செய்யக்கோருதல், பதவி உயர்வு கோருதல் போன்ற செயல்களுக்கு, அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும் நிர்ப்பந்தப்படுத்தப்படுத்திய செயல்கள்

பல நிகழ்ந்துள்ளன. இம்மாதிரியான செயல்கள், நன்னடத்தை விதிகளுக்கு புறம்பானதாக இருப்பதோடு, ஊழியர்களின் நேர்மைப் போக்கை குலைப்பதாகவும் இருக்கிறது. இம்மாதிரியான பழக்கங்களுக்கு ஒரு முடிவு காண அரசு தீவிரமாக இருக்கிறது. ஊழியர்களுக்கு குறைகளிருப்பின். அவை பற்றி எழுத்துவடிவில், தங்களது நேர் உயர் அதிகாரி வாயிலாக, தகுந்த அதிகாரிக்கு முறையிட்டுக் கொள்ள வேண்டும். இருப்பினும், முறையீட்டின் ஒரு நகலை, முன்னதாகவே உயர் அதிகாரிக்கு அனுப்பிவிடுவதில் எந்த மறுப்பும் இல்லை.

3. அமைச்சர்கள், உயர் அதிகாரிகளின் மீது நிர்பந்தங்களைக் கொண்டு வருதல், நன்னடத்தை விதிகளை மீறும் செயலாகும். அவ்வாறு மீறப்பட்ட நேர்வுகளின் மீது ஒழுங்குமுறை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்க அரசு விரும்புகிறது. தங்களது மாவட்டங்களிலுள்ள ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள எல்லா அலுவலர்களின் கவனத்திற்கும், இந்த விளக்க ஆணைகளைக் கொண்டு வருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 10–1–1968 நாளிட்ட அரசு ஆணை எண் 19.)

## நூலக ஆணைக் குழுக்களின் கட்டிடங்களுக்கு வாடகை செலுத்துதல்—விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன

## Panchayats—Contributions—Incurring of expenditure towards payment of rent for Local Library Authorities buildings—Instructions—Issued.

நூலக ஆணைக் குழுவின்(Local Library Authority) சில கிளை நூலகங்கள் ஊராட்சிகளால் அளிக்கப்பட்ட வாடகைக் கட்டிடங்களில் அமைந்திருப்பதும், இந்த கட்டிடங்களுக்குரிய வாடகைத் தொகைகள், ஊராட்சி நிதிகளிலிருந்து செலவழிக்கப்படுகிறது என்பதும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. இவ்வாறு வாடகைத் தொகைகளை செலுத்துவது முறையற்றது என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

2. நூலக ஆணைக் குழுவின், துணை நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு, ஊராட்சிகளின் நிதிகளிலிருந்து வாடகைத் தொகையளிப்பது, ஊராட்சிகளின் மீது கடமையாக்கப்பட்ட ஒரு செலவினம் என்று 1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டத்தின் விதித் துறைகளில் கூறப்படவில்லை. இச்செலவினத்தை, ஊராட்சிகளின் நிதிகளிலிருந்து அளிக்கப்படும் ஒரு நன்கொடையெனக் கருதி, அதை எதிர்பாராத செலவினம் என்று, 1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 139 (4) iii-ல் கொண்டு வருதல் கூடாது; இச் செலவினம், நூலக ஆணைக் குழுவின் சட்டப் பூர்வமான செலவினம் மட்டுமின்றி, அக் குழுவின் நிதிகளிலிருந்தே, வாடகைத் தொகை அளிக்கப்படவேண்டுமேயன்றி, ஊராட்சிகளின் நிதிகளிலிருந்து வாடகை அளிக்கப்படக் கூடாது. மேற்கண்ட விதித் துறையானது, எதிர்பாராத சூழ்நிலையில்தான் பயன்படுத்தப்பட வேண்டுமேயன்றி, இவ்விதமாக தொடர்ந்து ஏற்படும் செலவினங்களுக்கு, அந்த விதித்துறையை பயன்படுத்தக் கூடாது. 1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டத்திலுள்ள, பிரிவு 139 (4) iii-ஐ, பயன்படுத்தி, நூலக ஆணைக் குழு வசமுள்ள கட்டிடங்களுக்கு வாடகை செலுத்த, ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற முறையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுமதி வழங்கிவரின், அது உடனே கைவிடப்பட வேண்டும்.

இராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ந் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 133815–ன் சுருக்கம்

## அரசு ஊழியர்களைச் சார்ந்திருக்கும் திருமணமாகாத சகோதரிகளுக்கும் இலவச மருத்துவச் சலுகைகளை அளித்தல்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன

## Medical Attendance—Madras Medical Attendance Rules—Extension of free medical concessions to dependent unmarried sisters of Government servants—Orders issued.

முன்னூறுருபாய்க்கு மேற்படாத மாத ஊதியம் பெறும் அரசு ஊழியர்கள், மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பத்தினர்களும் தமிழக மருத்துவச் சலுகை விதிகளின்படி இலவச மருத்துவச் சலுகை பெற தகுதி உடையவர்களாக இருக்கிறார்கள்.

பெற்றோர்கள், மனைவி, சட்ட பூர்வமான குழந்தைகள் (தத்து எடுத்த மகன் உள்பட) மாற்றாந்தாய் குழந்தைகள், அரசு ஊழியர்களுடன் வசிக்கும் அல்லது அவர்களைச் சார்ந்திருக்கும் மாற்றாந்தாய், சட்டப்படி நீதிமன்ற அனுமதியுடன் பிரிந்திருக்கும் மனைவியர்கள், அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளின் கைம்பெண்ணாய் இருக்கும் மகள்கள் அல்லது விவாக ரத்து செய்து கொண்ட மகள்கள், மற்றும் அவர்களைச் சார்ந்திருக்கும் விதவைத்தாய் ஆகியோர் மட்டுமே இலவச மருத்துவச் சலுகை பெற தகுதி உடையவர்கள்.

2. அரசிதழ் பதிவு பெருத அரசு ஊழியர்களைச் சார்ந்துள்ள திருமணமாகாத சகோதரிகளுக்கும் இலவச மருத்துவச் சலுகையை அனுமதிப்பது பற்றி, மருத்துவப் பணி இயக்குநருடன் அரசு பரிசீலனை செய்தது. அரசிதழ் பதிவு பெருத அரசு ஊழியர்களைச் சார்ந்திருக்கும் திருமணமாகாத சகோதரிகளுக்கும், இலவச மருத்துவச் சலுகை அனுமதிப்பது நேர்மையுடையது என்று கூறி, அவ்வித சலுகையை அளிக்கலாம் என்று மருத்துவப் பணி இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

3. மருத்துவப் பணி இயக்குநரின் பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டு, மாதம் ரூ. 300/–க்கு மிகாமல் சம்பளம் பெறும் அரசிதழ் பதிவு பெருத ஊழியர்களுக்கும், உள்ளாட்சி நிறுவன ஊழியர்களுக்கும் அனுமதிக்கப்பட்டு வந்த இலவச மருத்துவச் சலுகையை இவர்களைச் சார்ந்திருக்கும் திருமணமாகாத சகோதரிகளுக்கும் நீடிப்பதற்கு அரசு ஏற்றுக்கொண்டு ஆணை பிறப்பிக்கிறது. இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து இந்த சலுகை செயலுக்கு வரும்.

(1966–ம் ஆண்டு அக்டோபர் 1–ஆம் நாளிட்ட, கல்வி, பொது சுகாதாரத் துறையின் அரசு ஆணை எண் 1769–ன் சுருக்கம்.)

## தமிழக பிரயாணப்படி விதிகள்—விதி 25-ல் உள்ள விளக்க விதி 5-க்கு திருத்தங்கள் பிறப்பிக்கப்படுகின்றன

## Madras Travelling Allowance Rules—Rule 25—Ruling 5—Amendment—Issued.

தமிழக அரசு பிரயாணப்படி விதிகளில் (Madras Travelling Allowance Rules) விதி 25-ல் உள்ள விளக்க விதி 5 (Ruling 5 under rule 25), பின் கண்டவாறு மாற்றப்பட வேண்டும் :—

பொதுத் தேர்தல்கள் மற்றும் துணைத் தேர்தல்களை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை மேற்பார்வை செய்ய, தலைமை வாக்குப் பதிவு அதிகாரியும், தமிழக அரசு தலைமைச் செயலக அதிகாரிகளும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கையில், 60 கிலோ மீட்டருக்கு அதிகமான தூரம் உள்ள பிரயாணத்திற்கும், முழு மைல் பிரயாணப்படி சலுகைகள், அவர்களுக்கு அனுமதிக்கப்படும். இந்தச் சலுகையானது பொதுத் தேர்தலாக இருப்பின், ஒரு மாதத்திற்கு–அதாவது வாக்குப் பதிவு நடைபெறுவதற்கு முதல் நாளிலிருந்து வாக்குப் பதிவு முடிந்த இரண்டு நாட்கள் வரையிலும் அனுமதிக்கப்படும். துணைத் தேர்தலாக இருப்பின், வாக்குப் பதிவு நடைபெறுவதற்கு 7 நாட்களுக்கு முன்பிருந்து வாக்குப் பதிவு முடிவுற்ற இரண்டு நாட்கள் வரை இச்சலுகை உண்டு.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வருவாய்த் துறையிலுள்ள இதர அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு பணிக்கென்றே சிறப்பாக அமர்த்தப்பட்ட அரசிதழ் பதிவு பெற்ற காவல் அதிகாரிகள் ஆகியோருக்கும், தமிழகத்தில் நடைபெறும் பொதுத் தேர்தல், துணைத் தேர்தல்களுக்கு இந்த முழு மைல் பிரயாணப்படிச் சலுகை விரிவுபடுத்தப்படும். காவல் துறையில் உள்ள மற்ற அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள், இந்த முழு மைல் பிரயாணப்படிச் சலுகையைப் பொதுவாகப் பெருமல், 'தேர்தல் வேலைகளுக்காகவே பிரயாணம் செய்தார்கள்' என்ற சான்றிதழின் பேரில் மேற்குறிப்பிட்டுள்ள சலுகை பெற்றுக் கொள்ளலாம். காவல் துறை அதிகாரிகளின் அலுவல் வரம்பாக ஒரு மாவட்டம், அல்லது ஒரு பகுதி அல்லது மாநிலம் முழுவதுமே இருக்கும் நிலையில், அவரவர்களின் அலுவல் வரம்பிற்கேற்றவாறு, வாக்குப் பதிவின் முதல் நாளிலிருந்து, ஏழு நாட்கள் முன்பு வரை கணக்கிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத் தொகுதிகள் அனைத்திற்குமுள்ள தேர்தல் வேலைகளுக்காக பிரயாணம் மேற்கொள்ளும் மாவட்ட வாக்குப் பதிவு அதிகாரிகள் (District Election Officers), தேர்தல் அதிகாரிகள் (Returning Officers) துணைத் தேர்தல் அதிகாரிகள் (Assistant Returning Officers) ஆகியோருக்கும் மேற் குறிப்பிட்டுள்ள முழு மைல் சலுகை விரிவுபடுத்தப்படும். பொதுத் தேர்தலைப் பொறுத்தவரையில், வேட்பாளர் தமது விண்ணப்பத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் இறுதி நாளிலிருந்து, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் நாள் முடிய மட்டுமே, இந்தச் சலுகைகளை இவர்கள் அடைய முடியும்.

(நிதித் துறையின் 1967-ஆம் ஆண்டு ஜூலை 29-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 695-ன் சுருக்கம்.)

## ஓய்வூதியம்—கைம்பெண்களின் இறுதிகாலம் வரை ஓய்வூதியம் அளித்தல்—மனைவியை இழந்த கணவர்களுக்கும் ஓய்வூதியம்—விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன.

## Pension—Madras Liberalised Pension Rules, 1960—Grant of family pension for life of widows—Applicability to widowers—Clarificatory orders—Passed.

1960ம் ஆண்டு தமிழக அரசின் தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகளின்படி, கைம்பெண்கள் வயது வராத குழந்தைகள் 1964-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி அன்று குடும்ப ஓய்வூதியம் பெறும் தகுதியானது, கைம்பெண்களைப் பொருத்தவரையில் மரணம் அல்லது மறுமணம் வரையிலும், வயதுவராத குழந்தையாயிருந்தால், பருவம் அடையும் காலம் வரையிலும் அல்லது மகளாக இருப்பின் திருமண காலம் வரையிலும் நீடிக்கப்பட்டு, நிதித்துறையின் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2-ந் தேதியிட்ட அரசு ஆணை எண் 345-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

இந்த நாளுக்குப்பிறகு அவர் இறந்துவிட்டிருந்தால், (ஓய்வு பெற்ற நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக) கைம்பெண்களும், வயது வராத குழந்தைகளும் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுண்டு.

2. அரசுப் பணியிலுள்ள பெண் அலுவலர்களின் கணவர்களுக்கும் இந்த சலுகை பொருந்துமா என்பது பற்றி ஒரு கேள்வி எழுந்துள்ளது. ஏனெனில் தற்போதுள்ள ஆணைகளில் அது பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இந்திய அரசை கலந்தாலோசித்ததில், இந்த சலுகை, அரசு அலுவலிலுள்ள பெண்களின் கணவர்களுக்கும் பொருந்தும் என்று கூறியுள்ளது. எனவே, இந்தச் சலுகையானது, அரசுப் பணியிலுள்ள பெண் அலுவலர்களின் கணவர்களுக்கும் பொருந்தும் என்று, அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(நிதித் துறையின் 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 920-ன் சுருக்கம்).

## தாழ்த்தப்பட்டோர் நலன்—ஊராட்சிகளிலும் நகராட்சிகளிலும் வேலை செய்யும் துப்புரவுத் தொழிலாளிகளுக்கு வீட்டு வசதி செய்து தருதல்—உதவித் தொகை அனுமதித்தல்—விண்ணப்ப படிவம்—நிர்ணயிக்கப்படுகிறது

## Harijan welfare—Housing for sanitary workers employed in panchayats and municipalities Sanction of subsidy—Application forms—Prescribed.

கிராம வளர்ச்சி இயக்குநர் மற்றும் நகராட்சி ஆய்வாளரின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டு, வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெறுவதற்கு, இந்த ஆணையின் இணைப்பில் நிர்ணயித்த படிவத்தில் அரசுக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

### இணைப்பு

ஊராட்சி நகராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட உதவித் தொகை கோரும் விண்ணப்பம் :

1. ஊராட்சி / நகராட்சி / நகரியக் குழுவின் பெயர்: ஊராட்சியாய் இருப்பின் கோட்டத்தின் பெயர்:
2. மாவட்டம்:
3. ஊராட்சி / நகராட்சி / நகரியக் குழுக்களில் பணிபுரியும் துப்புரவு ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை:
4. வீட்டு வசதி செய்து தரப்பட வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை;
5. இது வரை வீட்டு வசதி செய்து தரப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை:

   (அ) அரசு உதவித் தொகையுடன்—

   (குறிப்பு) அரசு உதவித் தொகை அல்லது அரசுக் கடன் அனுமதிக்கப்பட்ட ஆணையின் எண் மற்றும் தேதி இங்கு தரப்படவேண்டும்.

   (ஆ) ஊராட்சி அல்லது நகராட்சி நிதிகளிலிருந்து—
6. இன்னும் கட்டிக்கொடுக்கப்பட வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை:
7. ஊராட்சி / நகராட்சி மன்றம் / நகரியக் குழு, சொந்தத்தில் வீட்டு மனை வைத்திருக்கிறதா? அல்லது இக்காரியத்திற்கென பயன்படக்கூடிய முறையில், தன்னுடைய கட்டுப்பாட்டில் தகுதியான நிலம் வைத்திருக்கிறதா ?
8. இப்பொழுது கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கும் வீடுகளின் எண்ணிக்கை:
9. தேவைப்படும் உதவித்தொகை:
10. ஊராட்சி/நகராட்சி மன்ற தீர்மானத்தின் பிரதி இணைக்கப்பட்டுள்ளதா?

11. ஊராட்சி / நகராட்சி மன்றங்கள் வீடு கட்டும் செலவை, தன்னுடைய சொந்த நிதியிலிருந்து சரிக்கட்ட உத்தேசித்திருக்கிறதா? அல்லது அரசிடம் கடன் பெற உத்தேசித்திருக்கிறதா? கடன் தேவைப்படின் அதை தவணை முறையில் இன்னலில்லாமல் திருப்பிச் செலுத்த இயலுமா?

12. கட்டப்படவிருக்கிற இடத்தில் குடியேற துப்புரவு பணியாளர்கள் விரும்புகிறார்களா?

13. திட்டங்களும், மதிப்பீடுகளும், மனைகளும் தயாரிக்கப்பட்டு, அவற்றிற்கு சம்பந்தப்பட்ட அதிகாரியினுடைய அனுமதி கிடைத்துள்ளதா?

14. ஊராட்சி/நகராட்சி மன்றங்கள், உதவித் தொகை அனுமதித்த தேதியிலிருந்து, ஓர் ஆண்டிற்குள் வேலையை முடித்துவிட இயலுமா?

15. கடந்த மூன்று ஆண்டுகளின் வரவு, செலவு விவரங்கள் அடங்கிய அறிக்கை, மற்றும் நடப்பு ஆண்டின் நிதிநிலை மதிப்பீடுகளின் பிரதி ஒன்று இணைக்கப்பட வேண்டும்.

16. இதர விவரங்கள், குறிப்புகள்.

(உள் துறையின் 1967-ம் ஆண்டு நவம்பர் 4-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 5256-ன் சுருக்கம்.)

## சென்னை மாநகரிலுள்ள வங்கிகளிலும் கருவூலகங்களிலும் பணம் செலுத்துதல்—மூன்று நகல்களில் செலுத்துச் சீட்டு முறை—தமிழக அரசு கருவூல சட்டத் தொகுப்பு நூல் ஒன்று, இரண்டிற்கு திருத்தங்கள்.

## Remittances—Remittances of money into Treasuries and bank in Madras city—Triplicate chalan system—Amendment to the Madras Treasury Code, Volumes I and II—Regarding.

தமிழக அரசு கருவூலக சட்டத் தொகுப்பு நூல் ஒன்று, இரண்டிற்கு (Madras Treasury Code, Volumes I and II) கீழ்க்காணும் திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.

### திருத்தங்கள்

(1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி முடிய திருத்தி வெளிவிடப்பட்ட) தமிழக அரசு கருவூலக சட்டத் தொகுப்பு நூல் ஒன்றில் பக்கம் 39-ல் உள்ள கருவூலக விதி 10 (e)—

10 (e) என்ற துணை விதியில், இப்போதுள்ள விதித்துறைகளை (Provisions) நீக்கிவிட்டு, அவற்றிற்கு மாறாக, கீழ்க்கண்டவை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் :

10 (e) (i) : சென்னை மாநகரில் பணம் செலுத்தும் தனியார்கள், மூன்று நகல்கள் கொண்ட "செலுத்துச் சீட்டு" (Triplicate Chalan) உள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து, சம்பந்தப்பட்ட துறை அதிகாரியிடம் சோதனைக்காக அளிக்க வேண்டும். அந்த அதிகாரி, தமது கையெழுத்தையும், இரப்பர் முத்திரையையும் (Rubber stamp), செலுத்துச் சீட்டின் ஒவ்வொரு நகலிலும் இடுவார். அவை முறையே முதல் நகல், இரண்டாம் நகல், மூன்றும் நகல் செலுத்துச் சீட்டு என்பதாகும். அதன் பிறகு, செலுத்துச் சீட்டுகளை இந்திய ரிசர்வ் வங்கி (Reserve Bank of India)க்கு எடுத்துச் சென்றால், வங்கியில் தொகையைப் பெற்றதற்காக, முதல் சீட்டில் கையெழுத்திட்டு சம்பந்தப்பட்டவரிடம் அதைக் கொடுத்துவிடுவார்கள். இரண்டாவது, மூன்றுவது நகல்களான செலுத்துச் சீட்டுகளை சம்பளம், கணக்கு அதிகாரிக்கு (Pay & Accounts Officer) அனுப்பி வைக்கப்படும். சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு செலுத்துச் சீட்டின் மூன்றுவது நகலை, ஒவ்வொரு வாரமும் சம்பளம், கணக்கு அதிகாரி அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பார். துறைத் தலைவர்களுடைய செய்தியாள்கள் (Messengers) நேரிடையாக சென்று, மூன்றுவது நகலைக் கேட்கையில், அவர்களிடம் அந்தச் சீட்டுக்கள் அப்போதைக்கப்போது கொடுக்கப்படும். செலுத்துச் சீட்டின் இரண்டாம் நகலை சம்பளம், கணக்கு அதிகாரி, தமது அலுவலகத்தில் வைத்துக்கொள்வார். சென்னையிலுள்ள இந்திய ரிசர்வ் வங்கியில் பணம் செலுத்தக்கூடிய நிலையில், சென்னையிலே உள்ள துறைத் தலைவர்கள் இரண்டு நகல்கள் கொண்ட செலுத்துச் சீட்டின் வாயிலாக பணம் செலுத்தலாம். ஆனால், துணை விதி 10 (g) (i)-ல் உள்ள விலக்குகளுக்கு இது உட்பட்டதாகும்.

(ii) வெளியூர்களிலுள்ள கருவூலகங்களில் பணம் செலுத்தும் தனியார்கள், மூன்று நகல்கள் கொண்ட

செலுத்துச் சீட்டினுல் மட்டுமே பணம் செலுத்த வேண்டும். சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு செலுத்துச் சீட்டின் மூன்றுவது நகல்களை கருவூலகங்கள் அனுப்பி வைக்கும். வெளியூர்களிலுள்ள கருவூலகங்களில் பணம் செலுத்தும் துறைத் தலைவர்களும் கூட, மூன்று நகல்கள் உள்ள செலுத்துச் சீட்டின் வாயிலாகத்தான் பணம் செலுத்த வேண்டும்.

குறிப்பு 1.—கருவூலகங்களின் மூல ஆவணங்களிலிருந்து (Original record) வரவு சம்பந்தப்பட்ட விவரங்களை சரிபார்க்கும் முதல் பொறுப்பு கருவூலக அதிகாரியையே சாரும்.

குறிப்பு 2 :—ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமையன்று, கருவூலக, துணைக் கருவூலக அதிகாரிகள் செலுத்துச்சீட்டின் மூன்றுவது நகல்களை, துறைத் தலைவர்களுக்கு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பார்கள். செய்தியாள்கள் நேரிடையாகச் சென்று செலுத்துச் சீட்டின் மூன்றுவது நகலை கேட்கும்போது, வாரம் ஒரு தடவை கொடுப்பதற்குப் பதிலாக, அவ்வப்போது கேட்கும் போது கொடுக்கப்படும். செலுத்துச் சீட்டில் மூன்றுவது நகலை நேரிடையாகக் கேட்காவிடில், ஒவ்வொரு திங்கட்கிழமை தோறும் அஞ்சல் வாயிலாக அனுப்பிவைக்கப்படும்.

(நிதித் துறையின் 1967–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 23–ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 135623–ன் சுருக்கம்.)

* * * *

## இந்த இதழில்...


| | பக்கம் |
|---|---|
| பசி, பிணி, பகை அற்ற திருநாடே நமது இலட்சியம் (மேதகு தமிழக ஆளுநர் உரையின் சாரம்). | 1 |
| "உணவு உற்பத்தியில் புரட்சிகரமான முன்னேற்றம் காண்போம்" .. .. | 5 |
| "கடல் வளம் சிறக்க, தொழில் திறமையைப் பெருக்குவோம்" .. .. .. | 7 |
| தமிழகத்திலே பனைத் தொழில் .. .. | 9 |
| நெஞ்சை விட்டகலா நினைவுகள் .. .. | 17 |
| 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' .. | 21 |


## அடுத்த இதழில்...

**தமிழக அரசின் 1968-69-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கை, மாண்புமிகு முதலமைச்சரின் உரையின் முழு வடிவம்—விளக்கப் படங்களுடன்... சிறப்பிதழாக வெளிவரும்.**

மூன்றுவது அட்டைப்பட விளக்கம் :

படம் 1 : குடியரசு தினத்தன்று, மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அளித்த தேனீர் விருந்தில், மாண்புமிகு முதலமைச்சர், முன்னாள் முதல்வர் திரு பக்தவத்சலம், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு சி. சுப்பிரமணியம், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு எம். எம். இஸ்மாயில் ஆகியோர்.

படம் 2 : 29-1-68-ல், தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் சித்த மருத்துவ மருந்தகத்தை மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்கள் திறந்து வைத்தார்.

படம் 3 : சென்னை சட்டக்கல்லூரிக்கு எதிரில் அமைந்துள்ள கதர் கிராமக் கைத்தொழில் ஆயத்தின் "குறளகம்" என்னும் கட்டிடத்தை மாண்புமிகு முதலமைச்சரும், கதர் கைத்தொழில் அங்காடியை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரும், 14-1-68-ல் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி விழாவிற்குத் தலைமை வகித்தார்.

படம் 4 : சர்வோதய தினத்தை (30-1-68) ஒட்டி, சென்னைக் கடற்கரையில், காந்தி சிலை அருகில் நூல் நூற்பு பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது.


வெளியிடுபவர் :
திரு வி. நடராஜன், ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர் :
திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9. Wrapper printed at Vadapalani Press, Madras-26.




குடியரசு தின விழா—மேதகு தமிழக ஆளுநர் அளித்த தேனீர் விருந்தில் . . .




கோட்டையில் சித்த மருத்துவ மனைத் திறப்பு
<—விழா




“குறளகம்”—கதர் கைத் தொழில் அங்காடி—திறப்பு விழா



சர்வோதய தினம்—நூல் நூற்பும் பிரார்த்தனைக் கூட்டமும் . . .

REGD. NO. M. 7277
©
தமிழ்நாடு அரசாங்கம் 1968

# "வையத்தின் புதுநிலவே! வாழ்வுக்கோர் புத்தமுதே"!!

## பழைய மரபும் புதிய திறனும்

ஒன்று திரண்ட நமது கிராமக் கைத் தொழில் பண்டங்கள் தமிழகத்துக் கைவினைக் கலைஞர்களின் தொழில் நுட்பத் திறனை, உலகம் அறியப் பறை சாற்றி, நமது நாட்டின் நற்புகழை வளர்க்கின்றன.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தித்திக்கும் தீந்தமிழைப்பற்றி தீட்டிய மேற் சொன்ன சொல்லோவியம், நமது கிராமக் கைத் தொழில்களுக்கும் அப்படியே பொருந்தும்.



## குறளகம்



EMPORIUM OF RURAL PRODUCTS
KHADI & VILLAGE INDUSTRIES BOARD.
MADRAS . STATE.

**தமிழகக் கிராம கைத்தொழில் ஆயம்**

* 14-1-68-ல் தமிழக முதலமைச்சர் திரு. அண்ணுதுரை அவர்கள் குறளகத்தை திறந்து வைத்தார்.
* தமிழகக் கிராம கைத்தொழில் உற்பத்திப் பொருள்களின் விற்பனைக் கூடம்.
* மக்கள் வாழ்வின் அன்றாடத் தேவைகளுக்கான பல்வேறு பொருள்களையும், நமது கிராமங்களிலேயே தயாரித்து, ஏழை எளிய மக்களின் பொருளாதார நல் வாழ்விற்கு வழி கோலுகிறது.

இடம்: சென்னை சட்டக் கல்லூரிக்கு அருகே